SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:5, Issue:03, Pages:56
OCTOBER-2025, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

அக்டோபர் 2025,
விலை ரூ.20/-



திருமலையப்ப ஸ்வாமி புஷ்பயாகம்
30-10-2025












திரு. அனில் குமார் சிங்கால் ஐ.ஏ.எஸ்., அவர்கள் இரண்டாவது முறையாக தி.தி.தே. செயலாட்சித் தலைவராக 10.09.2025 அன்று பொறுப்பேற்றார். முன்னதாக, திருமலை ஆலயத்திலுள்ள ரங்கநாயக மண்டபத்தில், திரு. அனில் குமார் சிங்கால் ஐ.ஏ.எஸ்., அவர்கள் பாரம்பரியப்படி, திரு. ஜெ.சியாமளா ராவ், ஐ.ஏ.எஸ். அவர்களிடமிருந்து தி.தி.தே. நிர்வாகப் பொறுப்பினை ஏற்றுக்கெண்டார். பின்னர் திருவேங்கடமுடையானின் முன்னிலையில் தி.தி.தே. புதிய செயலாட்சித்தலைவராகவும், பொறுப்பாண்மைக் குழுவில் பதவி அடிப்படையில் உறுப்பினராகவும் பதவி ஏற்றுக்கொண்டார். திருவேங்கடமுடையானைத் தரிசித்தப்பிறகு, தி.தி.தே. செயலாட்சித்தலைவருக்கு வேத ஆசீர்வாதமும், தீர்த்தப் பிரசாதங்களும் வழங்கப்பட்டன. அதைத் தொடர்ந்து திருவேங்கடமுடையானின் சித்திரப்படமும் வழங்கப்பட்டது. அதுபோது தி.தி.தே. கூடுதல் செயலாட்சித் தலைவர், இணைச்செயலாட்சித்தலைவர், தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர், பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்கள் மற்றும் முக்கிய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

மே 2017 முதல் அக்டோபர் 2020 வரை தி.தி.தே. செயலாட்சித் தலைவராக இருந்த அவரது முந்தைய பதவிக்காலத்தில், அவர் பல மேம்பாட்டுப் பணிகளை உருவாக்கி பக்தர்களுக்கு பல வசதிகளை ஏற்படுத்தினார். நேர ஒதுக்கீடு தரிசன டோக்கன் முறையைத் துவக்கி வைத்தார். மேலும் தி.தி.தே.விற்கு உட்பட்ட இதர ஆலயங்களிலும் பல சீர்த்திருத்தங்களை மேற்கொண்டார்.

திரு. அனில் குமார் சிங்கால் ஐ.ஏ.எஸ். அவர்கள் ஸப்தகிரி இதழின் கௌரவ ஆசிரியராகவும் இருப்பார். “ஸப்தகிரி” இதழ் அவரை மனம் உவந்து வரவேற்பதோடு, அவரது அனைத்து முயற்சிகளும் மேன்மேலும் வெற்றி பெற வாழ்த்துகிறது.












ஜூன் 2024 முதல் செப்டம்பர் 2025 வரை தி.தி.தே. செயலாட்சித் தலைவராகப் பணியாற்றிய திரு ஜெ.சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். அவர்கள் 09.09.2025 அன்று திருப்பதியில் தி.தி.தே. நிர்வாகக் கட்டிடத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்ற வழியனுப்பு விழாவில் பாராட்டப்பட்டார். அவரது பதவிக் காலத்தில் தொலைநோக்குப் பார்வையுடன் பல திட்டங்கள் கொண்டு வரப்பட்டது. லட்டின் தரத்தை மேம்படுத்துதல், அன்னப்பிரசாதம், கருத்து சேகரிப்பு, திடக்கழிவு மேலாண்மை, திருமலையில் உள்ள லட்டு கௌண்டர்களில் கியோஸிக் இயந்திரங்களை அறிமுகப்படுத்தியது உள்ளிட்ட பல திட்டங்களை அவர் நெறிப்படுத்தினார். இப்போது அவர் ஆந்திர மாநில அரசு பொது நிர்வாகத் துறையின் (அரசியல்) முதன்மைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.


இந்நிகழ்ச்சியில் தி.தி.தே. கூடுதல் செயலாட்சித் தலைவர், இணைச்செயலாட்சித்தலைவர், தலைமை பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு அதிகாரி, நிதி ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அதிகாரி மற்றும் முக்கிய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

*ஆச்சர்யவத்பச்யதி கச்சிதே$_3$நம்*
*ஆச்சர்யவத்$_3$வத$_3$தி ததை$_2$வ சாந்ய:|*
*ஆச்சர்யவச்சைநமந்ய: ச்ருணோதி*
*ச்ருத்வாப்யேநம் வேத$_3$ ந சைவ கச்சித்||*



யாரோ ஒரு மகாபுருஷன்தான் இந்த ஆத்மாவை ஆச்சரியமாகப் பார்க்கிறான். மேலும், அவ்வாறே வேறு ஒரு மகாபுருஷன்தான் இந்தத் தத்துவத்தை ஆச்சரியமாக வர்ணிக்கிறான். மற்றும் வேறொரு தகுதி பெற்றவன்தான் ஆத்மாவை ஆச்சரியமாகக் கேட்கிறான். மேலும், யாராவது ஒருவன் அப்படிக் கேட்டாலும் ஆத்மாவை அறியவே மாட்டான்.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–29*



*கடன்மல்லைக் காவலனே பூத வேந்தே*
*காசினிமே லைப்பசியி லவிட்ட நாள்வந்*
*திடர்கடியுந் தண்கோவ லிடைக ழிச்சென்*
*றிணையில்லா மூவருமா யிசைந்தே நிற்க*
*நடுவிலிவ ரொருவருமென் றறியா வண்ண*
*நள்ளிருளின் மானெருக்க நந்தா ஞானச்*
*சுடர்விளக்கேற் றியவன்பே தகளி யான*
*தொடைநூறு மெனக்கருள்செய் துலங்க நீயே.*

*திருக்கடன்மல்லைக்கு நாதனே! பூதத்தாழ்வார் என்னும் ஸ்வாமியே! இப்பூவுலகின் கண் ஐப்பசி மாதத்தில், அவிட்டமென்னும் திருநக்ஷத்ரத்தில் அவதரித்து, (வசிப்பவரின்) துன்பத்தைப் போக்கவல்ல குளிர்ந்த திருக்கோவலூரில் (ஒரு திருமாளிகையின்) இடைகழியிற் சென்று, ஒப்பற்ற (நீங்கள்) மூவரும், ஒன்றுகூடி நிற்கும்போது மிக்க இருளில் (இவர்களின்) நடுவில் ஒருவரும் இன்னார் என்று அறியாதவாறு எம்பெருமான் (வந்துகூடி) நெருக்க (அவனைக்காணும்பொருட்டு), அழியாத ஜ்ஞாநமாகிய ப்ரகாசம் நிறைந்த தீபத்தை ஏற்றிய, “அன்பே தகளியா” என்று தொடங்கிய (இரண்டாம் திருவந்தாதியாகிய) நூறு பாசுரங்களையும் நீ எனக்கு விளங்குமாறு அநுக்ரஹிப்பாயாக.*

*– ஸ்வாமி வேதாந்த தேசிகர்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஶ்ரீபாலாஜி அறுவை சிகிச்சை, ஆராய்ச்சி மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு மையம் [பர்ட்]

## BIRRD









- போலியோ மெல்லிடஸ், பெருமூளை வாதம், பிறவிக் கோளாறுகள், முதுகுத்தண்டு காயங்கள் மற்றும் எலும்பு சம்மந்தமான மூட்டு சிதைவு நோயாளிகளுக்கு முழுமையான இலவசமாக சேவைகளை வழுங்குவதற்காக அதி நவீன மருத்துவ உபகரணங்களுடன் பர்ட் மருத்துவமனை நிறுவப்பட்டது.
- மக்கள் சேவையே மாதவ சேவை என்பதை கருத்தில் கொண்டு நோயாளிகளுக்கு மனிதாபிமான கண்ணோட்டத்துடன் இம்மருத்துவ மனைக்கு உங்கள் பங்களிப்பினை நன்கொடையாக வழங்கிடுங்கள்.
- நன்கொடைகளுக்கு வருமான வரிச்சட்டம் 80(ஜி) ன்படி வரி விலக்கும் உண்டு.

காசோலை/ வரைவோலையை "செயலாட்சித் தலைவர், தி.தி.தே." எனும் பெயரில் எடுத்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உதவி செயலாட்சித் தலைவர்
(நன்கொடைப் பிரிவு),
ஒருங்கிணைந்த நன்கொடையாளர்
நிர்வாக மையம்,
ஆதிசேஷ ஓய்வு இல்லம்,
கூடுதல் செயலாட்சித் தலைவர்
முகாம் அலுவலகம் அருகில்,
திருமலை,
தொ.எண் : 0877-2263472.

இயக்குனர், பர்ட் அறக்கட்டளை,
தி.தி.தே. திருப்பதி – 517 501.
தொ.எண். 0877-2264025, 2264619.

| | | |
|---|---|---|
| இணையதளம் | : | www.tirumala.org |
| மின்னஞ்சல் | : | officebirrd@gmail.com |
| மொபைல் செயலி | : | BIRRD HOSPITAL |

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

அக்டோபர் 2025 மலர் 05 இதழ் 03





## உள்ளுறை

பக்கம்

திருமலையப்பனின் திருத்தேர் திருவிழா -திரு.அ.ஜ.ரங்கராஜன், சென்னை. 7
ஒளிமயமான தீபாவளி - திருமதி ராஜலக்ஷ்மி, கேரளா. 10
வேங்கடேசகவி போற்றும் திருவேங்கடம் 14
-காயார் கோமடம் சேஷாத்ரிதாஸன், காஞ்சிபுரம்.
நம்மாழ்வாரின் அருள் இருந்தால் மலையப்பனின் அருள் கிடைக்கும் 17
-பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி.
கந்த சஷ்டி பெருவிழா -முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை. 20
செல்வ வளம் அளித்திடும் திருமணத் தலம் -திரு.ப.சரவணன், குடந்தை. 22
ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். 24
ஸ்ரீவெங்கடரமணப் பெருமாள் திருக்கோயில், பொள்ளாச்சி 26
- டாக்டர் கி.ஜ.நிகிலா வெங்கட், கோவை.
ஆழ்வார்கள் பாசுரங்களில் மலர்களின் மகத்துவம் 31
– திரு.சதா. ஸ்ரீஹரிஹரன், கும்பகோணம்.
நம்மாழ்வார் விரும்பும் திருவேங்கடம் 33
- டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி.
முதலாழ்வார்கள் காட்டிய திருவேங்கடம் 35
- திருமதி நளினி சம்பத்குமார், சென்னை.
108 திவ்வியதேச வைபவம் : திருவேங்கடம் 38
- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.
மணவாள மாமுனிகளின் கிருஷ்ணானுபவம் 40
- திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன், சென்னை.
துலா மாதத்தில் காவிரி நீராடல் - திரு.டி.ஆர்.பரிமளரெங்கன், திருச்சி. 43
அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் 44
உரையும்:எம்பார் -ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,சென்னை.
ராசிபலன்கள் : அக்டோபர் 2025 - டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். 47
நீதிக்கதை: அறையை நிரப்புவது யார்? 48
–திரு.இரா. அருண்குமார், புதுச்சேரி.
சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி 49
சித்திரக்கதை : குருவினை கௌரவிப்போம் 52

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : உபயதேவியருடன் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.
பின்னட்டை : ஸ்ரீமணவாள மாமுனிகள்
(சித்திரம் – திரு.எம்.இ.ருத்ரமூர்த்தி)

சிறப்பு ஆசிரியர் :
திரு. அனில்குமார் சிங்ஹால், ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-ஆசிரியர்.
பிரதான ஆசிரியர் (கூடுதல் பொறுப்பு) :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
பி.ஜி.டிப்.இன் ஜே.எம்.சி.,
அச்சிடுபவர் :
திரு. R.V. விஜயகுமார், பி.ஏ., பி.இடி.,
துணை செயலாட்சித் தலைவர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா

பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press
Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
பிரதான ஆசிரியர் : 2264363

நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்
-பிரதான ஆசிரியர்

உங்களுடன்

# திருமகள் கேள்வனும் தீபாவளிப் பண்டிகையும்

புனிதமான நமது பாரதபூமியில் கொண்டாடப்படும் வருடாந்திரப் பண்டிகைகள் மக்களுக்கிடையில் அன்பு, சகோதரத்துவம் ஆகியவற்றை வளர்ப்பதுடன், ஆன்மீகப் புத்துணர்வுக்கும் காரணமாக விளங்குகின்றன.

தெய்வங்களின் அவதார திதிகளாகிய ஸ்ரீராமநவமி, கோகுலாஷ்டமி, விநாயக சதுர்த்தி போன்ற திருநாட்களைப் போல, சங்கராந்தி, நவராத்திரி, தீபாவளி ஆகிய பண்டிகைகளும் பாரத தேசத்தவர்களால் மிகவும் உற்சாகமாகக் கொண்டாடப்படுகின்றன. குறிப்பாக, தீபங்களின் வரிசை என்று பொருள்படும் தீபாவளித் திருநாளிலும், திருக்கார்த்திகை நன்னாளிலும் நமது இல்லங்கள் தீபங்களால் அலங்கரிக்கப்படுகின்றன. ஓர் இடத்தில் குவிந்துள்ள இருளானது தீபம் ஒன்று ஏற்றப்பட்டவுடன் அகன்றுவிடுகின்றது. அதனால், அவ்விடமே ஒளிமயமாக மாறுகின்றது.

சான்றோர்களாகிய நம் முன்னோர்கள், புற இருளை அகற்றப்படுவதைப் போன்றே நம் ஒவ்வொருவரின் அக இருளாகிய அறியாமையும் நீக்கப்பட்டு நமது உள்ளங்கள் ஞானச்சுடரொளியால் பிரகாசிக்க வேண்டும் என்று விரும்பினர். அவ்வாறு அக இருளை நீக்கி ஞான சுடர் விளக்கை ஏற்றுகின்ற சக்தி குருவிற்கே உண்டு. குரு என்ற சொல்லின் முதல் எழுத்தாகிய “கு” இருள் என்று பொருள்படும். இரண்டாம் எழுத்தாகிய “ரு” அவ்விருளை அகற்றுவதைக் குறிக்கின்றது. எனவேதான், நம் அக இருளை நீக்குகின்ற ஆசாரியர்களை குரு என்று அழைக்கின்றோம்.

ஸ்ரீவைஷ்ணவர்களைப் பொறுத்தவரையில், ஜீவாத்மாக்களின் அக இருளைப் போக்குகின்ற குரு பரம்பரை வரிசையானது எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனிடத்தே இருந்து தொடங்கி இன்றுள்ள ஆசார்யர்கள் வரையில் வளர்ந்து வருகின்றது. இன்னமும் வளர இருக்கின்றது.

“லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாத யாமுந மத்யமாம், அஸ்மத் ஆசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்” என்னும் சுலோகத்தில் உள்ளபடி ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரையின் ஆதிகுரு எம்பெருமானே ஆவார். அவரே ஸ்ரீகிருஷ்ண அவதாரத்தில் அர்ஜுனனை முன்னிலையாகக் கொண்டு இவ்வுலகில் பிறக்கின்ற ஜீவாத்மாக்கள் அனைவரின் அக இருளையும் அகற்றுகின்ற ஒளிவிளக்காகிய ஸ்ரீமத்பகவத்கீதையை உபதேசித்து அருளினார். எம்பெருமானின் உபதேசம் மட்டுமே ஒளிவிளக்கன்று. உபதேசம் பண்ணும் எம்பெருமானும் சோதிவடிவே.

இதனால்தான் ஸ்ரீநம்மாழ்வாரும், “தெழிகுரல் அருவித் திருவேங்கடத்து எழில்கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கே” என்று நம் திருவேங்கடமுடையானை எழில்மிகுந்த சோதிச் சுடராகவே போற்றி வணங்குகின்றார். சுவாமி வேதாந்ததேசிகரும் காஞ்சீபுரம் தூப்புல் திவ்யதேசத்தில் அருள்பாலிக்கும் ஸ்ரீதீபப்பிரகாசர் என்னும் ஸ்ரீவிளக்கொளிப்பெருமாளைப் போற்றித் தாம் இயற்றிய “சரணாகதி தீபிகை” என்னும் ஸ்தோத்திரத்தில் “தீபஸ்த்வமேவ ஜகதாம் தயிதா ருசிஸ்தே தீர்கம் தம: ப்ரதிநிவர்த்யம் இதம் யுவாப்யாம்” என்று பாடுகின்றார். எம்பெருமான் ஸ்ரீதீபப்பிரகாசரே! நீரே இந்த உலகத்திற்கு ஒளி விளக்காகத் திகழ்கின்றீர். அந்த விளக்கிலிருந்து சுடர்விடும் பிரகாசமாக உம்முடைய தேவியாகிய ஸ்ரீமகாலட்சுமித்தாயார் விளங்குகின்றார். இவ்வுலகினிடம் நெடுங்காலமாக இருக்கின்ற அஞ்ஞானமாகிய இருள் உங்கள் சேர்த்தியால் மட்டுமே நீங்கக்கூடியதாக உள்ளது என்று சுவாமி வேதாந்ததேசிகர் அருளிய இவ்வரிகள் குறிப்பிடுகின்றன.

புற இருளைப் போக்குகின்ற தீபங்களின் வரிசையானது தீபாவளித் திருநாளன்று ஒளிர்கின்றது. நமது அக இருளைப் போக்குகின்ற ஞானதீபங்களாகிய ஆசாரியர்களின் வரிசையாகிய ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரையோ பல்லாயிரம் ஆண்டுகளாக இடைவெளியின்றி ஒளிவீசி வருகின்றது. இனிவரும் காலங்களிலும் ஒளிவீச இருக்கின்றது.

உலகமெங்கும் மகிழ்ச்சி பொங்குகின்ற இத்தீபாவளித் திருநாளில் சோதி வடிவமாக விளங்கும் நம் திருவேங்கடமுடையானையும், ஸ்ரீமகாலட்சுமித் தாயாரையும், நமக்கெல்லாம் பஞ்ச சம்ஸ்காரம் செய்து, திருவெட்டெழுத்தையும் உபதேசித்து நம்மை உய்விக்கின்ற ஞானச்சுடர்களாகிய ஆசாரியபுருஷர்களையும் அடிபணிந்து உய்வோமாக!



# திருமலையப்பனின் திருத்தேர் திருவிழா

–திரு.அ.ஐ.ரங்கராஜன், சென்னை,
94451 05470.

திருமலை திருவேங்கடமுடையானின் பிரம்மோத்சவ நிகழ்வில், 01.10.2025 புதன்கிழமையன்று திருத்தேர் உத்சவம் நடைபெறும். தேரை இழுக்க ஏராளமான பக்தர்கள் திருமலையில் கூடுவர். இத்திருவிழாவை மிகவும் தெய்வீக முறையில் நடத்த ஒவ்வொருவரும் பெரும் ஆர்வத்தையும் அக்கறையையும் பங்களிப்பையும் செய்திடுவர்.

பெரிய திருமொழியில் திருமங்கை ஆழ்வாரின் *''பார்த்தன் தன் தேர் முன் நின்றானை''* என்ற வரிகள் இங்கே குறிப்பிடத்தக்கது. அனைத்து கோயில்களிலும் திருத்தேர் உற்சவம் பிரம்மாண்டமாக நடத்தப்படும். திருத்தேரினை வழிபடுவது ஒருவித விரதமாகவும், பிரார்த்தனையாகவும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ஸ்ரீகிருஷ்ணர் அத்தகைய தேரின் சாரதியாக இருந்து ஸ்ரீமத்பகவத் கீதையை வழங்கினார். ஸ்ரீமந்நாராயணனே குருக்ஷேத்திரப் போரில் கீதோபநிஷத்தைப் பிரசங்கிக்க தேரினையே தேர்ந்தெடுத்துள்ளார்.

*''ஸேனையோர் உபயோர்மத்யே ரதம் ஸ்தாபய மே அச்யுத''* என்று அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணரிடம் வேண்டினான். நன்மை தீமைகளை வேறுபடுத்திப் பார்க்க, தர்மம் மற்றும் அதர்மத்தைக் காட்டிட போர்க்களத்தின் நடுவில் தேர் வைக்கப்பட்டது என்பது அறியப்படுகிறது. எனவே முதலில் சரியான பாதையைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு நமக்கு வழங்கப்படுகிறது. பின்னர் நாம் அவர் முன் முழுமையாகச் சரணடைந்து அவரது ஆசிகளைப் பெற வேண்டும்.

திருத்தேருக்குப் பிறகு, ராஜகோபுரம், துவஜஸ்தம்பம் மற்றும் மூல விமானம் ஆகியவற்றைக் காண விரும்புகிறோம். மேலும், பிரம்மோத்சவத்தில் திருத்தேர் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது, அதனால்தான் “தேரோட போச்சு திருநாள்” (திருத்தேர் உற்சவம் என்பது கொண்டாட்டங்களின் முடிவு) என்ற பழமொழி பின்பற்றப்படுகிறது.

திருத்தேரினை இழுக்கும்போது, “கோவிந்தா, ராமா, கிருஷ்ணா, கேசவா, மாதவா...” போன்ற நாமங்கள் உச்சரித்து அவரது ஆசிகளைப் பெறமுடிகிறது. திருத்தேரினை இழுக்கும் போது, நம் முழு மனதுடனும், இதயத்துடனும், ஆன்மா உடனும் சரணடைந்தால், நாம் மிகுந்த மகிழ்ச்சியை உணருவோம்.



நாமஜபம் செய்யப்படுவதால், நாம் நிச்சயமாக மிகுந்த மகிழ்ச்சியை உணருவோம். ஆழ்வார்களின் திவ்ய பிரபந்த பாசுரங்களை ஸ்ரீ வைஷ்ணவர்கள் மதுரமான குரலில் பாராயணம் செய்து கொண்டு வருவதைக் கேட்கும் போது நம்மை அறியாமலேயே நம்மில் ஒரு தெய்வீக அலை வீசிடுவதை அறியலாம்.

திருமலையப்ப ஸ்வாமி திருத்தேரில் பவனி வரும்போது பெரிய திருமொழி மூன்றாம் பத்தில் மூன்றாவது திருமொழியில் இருக்கக் கூடிய *“வாட மருதிடை போகி மன்ன...''* எனத் தொடங்கும் பாசுரத்தை ஆரம்பிப்பர். திருத்தேர் பவனி எவ்வளவு நேரம் ஆகின்றதோ அவ்வளவு நேரமும் பெரிய திருமொழி முழுவதும் சேவிக்கப்படும்.

தெய்வீக நாமங்களை ரசிக்க இது ஒரு சிறந்த அனுபவம். வைஷ்ணவர்கள் பாரம்பரிய உடையில் ஸ்ரீமந்நாராயணனை முழுமையாக சரண் அடைந்து, இப்பாராயணத்தைச் செய்கிறார்கள். அனைத்து பக்தர்களும் இந்த கோஷ்டியின் முன் சாஷ்டாங்க மாக வணங்குவதில் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

காஞ்சி மஹா பெரியவர் ஒரு நிலக்கிழாரிடம் ஒரு முறை “தேர்வடம் இழுத்துவிட்டு பிறகு உங்கள் பணியைத் தொடருங்கள். எல்லாம் நன்றாக முடியும்” என ஆசீர்வதித்தாராம். பின்னர் மூன்று மாதங்களில் புன்னகையுடன் பெரியவரை சந்தித்து தர்மம் தோற்காது. தேர் இழுத்தால் தோல்வி இருக்காது என்றாராம் நிலக்கிழார். தேர் ஒரு நடமாடும் ஆலயம். அத்தேரினை முடிந்தவர்கள் இழுத்து மகிழலாம். முதியவர்கள், நோயாளிகள், மாற்றுத்திறனாளிகள் ஆலயத்துக்குச் சென்று தரிசிக்க இயலாதவர்கள் தேர்த்திருவிழாவில் தரிசிக்கலாம். மனம் மகிழப் பிரார்த்தனை செய்யலாம்.

இராமாயண காவியத்திற்கும் இரதத்திற்கும் தொடர்பு உண்டு. அதாவது இராமபிரான் பட்டா பிஷேகம் அடுத்த நாள் என்றாலும் அதனையே வரம் என்ற கோணத்தில் மாற்றிடச் செய்தது. அந்த வரத்திற்கு வித்திட்டது ரதம். இந்திரனுக்கும் தசரத னுக்கும் எதிரியான சம்ஹாசுரனுடன் நடந்த யுத்தத் தில் நடுவே தசரதனின் தேர்ச் சக்கரம் பழுதாகியது.

இதனால் சம்ஹாசுரனின் அம்பு தசரதனின் மார்பு மீது துளைத்தது. அப்போது கைகேயி தைரி யத்துடன் சமாளித்து ரதத்தின் சக்கரத்தை பழுது பார்த்து சீர் செய்தாள். தொடர்ந்து அந்த யுத்த களத்துக்கும் சென்றாள். மேலும், தசரதனுக்கு ஏற்பட்ட காயத்துக்கு உரிய சிகிச்சை மேற்கொண் டாள். அப்போது கைகேயின் தைரிய செயலுக்காக வும் பரிவுடன் செய்த பணிவிடைகளுக்காகவும் தசரதன் மிகவும் ஆனந்தப்பட்டார்.

அத்துடன் இந்தச் செயலுக்கு நன்றி கூறும் வகையில் கைகேயிக்கு இரண்டு வரம் உடன் தரவே அதனால் பட்டாபிஷேகம் மாற்றம் தந்ததே. ஸ்ரீராம பிரானின் சீரிய குணங்களை முழுஅளவில் அறிய முடிந்தது அல்லவா.அதனால் திருத்தேர் உத்சவம் என்பது எதனையும் மாற்றி என்றும் நல்லவை களுக்கு இடம் பெற வாய்ப்பு ஏற்படுத்தும்.



**எங்கள் அன்பான ஸப்தகிரி வாசகர்களுக்கும்,**
**முகவர்களுக்கும்,**
**எழுத்தாளர் பெருமக்களுக்கும் உளங்கனிந்த இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்!**
**தீப திருநாளாம் தீபாவளியில் இல்லங்கள்தோறும் தீபங்கள் ஏற்றி அந்த புற இருளுடன் அக இருளும் நீங்கிட அந்த திருவேங்கடவன் திருவருள் தங்களுக்குப் பரிபூரணமாகக் கிடைக்கட்டும்.**

**– பிரதான ஆசிரியர்**



# குறுக்கெழுத்துப் புதிர் -111

## இடமிருந்து வலம்


01. ... (3) எங்கள் குலமாதா.
04. குளிர்ச்சிக்கு அடையாளமாகத் திகழ்பவர் ...(5)
07. ... (4) தலை காக்கும்.
11. ... (8) ஒரு இராகம்.
17. ஸ்ரீகிருஷ்ணர் பிறந்த திதி ...(4)

## வலமிருந்து இடம்

03. ...(7) சேவிக்க வேண்டும்.
06. ...(6) செய்திடல் வேண்டும்.
09. கன்னட ஹரி தாசர்களின் பக்தி பற்றிக் கூறும் நூல்...(8)

## மேலிருந்து கீழ்

01. ஆண்டாள் பற்றி வேதாந்த தேசிகர் பாடியது ...(5)
02. மன அமைதிக்கு தினசரி ...(4) பத்து நிமிடம் செய்யலாம்.
04. கல்விக்கு அதிதேவதையாக வணங்கப்படும் தேவி...(5)
05. தசாவதாரத்தில் திருமால் எடுத்த மீன் வடிவம் ...(8)
07. திருமலையில் வைகுந்த ஏகாதசியன்று திருமலையப்பன் பவனி வருவது...(9)
11. குழந்தைச் செல்வம் அருளும் தேவி...(8)
12. பாரத நாட்டின் மிகப்பெரிய இதிகாசம்...(5)
13. வைகுந்த ஏகாதசி அன்று...(8) திறப்பார்கள்.
14. இராமதூதன்...(4).
15. ஒரு சுபகிரகம். ஞானம் ...(3) தருபவன்.
16. கைகேயின் வரத்தால் ஸ்ரீராமர் ...(4) சென்றார்.



தொகுப்பு : திரு.எம். ராஜன், காட்டுபாக்கம், சென்னை.

புதிருக்கு விடை அறிய 45ம் பக்கம் பார்க்கவும்...

## கீழிருந்து மேல்

8. விபீஷணன் ஸ்ரீராமரிடம்...(5) அடைந்தான்.
9. ...(5) நிகரற்றது.
10. நேபாளத்தில் அமைந்துள்ள திவ்ய தேசம்...(7)
14. அள்ளஅள்ள குறையாதது...(6)
18. தாமிரபரணி நதிக்கரையில் அமைந்துள்ள வைணவ ஆலயங்களை ...(7) கள் என்பர்
19. கண்ணப்ப நாயனாரின் இயற்பெயர்..(6) .

திருமலை திவ்ய திருத்தலத்தில் கோவிந்தன் குடிகொண்டு இருப்பதால் எந்நேரமும் கோவிந்த நாம ஸ்மரணை செய்தல் வேண்டும். அதே போன்று அனைவரையும் "கோவிந்தா " என்றே அழைத்திடுங்கள்.





# ஒளிமயமான தீபாவளி

– திருமதி ராஜலக்ஷ்மி,
கேரளா,
9946128102.

தீபாவளி பண்டிகை இந்திய மக்கள் பல விதமாகக் கொண்டாடி வருகிறார்கள். கண்ணன் வாழ்ந்த காலத்தில் நரகாசுரன் ப்ராகஜோதிஷபுரம் என்ற இடத்தை ஆண்டு வந்தான். மக்களையும், தேவர்களையும், பெண்களையும் துன்புறுத்தினான். இவனை சத்யபாமா சமேத கண்ணன் அழித்தார்.

நரகாசுரன் இறக்கும் தருவாயில், தான் செய்த கொடுமைகளை எண்ணி வருந்தி, மக்கள் இந்நாளை ஒரு மகிழும் நாளாகக் கொண்டாட வேண்டும் என்று வேண்டினான். வங்காளத்தில், காளி ரக்த பீஜன் என்ற அரக்கனைக் கொன்று, தீமைகளை அழித்த நாளாகவும் கொண்டாடுகிறார்கள். கர்நாடகாவில், “பலி பாதயாமி” என்று மஹாபலி பாதாள லோகத்திலிருந்து பூமிக்கு வந்த நாளாகக் கொண்டாடுகிறார்கள். வட இந்தியாவில் “லட்சுமி பூஜை” நடைபெறும். மஹாலக்ஷ்மியை வேண்டி இந்திரன் தான் இழந்த செல்வதை மீண்டும் பெற்றான். சிலர், தெற்கு நோக்கி விளக்கு ஏற்றி எம தர்மராஜாவை வழிபடுவார்கள். பஞ்சாபில், அறு வடைத் திருநாளாகவும் கொண்டாடுவார்கள். எப்படி பார்த்தாலும் தீபாவளி சுபிக்ஷம் மற்றும் ஒரு தீயதை அழித்து நல்லது நடக்கும் நாளாகவே ஜொலிக்கிறது.

முன்பெல்லாம் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள். எந்த ஒரு பண்டிகையும் அதனுடைய தத்துவம், முக்கியத்துவம், கொண்டாடும் வழி முறைகள் எல்லாம் வீட்டிலிருக்கும் பெரியோர்கள் சொல்லிக் கொடுப்பார்கள். இப்போது சிறு குடும்பங்களாக வாழ்ந்து வருகிறார்கள். இதனால் சற்று சாஸ்திர சம்பிரதாயங்கள் அவ்வளவாகக் கடை பிடிக்க மாட்டார்கள். இருப்பினும், சில வீடுகளில், இன்றும் பழமை மாறாமல் பண்டிகைகளை கொண்டாடுகிறார்கள்.

தீபாவளிக்கு முந்தைய தினத்தன்றே, வீடுகளை சுத்தப்படுத்தி, விளக்கேற்றி வைப்பதுண்டு. சிறுவர்கள் பட்டாசு மத்தாப்புக்களை ஏற்றி மகிழ்வார்கள். முந்தைய இரவே, புதிய துணிமணிகளை மஞ்சள் குங்குமம் இட்டு பூஜை அறையில் ஒரு தட்டில் வைப்பது வழக்கம். சிலர், காசுகள், நகைகள், ரூபாய் நோட்டுகள், வெள்ளி சாமான்கள், மஞ்சள், வெற்றிலை, பாக்கு, பழம் போன்றவற்றை பூஜை அறையில் வைப்பார்கள்.

வீட்டில் பக்ஷணங்கள் செய்வதே ஸ்ரேஷ்டம். தீபாவளி மருந்து (இஞ்சி, மிளகு, சுக்கு, வெல்லம், நெய், தேன், ஏலக்காய்) சேர்த்து அரைத்து சமைத்து வைப்பார்கள். நல்லெண்ணெய் சிறிது மிளகு அல்லது மிளகாய் போட்டு லேசாக சூடாக்கி வைப்பார்கள்.

விடியற்காலையில் எழுந்து, தலைக்கு நல்லெண்ணெயை வீட்டில் உள்ள பெரியவர்கள் சிறியவர்களின் தலை உச்சியில் தேய்த்து, மஞ்சள் கிழங்கு வைத்து நெற்றியில் தேய்த்து நீராடுவர். வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு தடவி சாப்பிடுவது சில வீட்டில் வழக்கம். பின்னர், சீயக்காய்ப் பொடி தடவி தலை குளிப்பது வழக்கம். இப்போதெல்லாம் காலையில் எழுவதே சிரமமாக இருப்பது தெரியவருகிறது. ஆனால், அது நல்லதல்ல.

அன்று, கங்கா தேவி எல்லா நீரிலும் ஆவிர் பவிப்பாள் என்பது ஐதீகம். அதனால்தான் “கங்கா ஸ்னானம்” ஆச்சா? என்பது தீபாவளி குளியலுக்குப் பொருந்தும். இக்காலத்தில், கங்கா நீர் பாட்டில்

களில் விற்கப்படுகிறது, சிலர் அந்தத் தண்ணீர் விட்டு குளிப்பதும் தெரியவருகிறது. வீட்டில் அந்தப் புனித நீரைத் தெளிப்பார்கள். நாதஸ்வரம் வாத்தியம் காலையில் கேட்பது சிறந்தது. சில ஊர்களில், நாதஸ்வர வித்வான்கள், வீட்டிற்கே வந்து வாசிப்பார்கள்.

பின்னர், புத்தாடை அணிந்து, விளக்கேற்றி, பூஜை ஆராதனை செய்து, பக்ஷணங்களை நிவேதனம் செய்வது வழக்கம். தீபாவளி மருந்தும் நைவேத்தியம் செய்வார்கள். சில கிராமங்களில், ஒக்காரை, திரட்டிப்பால் என்று சில சிறப்பு இனிப்பு வகைகளைச் செய்வது வழக்கம்.

பின்னர், பகவானுக்கு தீபாராதனை செய்து வழிபடுவார்கள். குழந்தைகள், வீட்டிற்கு வெளியே சென்று பல பட்டாசு, மத்தாப்பு, பூச்செட்டி, தரை சக்கரம் போன்ற விதவிதமான வான வேடிக்கை செய்வது வழக்கம்.

இப்போதெல்லாம், இயற்கைக்கு பாதிப்பு இல்லாத பட்டாசுகளை நாம் வாங்க வேண்டும். இயற்கையை ஒருபொழுதும் நம் சந்தோஷத்திற்காக விலை கொடுக்கல் ஆகாது. அதனால், சிலர் விளக்கை மட்டும் ஏற்றுவார்கள். பட்டாசு, வெடிகளை வாங்க மாட்டார்கள்.

## தீபாவளி அன்று இதைப்பின்பற்றலாமே...



### தீபாவளி கொண்டாடும்போது சில வழி முறைகள்

1. மண் விளக்குகளை ஏற்றி வழிபடுங்கள்.
2. இயற்கைக்கு விரோதமான பட்டாசுகளை வெடிப்பது கூடாது.
3. தீபாவளி அன்று ஒருவருக்காவது தானம் செய்வது நல்லது.
4. வீட்டிலேயே இனிப்பு, காரம் செய்து, நிவேதனம் செய்து உண்பது சிறப்பு.
5. விளக்குக்கு மஞ்சள், குங்குமம் இட்டு, நல்லெண்ணெய் ஊற்றி தீபம் ஏற்றுவது சிறப்பு.
6. வெடி வைக்கும்போது மிக ஜாக்கிரதையாக வைக்கவேண்டும்.
7. வெடி வைக்கும் இடத்தில், ஒரு வாளியில் தண்ணீர் வைத்துக்கொள்ளவேண்டும்.
8. வெடி வைக்கும்போது ஆடைகள், தலை முடிகளை நன்று கட்டிக் கொள்ளல் வேண்டும்.
9. வெடி வைக்கும்போது யாரும் பக்கத்தில் இல்லாதவாறு, வெட்டவெளியில் வைக்கவேண்டும்.
10. மிகவும் சத்தமான வெடிகள், புகை கொண்ட வெடிகள், வாசனை கொண்ட வெடிகள், பறக்கும் வெடிகளைத் தவிர்க்கவும்.
11. தீபாவளி அன்று குடும்பத்துடன் ஆலயத்திற்குச் சென்று இறைவழிபாடு செய்வது நன்று.
12. விடியற்காலையில் எழுந்து எண்ணெய் தேய்த்துத் தலைக்குக் குளித்தல் வேண்டும்.
13. விளையாட்டிற்காகக் கூட வயோதிகர்கள், குழந்தைகள் மற்றும் விலங்குகளுக்கு எந்தவிதத் துன்பமும் தராமல் பட்டாசுகளை மிகவும் கவனமாகப் பயன்படுத்த வேண்டும்.
14. அசைவம் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நன்று.
15. மஹாலக்ஷ்மியின் துதிகள், பாடல்கள், சுலோகங்கள் பாராயணம் செய்து லக்ஷ்மி பூஜை செய்வது செல்வச் செழிப்புக்கு வழிகோலும்.
16. பெரியவர்களிடம் ஆசிர்வாதம் பெறுவது நல்லது.
17. நம் பாரம்பரிய வழியில், உற்றார் உறவுகளோடு சேர்ந்து தீபாவளியைக் கொண்டாடுவோம்.

**தீபங்களின் ஒளியில் நம் வாழ்வும் ஒளிர்ந்திட இறைவனைப் பிரார்த்திப்போம்.**

பின்னர், சிறியவர்கள், பெரியவர்களை சேவித்து, ஆசி பெறவேண்டும். அக்கம் பக்கத்து வீடுகளுக்கு பக்ஷணம் விநியோகம் செய்ய வேண்டும். கோயிலுக்குச் சென்று வழிபட்டு தானம் தர்மம் செய்ய வேண்டும். மாலை, உறவினர்கள் வீட்டிற்குச் சென்று மகிழ்வது சிறப்பானது. இரவிலும், விளக்கேற்றி வழிபடவேண்டும்.

கோவர்தன பூஜை என்று ப்ருந்தாவனத்தில் கொண்டாடுவார்கள். கண்ணன், கோவர்தன மலையைத் தூக்கிக் குடையாகப் பிடித்து மக்களை காப்பாற்றியதை நினைவுகூர்ந்து அம்மக்கள், பலவித உணவுகளைச் சமைத்து கோவர்தனத் திற்கு பூஜை செய்து வழிபடுவர். நாமும், நம் வீட்டில் இவ்வாறு செய்து கண்ணனின் அன்பைப் பெற வேண்டும்.

இன்று எல்லோரும் அடுக்கு மாடி கட்டிடங்களில் வசிப்பதால், தீபாவளியை மொட்டை மாடியில் அல்லது கட்டிட விளையாட்டு மைதானத்தில் பட்டாசு வெடித்து கொண்டாடு கிறார்கள். கம்யூனிட்டி ப்ரொக்ராம்ஸ் என்று குடியிருப்பு பகுதியில் சேர்ந்து தீபாவளியை ஆட்டம் பாட்டம், நாடகங்கள் கலை நிகழ்ச்சிகள் வைத்து சிறப்பு விருந்து வைத்து கொண்டாடுகி றார்கள். இது நகர்ப் புறங்களில் வழக்கமாகி விட்டது. இவர்கள், கொண்டாடும்போது தீபாவளி யின் தொன்மையான கதைகளும், கருத்துக்களும், நல்ல பண்புகளும், வழக்கங்களும் சேர்த்து கொண்டாடினால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

தீபாவளியின் முக்கியத்துவம், புராணத்தில் உள்ள கதைகளை நாடகங்களாகக் குடியிருப்பு களில் நடத்தினால் நம் இளைய தலைமுறைக்கு ஏன் கொண்டாடுகிறோம் என்றும், அதில் உள்ள உண்மைகளும் எளிதாகப் புலப்படும். மின் விளக்கு களுக்குப் பதிலாக, மண் அகல் விளக்குகள், வாழைத்தண்டு விளக்குகள் போன்ற இயற்கை முறை விளக்குகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்தால், சிறு தொழில்கள் செய்து வாழ்ந்திடும் கிராம வளர்ச்சிக்கும் பயன்படும்.

நம் முன்னோர்கள், ஒரு வழக்கத்தை வைத்தார்கள் என்றால் அது, இயற்கைப் பாதுகாப்



## ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய கேள்வி பதில்

50. யாமுனாசார்யர் மற்றும் கூரத்தாழ்வான் திருவடி ஸ்தானங்களில் இருக்கும் ஆசார்ய புருஷர்கள் யார்?
    தெய்வவாரி ஆண்டான், பராசர பட்டர்.
51. ஸ்வாமி கூரத்தாழ்வான் திருவாய்மொழியில் நெடுமாற்கடிமை (8-10) என்ற பதிகத்தை காலக்ஷேபமாகச் சொல்லும்போது சிறுமாமனிசர் என்ற விஷயத்தில் ஆழ்வான் மூலமாக உதாஹரிக்கப்பட்ட ஆசார்ய புருஷர்கள் யார்?
    முதலியாண்டான், அருளாளப்பெருமாள் எம்பெருமானார், எம்பார், சிறியாச்சான் .
52. 20, 60, 74 மற்றும் 100 பாசுரங்கள் அல்லது சுலோகங்கள் கொண்ட பிரபந்தங்கள் யாவை?
    20 பாசுரங்கள் - திருக்குறுந்தாண்டகம், 20 சுலோகங்கள் - யதிராஜ விம்சதி, 60 பாசுரங்கள் - ஆர்த்தி பிரபந்தம், 74 பாசுரங்கள் - உபதேச ரத்ன மாலை, 100 பாசுரங்கள் - முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி, திருவாய்மொழி நூற்றந்தாதி.
53. திருவாய்மொழியைப் பெற்ற தாய் சடகோபன், வளர்த்த தாய் ராமாநுஜர் என்று யார் வர்ணித்தார்?
    ஸ்ரீமான் பராசர பட்டர் திருவாய்மொழி தனியனில் வருணித்தார்.
54. திவ்யதேச ரத்னமான திருவரங்கத்தை 3வது விபூதியாக மிகவும் வருணித்த திவ்யசூரி யார்?
    தொண்டரடிப்பொடியாழ்வார்.
55. வைணவ ஸம்ப்ரதாயத்துக்கு எம்பெருமானார் தர்சனம் என்று நம்பெருமாள் பெயர் வைத்தார் என்று எந்த க்ரந்தத்தில் எவர் அநுக்ரஹித்தார்?
    மணவாள மாமுனிகள் தாம் அருளிய உபதேச ரத்ன மாலையில் 38வது பாசுரத்தில் கூறியுள்ளார்.

**- தெலுங்கில் : கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே.நடாதூர் பாஷ்யாசார்ய ஸ்வாமி, ஸ்ரீபெரும்பூதூர்.**
**தமிழாக்கம் : திருமதி குமுதா வரதராஜன், சென்னை.**

பாகவும், பல தொழில்களை ஊக்குவிக்கும் படியாகவும், பலதரப்பட்ட மக்கள் மற்றும் சமுதாயம் மேன்மை அடைவதாகவும் தான் அமையும். இவ்வாறு, இந்தத் தலைமுறையும் எந்த ஒரு கொண்டாட்டத்தையும் ஒரு பொழுது போக்காக இல்லாமல் சமுதாய முன்னேற்றக் கண்ணோட்டத்தில் அமைக்க வேண்டும்.

கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் சிறப்பு பூஜைகள், சிறப்பு விளக்குகள் ஏற்றும் வழக்கம், சிறப்பு வாகன சேவை, வேத கோஷ்டி, வாத்திய கோஷ்டி, சங்கீத நாட்டிய நிகழ்ச்சிகள் போன்ற பல நிகழ்ச்சிகளுக்கு நம் தலைமுறைகள் பங்கேற்று நம் சனாதன தர்மத்தை வளர்க்க வேண்டும்.

இவ்வாறு, தீபாவளி பண்டிகை, நமக்கு சந்தோஷம், ஆயுள், அருள் பெறும் பெருநாளாக விளங்குவதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இவ்வாறு கொண்டாடினால், ஸ்ரீயப்பதியான ஸ்ரீநிவாசன் நமக்கு அருள்வான் என்பது திண்ணம்.

## திருவிளக்கு பூஜை



தண்டுடன் கூடிய விளக்கை நேராக (செங்குத்தாக) நிறுத்துவதால் அதற்கு குத்துவிளக்கு என்று பெயர் ஏற்பட்டது. குத்து விளக்கானது தங்கம், வெள்ளி, பித்தளை, வெங்கலம் ஆகிய உலோகங்களினால் செய்யப்பட்டவையாக இருக்க வேண்டும். எவர்சில்வர் விளக்கு கூடாது. ஐந்து முகங்களை உடைய குத்து விளக்கு பெண்களுக்கு இருக்க வேண்டிய அன்பு, மனவுறுதி, நிதானம், சமயோஜிதம், சகிப்புத்தன்மை ஆகிய ஐந்து குணங்களைக் குறிக்கின்றன. ஐம்புலன்களையும் தன் வசப்படுத்தி அகத்தை ஒளிபெறச் செய்யவே ஐந்து முகங்களை உடைய குத்து விளக்கு பூஜை செய்யப்படுகிறது. ஆலயங்கள் தோறும் கன்னிப்பெண்கள், சுமங்கலிகள் ஒன்று கூடி திருவிளக்கு பூஜை செய்வதால் ஆன்மீக ஒருமைப்பாடு, அன்பு மலரும்.

குத்துவிளக்கின் அடிப்பாகம் : தாமரை மலர் போல் அகன்று வட்டமாக இருப்பதால் தாமரை மலரின் மேல் வீற்றிருக்கும் பிரம்மதேவரைக் குறிக்கிறது.

தண்டு பாகம் : தூணைப்போன்று உயரமாக இருப்பதால் ஓங்கி வளர்ந்து பூமியையும் ஆகாயத்தையும் ஈரடியில் அளந்த நெடுமாலான மஹாவிஷ்ணுவைக் குறிக்கிறது.

மேல் பாகம் : தண்டிற்கு மேல் அகல் போல் நெய்/எண்ணெய் ஊற்றப்படும் பாகம் சிவபாகமாகும். சிவபெருமான் கங்கையை திருச்சடையுள் வைத்திருப்பதுபோல் இது உள்ளதால் இப்பாகம் உருத்திரனைக் குறிக்கிறது.

திரியிடும் கண் : திரி எரிவதற்குரிய ஐந்து முகங்கள் மகேஸ்வரரின் ஐந்து முகங்களான ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் ஆகிய ஐந்து முகங்களைக் குறிக்கிறது.

மேல்தண்டு : அகலின்மேல் பாகமான கும்பகலசம் போல் உள்ள உச்சபாகம் சதாசிவனாய் பாவிக்கத்தக்கது.

எண்ணெய் : அகலிலுள்ள எண்ணெய்/நெய்யானது உருவமின்றி எங்கும் பரவியிருக்கும் நாத தத்துவத்தைக் குறிக்கிறது.

திரி : பிந்து தத்துவத்தை (வெண்மை நிற ஒளியை)க் குறிக்கிறது; தீ : எரிக்கும் சக்தியான பராசக்தியைக் குறிக்கிறது.

சுடர் : தீப்பிழம்பு லக்ஷ்மி தேவியின் சொரூபமாகக் கருதப்படுகிறது.

ஒளி : பிரகாசமாக இருப்பதால் ஞானத்தின் வடிவான சரஸ்வதி தேவியைக் குறிக்கிறது.

திருவிளக்கு பூஜையின் நன்மைகள்: இப்பூஜை செய்வதால் நமது கர்மங்கள் நீங்கும். இறையருள் கிட்டும். சாக்ஷாத் மஹாலக்ஷ்மி வழிபாடே திருவிளக்கு பூஜையாகும். திரு என்பது திருமகளான மஹாலக்ஷ்மியைக் குறிக்கும். ஒளி என்பது ஞானத்தின் அடையாளமாக இருப்பதால் ஒளி வழிபாடு என்பது மிகச் சிறந்த ஒரு வழிபாடாகும்.



திருவிளக்கின் உலோகம் மண் தன்மை கொண்டதாகவும், எண்ணெய் நீர் தன்மை கொண்டதாகவும், ஒளி நெருப்பின் அமைப்பிலும், ஒளி தொடர்ந்து கிடைக்க காற்றும், ஆகாயமும் செயல்படுகின்றன. பஞ்சபூதங்களின் நிலையில் இருக்கும் இறைவனை நாம் வழிபடுகிறோம் என்பது பொருள். தீப ஒளி தீய சிந்தனைகள் ஏற்படாவண்ணம் தடுக்கும்.

முதல் திரி ஏற்றுவதால் சாந்தமான மனநிலையும், இரண்டாவது திரி ஏற்றுவதால் குடும்பத்தின் துயரங்கள் நீங்கும். மூன்றாவது திரியை ஏற்றுவதால் எடுத்த செயல்களில் வெற்றியும், நான்காவது திரி ஏற்றுவதால் ஆரோக்கியமும், ஐந்தாவது திரியை ஏற்றுவதால் குறைவில்லா வாழ்வும் கிட்டும்.

நன்றி : திருவிளக்கு பூஜை, முல்லை பதிப்பகம்

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

**தெளிந்த பெரும் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு**

எம்பெருமான் திருவேங்கடமுடையானின் புனிதமான திருமேனிக்குத் திருமஞ்சனம் செய்வதற்கு ஏற்ற ஆகாசகங்கை, பாபநாசம் முதலிய திவ்யமான நீர்நிலைகள் இத்திருமலையில் நிறைந்திருக்கின்றன. எம்பெருமானின் திருவுள்ளத்துக்கு உகந்தவை என்பதால் அவற்றைப் பெரும் தீர்த்தங்கள் என்று சிறப்பித்துக் கூறுகின்றார் வேதாந்ததேசிகன். குளங்கள், ஏரிகள், சுனைகள், கபில தீர்த்தம் உள்ளிட்ட அழகிய நீர்வீழ்ச்சிகள் அனைத்தும் இத்திருமலையில் அமைந்து இதனை இயற்கை எழிலுக்கு எழிலூட்டுகின்றன.

இந்நிலையில் ,

*"கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே"*
*"தேன் ஆர் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்*
*மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே"*
*"...திருவேங்கட மலைமேல் கானாறாய்ப் பாயும்*
*கருத்துடையேன் ஆவேனே!"*

என்றெல்லாம் மனம் உருகிப் பாடியருளிய குலசேகராழ்வாரின் திருவுள்ளக்கருத்தை நன்றாக உள் வாங்கிக்கொண்ட வேதாந்த தேசிகரும் இத்திருமலையை *"தெளிந்த பெரும் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு"* என்று அற்புதமாகப் பாடியருளியுள்ளார்.


**புண்ணியத்தின் புகல் இது எனப் புகழும் வெற்பு**

நம் எம்பெருமான் திருவேங்கடமுடையானை இப்பிறவியில் ஒரு முறையேனும் தரிசனம் செய்வது என்பது நாம் பெரிய அளவில் புண்ணியம் செய்திருந்தால் மட்டுமே சாத்தியப்படும் என்பது நம் முன்னோர்களின் நம்பிக்கையாகும்.

நாம் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், நம் திருவேங்கடமுடையான் நமக்குத் தரிசனம் தரவேண்டும் என்று திருவுள்ளம் பற்றுகின்ற நாளிலும், நேரத்திலும் மட்டுமே நமக்கு அந்தப் புண்ணிய தரிசனம் வாய்க்கும் என்று நம் வீட்டுப் பெரியவர்கள் சொல்வதையும் நாம் கேட்டிருக்கின்றோம்.

பக்தி செய்தல், அடியார் தொண்டு புரிதல் ஆகிய புண்ணியச் செயல்களை நாம் முன்னமே செய்திருக்க வேண்டும். அந்தப் புண்ணியங்களும் அதுவும் எம்பெருமான் திருவேங்கடமுடையானின் திருவடிகளில் சமர்ப்பணம் செய்யப்பட்டு அவனுடைய திருவுள்ளம் இரங்க வேண்டும். அப்பொழுதுதான் எம்பெருமானின் திருப்பாதம் முதற் கொண்டு திருமுடி வரையிலான ஒரு க்ஷண நேரம் தரிசிக்கின்ற பேறும் பரவசமும் நமக்கு வாய்க்கும்.

இப்படி எம்பெருமான் தரிசனத்துக் கான புண்ணியத்தையும் நம்மைச் செய்ய வைத்து, அதன் பலனாக எம்பெருமான் திருவேங்கடமுடையானைத் தரிசனம்




காயார் கோமடம் சேஷாத்ரிதாஸன்,
காஞ்சிபுரம், 9486139685

செய்த புண்ணியத்தையும் நமக்குப் பரிசாக வழங்கி வழியனுப்புவதே இத்திருமலையில் சிறப்பாகும். எனவேதான் வேதாந்த தேசிகன் இத்திருமலையை *''புண்ணியத்தின் புகல் இது எனப் புகழும் வெற்பு''* என்று பாடியருளியுள்ளார்.

### பொன்னுலகின் போகம் எலாம் புணர்க்கும் வெற்பு

முக்தி அடையும் ஜீவாத்மாக்கள் வைகுண்ட உலகை அடைந்து அங்கே அனாதிகாலமாக வசிக்கின்ற ஆதிசேஷன், பெரியதிருவடியாகிய கருடன், எம்பெருமானின் படைத்தளபதியாகிய ஸ்ரீவிஷ்வக்ஸேனர் போன்ற நித்தியசூரிகளுடன் இணைந்து பேரானந்த அனுபவங்களில் திளைப்பர் என்பது நம் பெரியவர்களின் வாக்காகும்.

திருப்பதி திருமலையில் எழுந்தருளி இருக்கும் நம் திருவேங்கடமுடையானைத் தரிசிக்க வருகின்ற நாமெல்லாம், நித்திய சூரிகளைப் போன்ற அர்ச்சக ஸ்வாமிகளின் முன்னிலையில் எம்பெருமானைத் தரிசித்து மெய்சிலிர்ப்பதுடன், நறுமணம் கமழும் தீர்த்தப் பிரஸாதத்தினை அருந்தி, எம்பெருமானின் திருவடி நிலையாகிய ஸ்ரீசடாரியை நமது தலைகளில் ஏற்று, லட்டு, வடை போன்ற விசேஷமான பிரசாதங்களுடன் சுவை மிகுந்த அன்னப் பிரசாதத்தையும் ஸ்வீகரிக்கின்றோம். இவ்விதமாக, விண்ணுலகாகிய ஸ்ரீவைகுண்டத்தில் கிடைக்கின்ற பரமானந்த அனுபவங்கள் யாவும் நமக்குத் திருவேங்கடமலையிலேயே கிடைத்து விடுவதால்தான் ஸ்ரீவேதாந்த தேசிகன் *''பொன்னுலகின் போகம் எலாம் புணர்க்கும் வெற்பு''* என்று பாடியருளி உள்ளார்.

### விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு

திருப்பாணாழ்வார் அருளிச் செய்த அமலனாதி பிரான் பிரபந்தத்தில் உள்ள,

*''மந்திபாய் வடவேங்கட மாமலை வானவர்கள்*
*சந்திசெய்ய நின்றான்...!''*

என்ற பாசுரத்திற்கு உரை செய்த பெரியோர்கள், பூவுலகத்து அடியார்களாகிய மானிடர்களும், வானுலகத்து அடியார்களாகிய தேவர்களும் ஒரே இடத்தில் சந்தித்துக்கொண்டு நட்பு பாராட்டும் படியாக எம்பெருமான் திருவேங்கடமுடையான் திருமலையின் உச்சியில் எழுந்தருளியிருக்கின்றான் என்று விளக்கம் கூறி மகிழ்ந்தனர். மேலும், இரட்டைக் குழந்தைகளைப் பெற்றுள்ள தாயார் அவை இரண்டிற்கும் நடுவில் இருந்துகொண்டு ஒரே சமயத்தில் அமுதூட்டுவதைப் போன்று, பூவுலகுக்கும் வானுலகுக்கும் நடு நாயகமாக இத்திருமலையின் உச்சியில் எம்பெருமான் சேவை



## திருமலையில் பிளாஸ்டிக் பொருட்கள் தடை

**புண்ணிய திருத்தலமாம் திருமலையின் தூய்மைக்காக ஒவ்வொருவரும் தம் பங்கு முயற்சி செய்ய வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டே திருமலை திருப்பதி தேவஸ்தானமும் திருமலையில் பிளாஸ்டிக் (பிளாஸ்டிக் பாட்டில்கள், பிளாஸ்டிக் பைகளுக்கு) பொருட்களுக்கு நிரந்தர தடை விதித்துள்ளது.**

**எனவே, பக்தர்களும் திருமலையிலும், இரு மலைவழிச் சாலைகளிலும், அலிபிரி, ஸ்ரீவாரி மெட்டு நடைபாதைகளிலும் பிளாஸ்டிக் பொருட்களை எறியாதீர்கள். துணிப்பைகளையும், பிளாஷ்டிக் அல்லாத குடிநீர் பாட்டில்களையும் பயன்படுத்துங்கள். திருமலையில் தி.தி.தே. வழங்கும் ஜலப்பிரசாதத்தை உபயோகியுங்கள். திருமலையின் சுற்றுபுறத்தையும், சுகாதாரத்தையும் காப்பதோடு நீர் வளத்தையும் நில வளத்தையும் காப்பதும் நம் கடைமையாகும்.**



சாதிக்கின்றான் என்றும் சுவைபடக் கூறுவர் பெரியோர். இக்காரணம் பற்றியே வேதாந்த தேசிகனும் *“விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு”* என்று திருமலையைப் போற்றுகின்றார்.

### வேங்கட வெற்பு என விளங்கும் வேதவெற்பே

புனிதமான நால்வேதங்கள் ஓதப்படும் ஓசை எந்நாளும் திருவேங்கடமலையில் கேட்கின்றது. இத்திருமலை வேதங்களால் போற்றப்பட்டதாகும் .

இன்னொரு விசேஷமும் இருக்கின்றது.

*மாற்பால் மனம் சுழிப்ப, மங்கையர்தோள் கைவிட்டு*
*நூற்பால் மனம் வைக்க நொய்வு இதுவாம்நாற்பால்*
*வேதத்தான், வேங்கடத்தான், விண்ணோர் முடி*
*தோயும்*
*பாதத்தான் பாதம் பணிந்து*

முதலாழ்வார்கள் மூவரில் மூன்றாமவராய் அவதரித்தருளிய பேயாழ்வர் மேற்கண்ட பாசுரத்தில் இவ்வாறு கூறுகின்றார். நான்கு வேதங்களாலும் போற்றப்படுபவனும், தேவர்கள் தலை வைத்து வணங்குகின்ற திருப்பாதங்களை உடையவனு மாகிய நம் திருவேங்கடவனை நினைப்பவர்கள் மனம் எல்லாம் சிற்றின்ப நாட்டத்தினை விட்டுவிட்டு வேத வேதாந்தக் கருத்துகளில் ஈடுபடத் தொடங்கும்.

மேற்கண்ட பல காரணங்களினால் வேதாந்த தேசிகன் இத்திருவேங்கடமென்னும் திருமலையை வேதவெற்பு என்றே போற்றுகின்றார் என்பது பெரியோர்களின் திருவுள்ளக் கருத்தாகும்.

இவ்விதம் வேதாந்த தேசிகர் தாம் இயற்றி அருளிய எண்சீர் விருத்தப் பாசுரத்தில் எட்டெழுத்துத் திருமந்திரத்திற்கு உரியவனாகிய நம் திருவேங்கடமுடையான் எழுந்தருளி இருக்கும் திருமலையின் எட்டு விதமான பெருமைகளைப் பேசியுள்ளார்.

ஏழுமலையான் தனது வருடாந்திர பிரம்ம உற்சவத்தைக் கண்டருளும் இந்தப் புனிதமான புரட்டாசி மாதத்தில் வேங்கடேசகவியாகிய வேதாந்த தேசிகன் இயற்றியருளிய பாசுரங்களை யும், திருவேங்கடமுடையானின் தனிப் பெரும் கருணையைப் போற்றும் தயாசதகம் உள்ளிட்ட ஸ்தோத்திரங்களையும் உள்ளன்புடன் ஓதி இகபர சுகங்களைப் பெறுவோமாக!

**முதல் ஆழ்வார்கள் மூவரில் முதல் ஆழ்வாரான பொய்கை ஆழ்வார் ஐப்பசி திருவோண நன்னாளில் அவதரித்து முதல் திருவந்தாதியின் முதல் பாசுரமான *“வையம் தகளியா வார்கடலே நெய்யாக”* என்று தொடங்கி... நிறைவு செய்யும் தருணத்தில் 99 ஆவது பாசுரத்தில் திருமலை அப்பன் புகழுடன் 100 பாசுரங்களை அருளியிருக்கிறார்.**

***உளன்கண்டாய் நன்னெஞ்சே, உத்தமன் என்றும்***
***உளன்கண்டாய், உள்ளுவா ருள்ளத்து உளன்கண்டாய்,***
***வெள்ளத்தி னுள்ளானும் வேங்கடத்து மேயானும்,***
***உள்ளத்தி னுள்ளானென் றோர்.***

**நான் சொல்வதை கேட்கும் மனமே!, புருஷோத்தமனான எம்பெருமான், நம்மைக் காப்பாற்றுவதில் ஆசை உள்ளவனாக இருப்பதைப் பார். எக்காலத்திலும் (நம்மைக் காப்பதிலேயே உறுதி கொண்டு இருக்கிறான் காண்), தன்னை நினைக்கும் பக்தர்கள் மனத்திலே, அகலாமல் என்றும் இருக்கிறான் பார். அவன் யார் தெரியுமா? திருப்பாற்கடலில் கண் வளர்ந் தருள்பவனும், திருமலையிலே நிற்பவனும், இப்போது நம்முடைய இதயத்திலே வந்து புகுந்து நித்ய வாஸம் பண்ணுகிறானென்று தெரிந்துகொள் என திருமலையப்பனை புகழ்கிறார்.**




 முற்றும்...

# நம்மாழ்வாரின் அருள் இருந்தால் மலையப்பனின் அருள் கிடைக்கும்

திருவேங்கடத்தானையும் அவன் உறைகின்ற திருவேங்கடமலையையும் பாடாத தமிழ்க் கவிஞர்கள் யாரும் இருக்க முடியாது.

அரங்கனைத் தவிர வேறு யாரையும் என்னுடைய கண்கள் காணாது என்ற வைராக்கியத்தோடு இருந்த திருப்பாணாழ்வார், திருவரங்கன்தான் திருவேங்கடத்தில் நின்று வந்தவன் என்று மறைமுகமாக திருவேங்கடத்தை அமலனாதிபிரானில் பாடுகின்றார்.

**மந்தி பாய் வட வேங்கட மாமலை**
**வானவர்கள்**
**சந்தி செய்ய நின்றானரங்கத்**
**தர வினணையான்**
**அந்தி போல் நிறத்**
**தாடை யுமதன் மேல்**
**அயனைப்**
**படைத்த தோரெழில்**
**உந்திமேல தன்றோ**
**அடியேனுள்ளத்**
**தின்னுயிரே.**



பரமபதத்திலே கைங்கர்ய ஸாம்ராஜ்யத்துக்கு முடிசூடி இருக்கிற முக்தரும் நித்யரும் தேஸோசிதமான தேஹங்களைப் பரிக்ரஹித்துக் கொண்டு திருமலையிலே வந்து கைங்கர்யங்கள் பண்ண, அவற்றைப் பெறுகைக்காக அங்கே நித்ய ஸந்நிஹிதனா இருக்கும் பெருமான் என்பது உரை.

பதின்மர் பாடிய செந்தமிழில், தொண்டரடிப் பொடியாழ்வாரைத் தவிர அத்தனை பேரும் திருவேங்கடத்தானைப் பாடியிருக்கின்றனர்.

இவ்வரிசையில் ஆழ்வார்களின் பாசுரங்களைத் தவிர்த்து, மற்ற கவிஞர்களும் பாடல்களாகவும், தனி நூல்களாகவும் பல்வேறு மொழிகளிலே திருவேங்கடவனைப் பாடி இருக்கின்றனர். அதில் ஒருவர் தான் திவ்யகவி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். அவர் திருவேங்கடமாலை எனும் அற்புதமான நூலிலே திருவேங்கடத்தின் சிறப்பையும், மலையப்பனின் சிறப்பையும் புதிய கோணத்தில் அற்புதமாகப் பாடுகின்றார்.

அப்படிப்பாட தனக்குத் தூண்டுதலைத் தந்தது ஆழ்வார்களின் பாசுரங்கள் என்கிறார். நம்மாழ்வார் திருவேங்கடத்தைக் குறித்துப் பாடிய பாடல்களை எல்லாம் எண்ணி எண்ணி, ரசித்து ரசித்து, ஆழ்ந்து ஆழ்ந்து, இதைப் போலவே தானும் பாட வேண்டும் என்று பாரிக்கிறார். அதற்கு திருவேங்கடவன் அருளை விட, திருவேங்கடவனை சரணாகதி செய்து பாடிய நம்மாழ்வாரின் அருள்

முக்கியம் என்று நினைக்கிறார். இந்தப் பிரார்த்தனை தான் முதல் பாடல்.

*திண்பார் புகழும் திருவேங்கட மாலை*
*வெண்பா வானூரும் விளம்பு தற்குக் கண் பாராய்*
*நாராயணா வடியேன் நாடும் தமிழ் வேதப்*
*பாராயணா சடகோபா*




**திருமலையில் "பாக்" சவாரி உற்சவம்**

**"பாக்" என்றால் தோட்டம், "சவாரி" என்றால் எழுந்தருளல் ஆகும். அனந்தாழ்வான் தோட்டத்திற்கு திருமலையப்ப ஸ்வாமி எழுந்தருளும் சேவையை "பாக் சவாரி" என்பர்.**

**இராமாநுஜரின் சீடரான அனந்தாழ்வான் தன்னுடைய குருவின் ஆணைக்கிணங்க கர்பவதியான தன் மனைவியோடு திருமலைக்குச் சென்று திருமலையில் ஒரு குளத்தையும், நந்தவனத்தையும் அமைத்து திருவேங்கடமுடையானுக்கு புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தார். இதனை நினைவு கூறும் விதமாக திருமலையில் வருடாந்திர பிரம்மோற்சவம் நிறைவடைந்த மறுநாள் திருமலையப்ப ஸ்வாமி அப்பிரதக்ஷிணமாக (எதிர் திசையில்) தென் மேற்கு மாடவீதியில் அமைந்துள்ள அனந்தாழ்வான் தோட்டத்திற்கு எழுந்தருள்வார். அனந்தாழ்வான் தோட்டத்தில் உள்ள மகிழ மரத்திற்கு மாலை அணிவித்து, சடகோபன் சாத்தி சிறப்பு வழிபாடுகளும் நடைபெறும். சிறப்பு மிகுந்த இந்நிகழ்ச்சியில் ஸ்ரீஸ்ரீஸ்ரீஜீயர் சுவாமிகளும், வேத பண்டிதர்களும் பங்கு கொள்வர்.**

நாராயணன் அடிமை ஆகிய தான், அந்த நாராயணனின் அருளைப் பெற வேண்டும் என்றால், குருநாதராகிய சடகோபன் அருளைப் பெற்ற பின் தான் பெருமாளின் அருளைப் பெற முடியும் என்பதை இப்பாடலில் சுட்டிக் காட்டுகின்றார். குரு அருள் இல்லையேல் திருவருள் சித்திக்காது என்கின்ற தத்துவத்தை முதல் வரியிலே வெளிப்படுத்துகின்றார்.

திருமலையப்பனைச் சேவிக்க வேண்டும் என்றால், பாகவதர்கள் தலைவரான, பிரபன்ன ஜன கூடஸ்தரான நம்மாழ்வாரின் பேரருள் வேண்டும். அல்லது நம்மாழ்வாரின் பேரருளைப் பெற்ற அடியார்களின் பேரருள் வேண்டும்.

இதனை நடைமுறையிலும் நாம் பார்க்கலாம். திருமலைக்குச் செல்கிறவர்கள் ரகசியமாக, தான் மட்டும் திருமலைக்குச் செல்வது கிடையாது. திருமலை யாத்திரை என்பார்கள்.

அந்தக் காலத்தில், விரதம் இருந்து, மஞ்சள் ஆடை உடுத்தி, உற்றார் உறவினர்களையும் உடன் வசிக்கும் பாகவதர்களையும் அழைத்துக் கொண்டு ஆனந்தமாக திருமலைக்கு குழுவாகச் செல்வார்கள். அப்படி வந்து தரிசிப்பதுதான் திருமலையப்பனுக்கும் நம் அடியார் வந்தார் என்ற ஆனந்தத்தைத் தரும். அப்படிக் குழுவாகச் செல்பவர்களை வழிநடத்த ஒரு குருநாதர் இருப்பார்.

பிள்ளைப்பெருமாள் ஐயங்காரும் தமக்கு பாடல் யாத்திரையில் வழி நடத்த குருநாதராக சடகோபர் இருக்கிறார் என்பதை, *''நாராயணா அடியேன் நாடும் தமிழ் வேதப் பாராயணா!சடகோபா!''* என்ற வரியால் அழுத்தமாகக் குறிப்பிடுகின்றார்.

இதில் தமிழ் வேதம் என்பது திருவாய்மொழி. திருவாய்மொழியை தமிழ் வேதமாகத் தந்ததால், மதுரகவி ஆழ்வார் *''வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன்''* என்று கொண்டாடுகிறார். வடமொழி வேதத்தை எல்லோராலும் பயில முடியாது. பயின்றாலும் ஓத முடியாது. ஓதினாலும் பொருள் புரியாது. அழகு அனுபவம் போன்ற சுவைகளும் குறைவு.

ஆனால், திருவாய்மொழி அப்படி அல்ல. அது தமிழ் வேதம். அதோடு எம்பெருமானுடைய

வடிவழகைச் சுட்டிக்காட்டுவது. வேதத்தில் கூட மற்ற தேவதைகளைப் பற்றியும், கர்ம காண்டத்தில் யாகாதிகள் பற்றியும் விளக்கங்கள் உண்டு.

ஆனால், திருவாய்மொழியில் அப்படிப்பட்ட செய்திகள் எதுவும் இல்லாமல், பகவானை மட்டுமே நேர்கதியில் பாடுவதால் பகவத் விஷயம் (அருளிச்செயல்) என்று பெயர் சூட்டினார்கள். எனவே வேதத்தை ஓதுவதை விட ஒரு படி உயர்ந்தது தமிழ் வேதமாகிய திருவாய்மொழியை ஓதுவது. இந்த ஓதுதலைத்தான் பாராயணம் என்று சொல்லுகின்றோம். தமிழ் வேதம் ஒரு காலத்தில் பிரச்சாரம் குன்றி மறைந்திருந்த பொழுது, அதனை மறுபடியும் காட்டுமன்னார் குடியில் அவதரித்து, ஆசாரிய பரம்பரையைத் தொடங்கின நாதமுனிகளுக்குத் தந்தவர் சுவாமி நம்மாழ்வார்

இத்தனை சிறப்புடைய நம்மாழ்வார், இருந்த இடத்திலிருந்து கொண்டே எல்லா திவ்ய தேசங்களையும் தரிசித்தவர். திவ்ய தேசத்து எம்பெருமான்கள் எல்லாம் அவரிடம் தமிழ் வாங்கக் காத்திருந்தனர். அப்படிப் பாடிய திவ்ய தேசங்களிலே, ***“புகல் ஒன்றும் இல்லா அடியேன் உன் அடி கீழ் அமர்ந்து புகுந்தேனே”*** என்று திருவேங்கட மலையப்பனிடம் தீர்க்க சரணாகதி புகுந்தார். இந்த தீர்க்க சரணாகதியைப் பெறுவதற்காகத்தான் அந்த பகவானே விண்ணில் இருந்து மண்ணில் இறங்கி வந்தான். பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் இந்தச் சிறப்பை ***“திண்பார் புகழும் திருவேங்கட மாலை”*** என்று பாடுகின்றார்.

ஆழ்வார்கள் ***“வேங்கடம் ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே”*** என்றும், ***“வேங்கடமே வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு”*** என்றும், ***“உலகுக்கு எல்லாம் தேசமாய்த் திகழும் மலைத் திருவேங்கடம்”*** என்றும், ***“தெழி குரல் அருவித் திருவேங்கடம்”*** என்றும், ***“குறிஞ்சி மருள் இசை பாடும் வேங்கடம்”*** என்றும் பலபடியாகப் போற்றிப் பாடுகின்றார்கள்.

ஆழ்வார்கள் போற்றிப் பாடிய திருமலையப்பனை தானும் தன்னுடைய செந்தமிழால் ஏற்றிப் பாட நினைக்கின்றார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

பொதுவாக இறைவனைப் பாடுகின்ற பொழுது ஒவ்வொரு மலராக ஒவ்வொரு திருநாமத்தைச் சொல்லி அர்ச்சனை செய்வது வழக்கம். அஷ்டோத்திரம் என்றும், சதநாமாவளி என்றும், சகஸ்ரநாமாவளி என்றும், லட்சார்ச்சனை என்றும் எண்ணிக்கையைக் குறிப்பிட்டுச் செய்வது உண்டு.

பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் 100 பாடல்களால் வேங்கடவனைப் பாட நினைக்கின்றார். அதற்காக நம்மாழ்வாரிடம் ***“வெண்பாவால் நூறும் விளம்புதற்குக் கண் பாராய்”*** என்று வேண்டுகின்றார்.

இப்பொழுது இன்னொரு ஐயமும் இவருக்கு வருகிறது. அது சரி, ஆழ்வார்கள் தமிழால் வேங்கடத்தைப் பாடினார்கள் சரி. ஆனால் நாம் நம்முடைய பாடல்களைப் பாடுவது தகுதியான காரியமாக இருக்குமா? ஆழ்வார்கள் பாசுரங்கள் எங்கே? நம்முடைய புன் கவிகள் எங்கே? இரண்டும் ஒன்றாகுமா? என்கின்ற அச்சம் எழுகிறது.

திருவேங்கட மலையைச் சுற்றிப் பார்க்கிறார். ஓரிடத்தில் அற்புதமான நவரத்தினக் கற்கள் இருக்கின்றன. இன்னோரிடத்திலே காலில் குத்தும் கருங்கற்கள் கிடக்கின்றன. ஒரு பக்கத்திலே மணம் வீசும் சந்தன மரங்கள் இருக்கின்றன. இன்னொரு பக்கத்திலே வெறும் புற்கள் முளைத்துக் கிடக்கின்றன.

சந்தன மரமும் புல்லும் ஒன்றாகுமா? நவரத்தினங்களும் வெறும் கற்களும் ஒன்றாகுமா? ஆனால் இரண்டும் தானே திருவேங்கடத்தில் இருக்கின்றன?அப்படி ஆழ்வார் பாசுரங்களும், என்னுடைய பாடல்களும் தகுதியில் ஒன்றாக இல்லாவிட்டாலும், சந்தன மரத்தோடு புற்களும் இருப்பது போல, இருந்துவிட்டுப் போகட்டுமே என்று சமாதானம் ஆகிறார்.

இந்த எண்ணமே ஒரு அழகான பாடலாகப் பிறக்கிறது. அந்தப் பாடல்

***ஆழ்வார்கள் செந்தமிழை யாதரித்த வேங்கடம் என்***
***தாழ்வான புன் சொல்லும் தாங்குமால் ஏழ் பாரும்***
***வெல்லும் கதிர் மணியும் வெம்பரலும் செஞ்சாந்தும்***
***புல்லும் பொறுத்தமையே போல்***

அந்தச் சமாதானத்தின் விளைவாக 100 அற்புதமான பாசுரங்களை மலையப்பன் மீது பாடுகிறார். அதுதான் திருவேங்கட மாலை.

***–பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி,***
***94434 39963.***

முருகன் என்னும் பெயர் தெய்வத் தன்மை, இளமை, அழகு, இனிமை, மணம், களிப்பு என்று பல்பொருள் தருகின்ற பக்திப் பெயர். முருகே அழகு ! அழகே முருகன்! தேவர்கள் மீதுகொண்ட கருணையினால், தேவர்கள் வாழும் பொருட்டுச் சூரபத்மனை அடக்கி, அழிக்க எழுந்த சிவ பெருமானது ஆற்றலே, முருகப் பெருமானின் திருவுருவம் ஆகும். ஆதலால் சிவனே முருகன்! முருகனே சிவன்!

சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகள் உண்டாகி – சரவணப் பொய்கை அடைந்து, ஆறு குழந்தைகளாகத் தாமரை மலர்களில் உலகம் உய்ய வந்த – பெருமான், கிடந்து, கார்த்திகைப் பெண்களிடம் பாலூட்டி வளர்ந்தபோது, உமாதேவியார், ஆறு குழந்தைகளையும் ஒன்றாகச் சேர்த்து அணைத்து எடுத்த போது, "ஆறுமுகமும், ஒருடலும், பன்னிரண்டு தோள்களும், பன்னிரு விழிகளும், இணையடிகளும் பெற்றுக் கந்தசாமியாக" நமக்கு அருளினார். இதனை,

*''அருவமும் உருவமாகி*
*அநாதியாய்ப் பலவாய்*
*ஒன்றாய்ப்*
*பிரமமாய் நின்ற சோதிப்*
*பிழம்பதோர் மேனியாகிக்*
*கருணை கூர்முகங்கள்*
*ஆறும் கரங்கள் பன்னிரண்டும்*
*ஒருதிரு முருகன் வந்து ஆங்கு*
*உதித்தனன் உலகம் உய்ய''*

என்று கந்த புராணம் பேசும்.

## தொல்காப்பியம் காட்டும் முருகன்

தொல்காப்பியம் குறிஞ்சித் திணைக்குரிய தெய்வம் முருகனே என்பதை *''சேயோன் மேய மைவரை உலகமும்''* என்று குறிப்பிடுகிறது, பண்டைத் தமிழ் மக்களின் வாழ்வியலில் முருகவழிபாடு அகவாழ்விலும், புறவாழ்விலும் சிறந்திருந்ததாகத் தொல்காப்பியம் பேசும். முருகன், சேய், செவ்வேள், கந்தன், கடம்பன், கார்த்திகேயன் என்றெல்லாம் பாராட்டப்படுகின்றான்.

## சங்க இலக்கியத்தில் முருகன் வழிபாடு

சங்க இலக்கியத்தில் பழமையான பரிபாடலில் முருகனைப் பற்றிய பாடல்கள் 3 ஆகும். இவற்றுள் முருகனுடைய பிறப்பு, வெற்றி, வழிபாட்டு முறை, படைவீடுகளுள் முதன்மையான திருப்பரங்குன்றத்தின் சிறப்பும், மற்ற செய்திகளும் கூறக் காண்கிறோம்.

நக்கீரரின் திருமுருகாற்றுப் படையில் முருகனின் சிறப்பையும், அடியார்களை ஆற்றுப்படுத்துவதும், அவனுடைய முகங்களும், கைகளும், இணையடியும் எந்தெந்தச் சிறப்புடையன முதலான செய்திகள் பேசப்படுகின்றன.

மேலும், கலித்தொகை, அகம், புறம், ஐங்குறுநூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, பத்துப் பாட்டு ஆகிய இலக்கியங்களில் எல்லாம், முருகனது வரலாறும், அவன் சூரபத்மனை வீழ்த்திய வரலாறும் மற்றும் பல செய்திகளும் பேசப்படுகின்றன.




## சிலம்பில் முருகன்

சிலப்பதிகாரத்தில், *''அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயில்''* என்றும், *"அணிமுகங்கள் ஓராறும்"* என்றும், *''நீலப் பறவை அமல் நேரிழை தன்னொடும் ஆலமர் செல்வன் புதல்வன் வரும்''* என்றும், *''சூர்மா தடிந்த சுடரிளைய வெள்வேலே''* என்றும், *''சீர்கெழு செத்திலும் செங்கோடும் வெண்குன்றும் ஏரகமும் நீங்கா இறைவன் கைவேல் அன்றே''* என்றும் பேசுகின்றது, ஆகவே சிலப்பதிகாரக் காலத்திலும் முருக வழிபாட்டின் தொன்மை அறியப்படுகின்றது.

மணிமேகலைக் காப்பியம், முருகனை,

"கயிலை நன்மலை இறை மகன்" என்றும், "முருகனுக்கு உகந்தது கடம்பமாலை" என்றும், "குருகு பெயர்க் குன்றம் கொன்றோன்" என்றும் (கிரௌஞ்ச கிரியைப் பொடிபடச் செய்தான் என்ற வரலாறு) பேசுகின்றது.

சீவகசிந்தாமணியில், முருகனின் நிகழ்வுகள் உவமைகளாகக் காட்டப்படுகின்றன. ஆகவே, பல புராணங்களிலும், திருமுறைகளிலும் முருகனும் போற்றப்படுகின்றான். ஆகவே சங்ககாலம் முதற்கொண்டு முருக வழிபாடு போற்றப்பட்டிருக்கின்றது எனலாம்.

## கந்த சஷ்டி விரதம்

முருகனுக்குரிய விரதங்களுள் தலையாயது கந்த சஷ்டி விரதமாகும். சிவனுக்கு சிவராத்திரியும், திருமாலுக்கு வைகுண்ட ஏகாதசியும் போல மிகவும் சிறப்புடையது கந்த சஷ்டி விரதம் ஆகும். தேவர்களுக்கு இடையூறு செய்து வந்த, சூரபத்மன், சிங்க முகன், தாரகன் ஆகியோரை வதைப்பதற்கே, சிவனால் படைக்கப்பட்டவர் முருகன்.

முருகனுக்கும் அசுரர்களுக்கும் 6 நாட்கள் போர் நடைபெற்றது. ஆறாம் நாள் ஆணவம் நீங்கப் பெற்ற சூரனைச் சேவலாகவும், மயிலாகவும் முருகன் ஆட்கொண்டு அருளினான், இந்த ஆறு நாள்களுமே, கந்த சஷ்டியாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விரதத்தை எவ்வாறு நோற்பது என்பதைக் கந்தபுராணத்தில் வரும் கந்த விரதப் படலம் குறிப்பிடுகின்றது.

## தத்துவ நோக்கம்


தத்துவ நோக்கில் மனிதர்களுடைய ஆறு அகப் பகைகளான காமம், குரோதம், மதம், லோபம், மோகம், மாற்சரியம் முதலியவற்றை முருகன் திருவருளால் வென்று முருகனுடைய திருவடிகளை அடைவதே, கந்தசஷ்டி விரதம் என்று கொள்ளப்படுகின்றது.

ஐப்பசி வளர் பிறை பிரதமை முதல் சஷ்டி வரை ஆறு நாட்களுமோ, சஷ்டியன்று மட்டுமோ, கந்தசஷ்டி விரதத்தை இறையுணர்வோடும் நம்பிக்கையோடும் நோற்றால் பெரும் பயன் விளையும்.

## பலன்களும் பழமொழிகளும்

கந்த சஷ்டி விரதம் சகலசெல்வங்களையும், பதினாறு பேறுகளையும், சிறந்த மக்கட்பேற்றையும் தரவல்லதாகும். குறிப்பாக தம் வாழ்க்கையில் மழலைச் செல்வத்தைப் பெற விரும்புவோர், கந்தசஷ்டி விரதத்தை மேற்கொள்வார்கள். "சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்" என்ற பழமொழி, "சஷ்டியில் நோன்பு இருந்தால், அகப்பை ஆகிய, கருப்பையில் கரு உண்டாகும்" என்ற உட்கருத்தை உடையது. "சுக்குக்கு மிஞ்சிய மருந்தும் இல்லை. சுப்ரமணியர்க்கு மிஞ்சிய தெய்வமும் இல்லை" என்பதும் பழமொழியே.

தமிழ்க்கடவுளாகிய முருகனை, கந்தனை, சேந்தனை, செவ்வேளை வணங்கி சஷ்டி விரதம் இருந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோம்!



திருச்செந்தூரில் நன்மை வெல்ல, தீமை அகல சூரபத்மனை வதைத்து வையத்தின் மக்கள் துயர் தீர்த்த முருகப் பெருமானின் கந்த சஷ்டி விழா ஐப்பசி மாதம் வளர்பிறை பிரதமை முதல் சஷ்டி வரை கொண்டாடப்படுகிறது.

- முனைவர்
ச.செந்திலாண்டவன்,
சென்னை,
9444582856



# செல்வ வளம் அளித்திடும் திருமணத் தலம்

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டத்திலுள்ள திருவிண்ணகர் என்றழைக்கப்படும் ஒப்பிலியப்பன் கோயில் 108 திவ்யதேசங்களில் ஒன்றாகும். இத்தலப் பெருமாளை நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பொய்கையாழ்வார், பேயாழ்வார் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள்.

திருப்பதியில் உள்ள விமானம் ஆனந்தம் எனும் பெயரால் அழைக்கப்படுகிறது. அதுபோல் இத் திருக்கோயிலில் சுத்தாநனந்தம் (சுத்த + ஆனந்தம்) எனும் விமானத்துடன் அமையப் பெற்றுள்ள மூலவர் சன்னதியில், பெருமாள் கிழக்கு திசை காணும் வண்ணம் வலக்கரத்தில், *''மாம் ஏகம் சரணம் வ்ரஜ''* எனும் கீதை கூறும் சரணாகதி தத்துவத்தை தாங்கி நின்ற கோலத்திலும், பூதேவி நாச்சியார் வடக்கு திசை நோக்கி அமர்ந்த திருக்கோலத்திலும் எழுந்தருளியுள்ளனர். மார்கண்டேய மகரிஷி தெற்கு திசை நோக்கி கன்னிகா தானம் செய்யும் கோலத்தில் காட்சி தருகிறார்.

ஸ்ரீவைகானஸ ஆகமமுறைப்படி வழிபாட்டில் உள்ள இத்தலப் எம்பெருமானின் திருநாம தேயங்கள்: ஸ்ரீநிவாசன், ஒப்பிலியப்பன், ஸ்ரீவெங்கடாசலபதி, உப்பிலியப்பன் எனவும், இத்தல பிராட்டியார் பூதேவி, பூமி நாச்சியார், தரணிதேவி எனவும் அழைக்கப்படுகிறார்கள்.

இவ்வாலயத்தில் நம்மாழ்வாருக்கு பெருமாள் பொன்னப்பன், மணியப்பன், முத்தப்பன், என்னப்பன், திருவிண்ணகரப்பன் என ஐந்து வடிவங்களுடன் திருக்காட்சி தந்துள்ளார்.

**பெருமாளின் திருமண வரலாறு**

மார்கண்டேய மகரிஷி ஒரு சமயம் துளசிவனம் எனும் இத்தலத்திற்கு வரும் போது அவர் மனதில் பூதேவியைத் தன் புதல்வியாகப் பெற்று அவளை பெருமானுக்கு திருமணம் செய்து வைக்க ஆசை உண்டானது. இதற்காக இங்கு பல காலம் தவம் இயற்றி வந்தார். இதனைக் கண்ட பெருமான் ரிஷியின் விருப்பத்தினைப் பூர்த்தி செய்ய பூதேவிக்கு அருளாணை இட்டார். அதனைத் தொடர்ந்து மகரிஷி தவம் இயற்றும் பகுதியிலுள்ள ஒரு துளசி (திருத்துழாய்) செடியருகில் தாயார் திரு அவதாரம் செய்தாள்.

பூந்தளிர் போல் தவழ்ந்து வந்த பூதேவியைக் கண்ட மகரிஷி அவளை பூதேவி என்று உணர்ந்தார். உடன் தன் கரங்களில் அள்ளி "பூமாதேவி" எனும் திருநாமம் சூட்டினார்.

காலம் சில கடந்தது. பூதேவி தாமரை மலராக மலரத் தொடங்கினாள். காலம் கனிந்ததை அறிந்த பெருமான் ஒரு பங்குனி

மாதம் ஏகாதசி திருவோண நட்சத்திரம் தினத்தன்று, முதியவர் வேடம் கொண்டு மார்கண்டேயர் மகரிஷி ஆசிரமத்திற்கு எழுந்தருளினார். தனது ஆசிரமத் திற்கு வருகை தந்துள்ள பெரியவரை வரவேற்று மகிழ்ந்த மகரிஷியிடம் பெருமாள் (பெரியவர்) உங்களின் மகளை எனக்கு மணம் முடித்து தாருங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார்.

இதனைக் கேட்ட மகரிஷி வந்திருப்பது பெருமாள் என்று உணர்ந்தார். உடனே என் மகள் சிறியவள் அவளுக்கு உணவில் உப்பிட்டு சமையல் செய்யத் தெரியாது என்று உரைத்தார். அதனை கேட்ட பெருமாள் உம்முடைய பெண் சிறுமி ஆதலால் உணவு வகைகளில் லவணம் (உப்பு) சேர்க்கக் கூடத் தெரியாதென்று கூறினீர். ஆதலால் அவளது கையால் உப்பு இன்றி சமைத்த உணவை ஏற்றுக்கொள்கிறேன் என்றும், பூதேவிக்காக இனி உணவில் உப்பை முற்றிலும் விலக்கி விடுகிறேன் என்றும் மகரிஷியிடம் அருள் வாக்கு நல்கினார்.

அதனைக் கேட்ட மகரிஷி பெருமாளிடம் திருமணம் நடைபெற இனி தடை ஏதுமில்லை என்றும் வாக்களித்தார். மேலும் மூன்று வரங்கள் வேண்டி இறைவன் திருவடியில் அதனை விண்ணப்பமாக வைத்தார்.

1) தாங்கள் எனது புதல்வி பூமாதேவியை மணந்து எந்நாளும் இத்தலத்தில் உறைதல் வேண்டும். 2) இத்தலம் என் பெயரால் (மார்கண்டேய க்ஷேத்திரம்) என விளங்க வேண்டும். 3) இத்தலத்தில்



உப்பில்லாமல் உனக்கு அமுது செய்யும் உணவு உனது அடியார்களுக்கு மிக்க சுவையானதாக இருக்க வேண்டும் என இம்மூன்று வரங்களையும் வேண்டி தாழ்பணிந்தார். பெருமாளும் அந்த வரங்களைத் தந்தருளினார் என்று இத்தல வரலாறு எடுத்துரைக்கிறது.

பெருமாளின் அவதார தினத்தை முன்னிட்டு திருத்தேரோட்டத்துடன் ஒன்பது நாட்கள் பிரம்ம உத்ஸவம் (பெருவிழாவாக) இத்தலத்தில் ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது.

மேலும், இப்பெருமான் பூமிப்பிராட்டியை ஐப்பசி மாதம் திருவோண நன்நாளன்று திருமணம் செய்து கொண்டார் என்பது ஐதீகம். இதனை இத் தலத்தில் ஆண்டுதோறும் இதே நன்நாளில் பெருமாள், தாயார் திருக்கல்யாண வைபவம் 12 நாட் கள் வெகு விமரிசையாக நடைபெறும். இவ்விழா வில் சிரவணத்தன்று மங்கல வாத்தியங்கள் முழங்க பெருமாள், தாயார் சிறப்பு அலங்காரத்தில் திருமண் டபத்தில் எழுந்தருள திருக்கல்யாண வைபவமும், சுவாமி திருவீதியுலாவும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பதினொரு நாட்களும் ஸ்வாமி, தாயார் திருமண்டபத்தில் எழுந்தருள சிறப்பு நாதஸ்வர கச்சேரி, வாய்ப்பாட்டு, வீணை கச்சேரி, வயலின் கச்சேரி, பரத நாட்டியம், புல்லாங்குழல் இன்னிசை கச்சேரி, பொம்மலாட்டம் என தினம் ஒரு நிகழ்ச்சி நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு: மற்ற நாட்களில் தங்கள் மகள், மகனுக்கு விரைவில் திருமணம் நடைபெற வேண்டி பிரார்த்தனையாகப் பெருமாளுக்கு திருக்கல்யாண உத்ஸவம் பக்தர்கள் விருப்பத்தின்படி நடத்தப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### சிரவண தீபம் மற்றும் விரத சிறப்பு

பெருமாள் திருஅவதார தினமான மாத சிரவணத் திருநாட்களில் பக்தர்கள் இங்குள்ள திருக் குளத்தில் நீராடி, பெருமாளை சேவித்து காலை 11.00 மணியளவில் மூவகை தீபம் கொண்ட சிரவண தீபம் தரிசனம் செய்தால் நாளும் நலம் உண்டாகும் என்பது ஐதீகம்.

**திரு. ப.சரவணன்,**
**குடந்தை, 86108 19456**



**மாத்ருஸ்ரீ தரிகொண்ட**
**வெங்கமாம்பா அருளிய**

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

ஆகஸ்ட் மாத இதழின் தொடர்ச்சி...

இவ்வெற்றி வாயு தேவனுக்கே. ஆனாலும், நீ மிகவும் உயர்ந்தவன் சிறந்தவனே” என்று சேஷனிடம் உலக நன்மையைக் கருதி பிரம்மாதி தேவர்கள் கேட்டுக் கொண்டனர்.

சேஷனும், பிரம்மா இந்திரன் முதலானவர்களின் உபதேசத்தை ஏற்றுக் கொண்டான். தான் உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்த பற்றை சிறிது தளர்த்தினான். இதுதான் சமயம் எனப் பார்த்து வாயுதேவன் தன் வலிமை முழுவதும் பயன்படுத்தினான். தன்னுடைய கட்டை விரலை நிலத்தின்மீது வைத்து மலை பறந்து செல்லும் படியாகச் செய்தான். அந்த வாயுவின் வேகத்திற்கு வேங்கடாத்ரி கங்கை நதிக்கு தெற்குப் பகுதியில் 200 யோசனைகள் தூரத்தில் உள்ள கிழக்குக் கடலுக்கு 5 யோசனைகள் தூரத்தில் உள்ள ஸ்வர்ணமுகி கரையின் வடக்கு பக்கத்தில் உள்ள காடுகள் மத்தியில் விழுந்தது. வாயுதேவன் தானே வெற்றிப் பெற்றேன் என்ற வெற்றிப் பெருமிதத்தோடு தன் வழியைப் பார்த்துக் கொண்டு சென்று விட்டான். இவையனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த சேஷன் தோல்வி அடைந்ததை எண்ணி வருத்தப்பட, பிரம்மா இந்திரன் முதலானோர் சேஷனுக்கு ஆறுதல் கூறினர்.

“சேஷா! தோற்றுவிட்டேன் என வருந்த வேண்டாம். நீ இந்த வேங்கடமலையை விட்டு எங்கும் போகாதே. வேங்கடகிரியே உனக்கு எல்லாமுமாக நினைத்துக் கொள். உன் மீது உள்ள அன்பின் காரணமாக சுக்கரபாணி வேங்கட மலையில் கலிகாலம் முடியும் வரையில் அருள் சாதிக்கப்போகிறார் என வளூரருங்காலத்தைப் கூஹிர்றி எடுத்துக் கூறினார். அப்பொழுது சேஷன், “தேவரீர்! நான் வாயு தேவனுடன் போட்டிப் போட்டது சரியல்ல. அது நான் செய்த முதல் தவறு. மேலும், போட்டிக்கு சம்மதித்தது இரண்டாவது தவறு ஆகும். இது போன்ற ஒரு நிகழ்ச்சியை ஹரி எவ்வாறு ஏற்றுக் கொள்வார்.

என் கர்வமே இப்படி ஒரு அவமானத்திற்கு என்னை ஆளாக்கியது என வருந்தினான். அப்போது பிரம்மா “உனக்கு ஏன் கவலை? ஸ்வாமியை இந்த மலை மீது நிவாசம் இருக்கும்படி செய்ய என்னால் முடிந்த முயற்சி செய்து வருவேன். எனவே இம்மலையே உனக்கு சர்வமும் என நினைத்துக் கொள். ஹரியை இங்கு வரும்படி செய்வது என் பொறுப்பு” எனக்கூறி சேஷனின் தலை மீது மெல்லத் தடவியபடி அபயம் தந்து தன்னுடைய உலகமாகிய பிரம்மலோகத்திற்குச் சென்றார். இந்திரன் முதலானவர்களும் அப்படியே புறப்பட்டுச் சென்றனர். சேஷன் வைகுண்ட நாதனுக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து மலை வடிவம் தாங்கினார்.

சேஷாத்ரி தலைப்பகுதியில் வேங்கடாத்ரி. வாலின் கடைசி பகுதியில் அஹோபிலம். இந்த மலைகள் முழுவதும் தீர்த்தமயமாகும். இப்புண்ணிய பிரதேஷத்தில் தேவதைகள் ஒளி வடிவமாகவும், ரிஷிகள் விலங்குகளின் வடிவம் தாங்கியும், பித்ரு கணம் பறவைகள் வடிவிலும், கின்னர் முதலானோர் கற்களாகவும் இருப்பர் என வரம் தந்து தேவர்களும் புறப்பட்டுச் சென்றனர்.




திருமலையில் இலவசமாக ஆர். ஓ. முறைப்படி ஆங்காங்கே குடிநீர் நிறுவி பக்தர்களின் தாகம் தீர்க்கக் கொண்டு வந்ததே “தி.தி.தே. ஜலப் பிரசாத திட்டம்” ஆகும். பக்தர்களின் வசதிக்காக திருமலையில் சுத்தி கரிக்கப்பட்ட குடி நீர் அனைத்து இடங்களிலும் கிடைக்கும் விதமாக தி.தி.தே. பக்தர்களுக்காக ஏற்பாடு செய்து உள்ளது.



திருமலையில் பக்தர்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இலவசமாகச் செல்வதற்கு தகுந்த வகையில் ஸ்ரீவாரி தர்ம ரதம் என்கிற பெயரில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றது. இதன் உதவியால் பக்தர்கள் திருமலையில் பெரும்பாலான இடங்களுக்கும் செல்லலாம். திருமலையில் மட்டும் அல்லாமல் திருப்பதியிலும் இரயில் நிலையத்தில் இருந்து பேருந்து நிலையம், அலிபிரி, ஸ்ரீவாரி மெட்டு மலைவழிப்பாதை வரை தி.தி.தே. இப்பேருந்தை இயக்கி வருகிறது. இதனால் இரயில் நிலையத்தில் இருந்தும், பேருந்து நிலையத்திலிருந்தும் பக்தர்கள் மலை ஏறும் மார்க்கம் வரை இப்பேருந்தில் சென்று பின்னர் திருமலைக்குச் செல்லலாம்.

ஸ்வாமி புஷ்கரணி அனைத்துப் பாவங்களையும் அழிக்க வல்லது. கங்கை முதலான நதிகள் இந்த புஷ்கரணியில் சங்கமமாகி இருக்கும். புஷ்கரிணியில் நீராடினால் உறுதியாக வீடுபேறு அடைவர். இது வரையில் நான் சேஷாத்ரி வைபவத்தை உங்களுக்குக் கூறினேன். இனி வேங்கடாத்ரி வைபவத்தைக் கூறுகிறேன். இதில் மாதவன் எனும் பிராமணனின் கதையும் கூறுகிறேன் கேளுங்கள்.

ஸ்ரீகாளஹஸ்தியில் புரந்தர சோமயாஜி என்னும் பிராமணன் மிகவும் சிறப்பாக வாழ்ந்து வந்தான். அவனுக்கு மாதவன் எனும் மகன் இருந்தான். மாதவனுடைய மனைவி சந்திரரேகா இருவரும் நல்லவர்களே. ஆனால், வினைப்பயன் காரணமாக ஒரு நாள் பகல் பொழுதில் காம உணர்ச்சிக்கு ஆளாகி சந்திர ரேகாவை தன் ஆசைக்கு இணங்கும்படி வற்புறுத்தினான். ஆனால், இது சரியான செயல் அல்ல. தவறு எனத் தவிர்த்தாள் சந்திர ரேகா. மேலும், இச்செயல் தர்மத்திற்கு எதிரானதும் கூட என்றும் எடுத்து உரைத்தாள்.

முடிவாக சந்திரரேகா நீங்கள் தர்பைக்காகவும் பூக்களைக் கொண்டு வருவதற்கும் வருகிறபடி நதிக்கரைக்கு வரவும். நானும் நீர்க்கொண்டு வருவதற்குக் குடத்துடன் அங்கே வருகிறேன் என்று கூறினாள். மாதவனும் ஸ்வர்ணமுகி நதிக் கரைக்கு வர, அங்கே அழகான ஒரு சண்டாளி பெண்ணைப் பார்த்தான். அவள் அழகில் மயங்கினான்.

அங்குக் குடத்துடன் வந்த தன் மனைவி சந்திரரேகாவைப் பார்த்து, “நான் உன்னை சோதிப்பதற்காக அப்படியொரு செய்யத்தகாத கோரிக்கையை உன்னிடம் வைத்தேன். எனக்கு இப்பொழுது அதுபோன்ற எண்ணம் ஏதும் இல்லை. நீ தண்ணீர்க்குடத்தோடு வீட்டிற்குச் செல்வாயாக. நான் சிறிது நேரம் கழித்து வருகிறேன்” எனக்கூறி சந்திர ரேகாவை அனுப்பி வைத்தான். அப்பொழுது சந்திரரேகா தன் கணவனிடம் உண்டான மாற்றத்தைக் கண்டு மகிழ்ந்தாள். தர்மத்திற்கு மாறாக எந்தவொரு தவறும் நடைபெறாததை எண்ணி மனநிம்மதியோடு வீட்டிற்குத் திரும்பினாள்.

தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

●●● டாக்டர் கி.ஜ.நிகிலா வெங்கட், கோவை, 89409 91234

திருப்பூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பெதப்பம்பட்டி – சோமவாரப்பட்டி கிராமத்தில் ஸ்ரீ கிருஷ்ண தேவராயரால் திருப்பணி செய்யப்பட்ட ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீ வெங்கடரமண பெருமாள் திருக்கோயில் அமைந்துள்ளது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு ஸ்ரீ வெங்கடரமண பெருமாள் ஆலயம் திருப்பணிகள் நடைபெற்று கடந்த சித்திரை மாதம் 31 ஆம் நாள் அதாவது 11. 5 .2025 அன்று ஸம்ப்ரோக்ஷணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இத்திருக்கோயிலில் தினந்தோறும் நித்திய பூஜைகளோடு, ஒவ்வொரு திருவோண நட்சத்திர நன்னாளிலும் ஸ்ரீ வெங்கடரமணப் பெருமாளுக்கு திருமஞ்சனம் மற்றும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகிறது. இந்த பூஜையில் கலந்து கொள்பவர்களின் வேண்டுதல்கள் அனைத்தும் சீக்கிரம் பலிதமாவதை நாம் கண்ணார காண முடிகிறது. திருமணத்தடை நீங்கிடவும், குழந்தை பாக்கியம் கிடைத்திடவும் மற்றும் இல்லற வாழ்வில் ஏற்படும் அனைத்து துன்பங்களையும் போக்கியும் நல்லருள் புரிகிறார் நமது வெங்கடரமணப் பெருமாள். பிரதி மாதம் தேய்பிறை திரையோதசி திதி அன்று நோய் தீர்க்கும் ஸ்ரீ தன்வந்திரி பகவானுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெறுகிறது. மிக உன்னதமான மந்திரங்கள் ஓதி ஸ்ரீ தன்வந்திரி பகவானுக்கு ஸ்ரீ தன்வந்திரி ஹோமம் நடத்தி, மூலிகை தைலம் மற்றும் மூலிகை நெய் பிரசாதமாக வழங்கப்படுகிறது.

மேலும், ஸ்ரீ லட்சுமி நாராயணன் சன்னதி, ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் சன்னதி, ஸ்ரீ சக்கரத்தாழ்வார் யோக நரசிம்மர் சன்னதி, கருடாழ்வார் சன்னதிகளும் உள்ளன. பதினோரு அடி உயரத்தில் விஸ்வரூப பஞ்சமுகி ஆஞ்சநேய ஸ்வாமி எழுந்தருளி உள்ளார். ஆஞ்சநேய ஸ்வாமிக்கு பிரதி மாதம் மூல நட்சத்திரத்தன்று சிறப்பாக திருமஞ்சனம்,சிறப்பு அலங்கார பூஜைகள் நடைபெற்று, மக்களின் பயம் நீங்கி தைரியத்துடன் வாழ்வதற்கும், தொழில் தடைகள் நீங்கி சுபிட்சம் அடைவதற்கும், கல்வியில் சிறந்து விளங்குவதற்கும் மிகச் சிறப்பாக ஹோமமும் நடைபெற்று பிரசாதங்கள் வழங்கப்படுகிறது.

பெதப்பம்பட்டி சுற்றியுள்ள 50ற்கும் மேற்பட்ட கிராமங்களுக்குப் பிரதான தெய்வமாகக் கொண்டாடப்படும் ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீ வெங்கடரமணப் பெருமாள் ஆலயத்தில் இருந்து அருகிலுள்ள மிகப் பழமையான தெய்வமாகக் கொண்டாடப்படும் ஸ்ரீகண்டியம்மன் கோயில் திருவிழா காலங்களில், கண்டியம்மனுக்கு அண்ணன் பெருமாளாக எழுந்தருளி ஒவ்வொரு வருடமும் சீர்வரிசைகள் கொண்டு செல்வது வழக்கமாகக் கொண்டாடப்படுகிறது. ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீ வெங்கடரமணப் பெருமாள் மக்கள் அனைவரும் சகல ஐஸ்வர்யங்களோடும், பூரண ஆயுள் ஆரோக்கியத்தோடும் வாழ எழுந்தருளி சேவை சாதிக்கிறார். நாமும் ஸ்ரீ வெங்கடரமணப் பெருமாளின் பாதம் பணிவோமாக.

# வேண்டுதல்களை நிறைவேற்றும் ஸ்ரீவெங்கடரமணப் பெருமாள்





## திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் பிரம்மோத்ஸவம்

### 17-11-2025 முதல் 25-11-2025 வரை

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 16-11-2025 | ஞாயிறு | லக்ஷ குங்குமார்ச்சனை | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 17-11-2025 | திங்கள் | திருச்சி உத்ஸவம்- துவஜாரோஹணம் | சிறிய சேஷ வாகனம் |
| 18-11-2025 | செவ்வாய் | பெரிய சேஷவாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 19-11-2025 | புதன் | முத்துப்பந்தல் வாகனம் | சிம்ம வாகனம் |
| 20-11-2025 | வியாழன் | கல்ப விருக்ஷ வாகனம் | ஹனுமத் வாகனம் |
| 21-11-2025 | வெள்ளி | பல்லக்கு உத்ஸவம் மாலை: வஸந்தோத்ஸவம் | யானை வாகனம் |
| 22-11-2025 | சனி | சர்வபூபால வாகனம், தங்கத்தேர் | கருட சேவை |
| 23-11-2025 | ஞாயிறு | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 24-11-2025 | திங்கள் | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 25-11-2025 | செவ்வாய் | அவப்ருதம், சக்கரஸ்நானம், பஞ்சமி தீர்த்தம் | திருச்சி உத்ஸவம், துவஜாவரோஹணம் |

## பிரம்மோத்ஸவத்தில் பிராட்டி தரிசனம்



# கஜ வாகனத்தில் கஜலக்ஷ்மி





"கஜம் ஐஸ்வர்யம்" அதாவது கஜம் (யானை) என்றாலே ஐஸ்வர்யம். ஐஸ்வர்யத்தையே தனது வாகனமாக வைத்திருப்பவள் ஸ்ரீபத்மாவதித் தாயார். தாயாரின் பிரம்மோத்ஸவத்தில் ஐந்தாம் நாள் கஜ(யானை) வாகனம் மிகவும் பிரசித்தி பெற்றது.

ஸ்ரீஸூக்தம் கஜேந்திரனுக்கும், தாயாருக்குமான நித்ய உறவினை மிக அழகாகக் கூறுகிறது. கஜ வர்கத்திற்குப் பெருமை சேர்க்கக் கூடியதான நான்கு தந்தங்களைக் கொண்ட ஐராவதம், பாற்கடலில் அமுதம் கடைந்தபோது மஹாலக்ஷ்மியுடன் தோன்றியது. பாற்கடலில் தோன்றிய அழகே வடிவானத் தாயாருக்கு கஜராஜாக்கள் பக்தியோடு அபிஷேகம் செய்தன என சுவாமி வேதாந்த தேசிகர் ஸ்ரீஸ்துதியில் இயம்புகிறார்.

புராணங்களில் நான்கு வேதங்களைக் குறிக்கும் நான்கு யானைகள் தாயாருக்கு பால் பொழிவதாக விவரிக்கப்பட்டுள்ளது.

திருக்கோயில்களில் திருவீதி உலா உற்சவத்தின்போதும் மங்கலகரமான யானைகள் முதலில் வருவதை நாம் கண்டிருப்போம். ஸ்ரீபத்மாவதித் தாயாருக்கு உகந்தது யானை வாகனம். திருச்சானூரில் பிரம்மோத்ஸவத்தின் போது ஏற்றப்படும் கொடியிலும் கஜராஜாவான யானையின் வடிவம் வரைந்திருப்பதனைக் காணும் போது யானையின் முக்கியத்துவத்தை நாம் அறிய முடிகிறது.



## ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம், ஸ்ரீநிவாசமங்காபுரம்

16-10-2025, வியாழக்கிழமை
அங்குரார்ப்பணம்
17-10-2025, வெள்ளிக்கிழமை
பவித்ர பிரதிஷ்டை
18-10-2025, சனிக்கிழமை
பவித்ர சமர்ப்பணம்
19-10-2025, ஞாயிற்றுக்கிழமை
பவித்ரோத்ஸவம் நிறைவு

## ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம், ரிஷிகேஷ்

05-10-2025, ஞாயிற்றுக்கிழமை
அங்குரார்ப்பணம்
06-10-2025, திங்கட்கிழமை
பவித்ர பிரதிஷ்டை
07-10-2025, செவ்வாய்க்கிழமை
பவித்ர சமர்ப்பணம்
08-10-2025, புதன் கிழமை
பூர்ணாஹுதி





## ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி பவித்ரோத்ஸவம் வாயல்பாடு (வால்மீகிபுரம்)

04-10-2025, சனிக்கிழமை
அங்குரார்ப்பணம்
05-10-2025, ஞாயிற்றுக்கிழமை
பவித்ர பிரதிஷ்டை
06-10-2025, திங்கட்கிழமை
பவித்ர சமர்ப்பணம்
07-10-2025, செவ்வாய்க்கிழமை
பவித்ரோத்ஸவம் நிறைவு




# ஆழ்வார்கள் பாசுரங்களில் மலர்களின் மகத்துவம்

– திரு.சதா. ஸ்ரீஹரிஹரன், கும்பகோணம்,
9488241383.

உலகளவில் வாழும் மானிடரின் மனப்பிணி அகற்றும் இறை வழிபாட்டில் அகம் , புறம் என இரு வகையுண்டு. புறவழிபாட்டில் மனம் தொடர்ந்து ஈடுபட்டு வர, அது அக வழிபாட்டில் கொண்டு செல்லும் என்பர்.

இதனை நெஞ்சமே திருக் கோயில் அதில் இறை நினைவே நறுமணம், உணர்ந்த அன்பே அர்ச்சனையென இறைவனைத் தியானித்து பூசிக்கும் நெறியே அக வழிபாடாகும். இது எல்லோருக்கும் எளிதில் இயலாது. எனவே கடவுள் திருவுருவங்களை முன் நிறுத்தி மலரிட்டுத் துதிக்கும் புற வழிபாடே தொடக்க நிலையில் தேவைப்படுவது ஆகும்.

அகவழிபாட்டில் அனுபவம் கொண்ட ஆழ்வார்களும், நாயன்மார் களும், பிற அருட் சான்றோர்களும் உலக நன்மைக்காகவே புற வழி பாட் டினையும் புரிந்து வந்துள்ளார்கள்.

இப்புற வழிபாட்டில் இறைவ னுக்கு மலர் தூவி (சூட்டி) செய்யப் படும் வழிபாட்டை பூசை என்பார்கள் (பூ+செய்=பூசை). இதனை வட மொழியில் புஷ்பாஞ்சலி என்பர்.

எல்லா சமயத்தினரும், கொள்கையினரும் ஏற்றுக்கொள்ளும் பண்புடைய இவ்வழிபாடு மிகத் தொன்மையானதாகும். இவ்வண்ணம் மலர்கள் கொண்டு செய்யப்படும் பூசைகளில் சமயப் பண்பாட்டு அடிப்படையில் நான்கு இடங்களில் வளரும் வருணனைக் கும், வழிபாட்டுக்குமாகப் பயன்படும் நீர்ப்பூ, நிலப்பூ, கொடிப்பூ, கோட்டுப் பூ ஆகிய பூ வகைகளில் ஸ்ரீமந்நாராய ணனுக்கு ஆழ்வார்கள் சூட்டி மகிழ்ந்த முப்பத்து நான்கு (34) வகைப் பூக்களை அட்டவணைப்படுத்திக் காட்டி உள்ளார் அண்ணாமலை பல்கலைக்கழகம் வெளியீடு தமிழ்ப் பண்பாட்டு மலர் வரலாறு நூலின் ஆசிரியர் வைத்தியலிங்கம் அவர்கள் – நன்றி.

ஆழ்வார்கள் அருளிச்செய்த பாசுரங்களில் இடம் பெற்ற மலர்கள் முப்பத்து நான்கு (இலை எனும் பத்திரத்தையும் சேர்த்து). தாமரை, துழாய், முல்லை, செண்பகம், பாரிஜாதம், ஞாழல், சந்தனப் பூ, தாழை, ஆம்பல், புன்னை, பாதிரிப்பூ, தோன்றி, கொன்றை, குரவம்பூ, செருந்தி, காவி, குருக்கத்தி, முருகம்பூ, வேங்கை, சூதகம், பிண்டி, அடப்பம்பூ, குறிஞ்சி, மல்லிகை, இருவாட்சி, கூவிளை, கமுகு, காயாம்பூ, குருந்தமலர், பூளைப்பூ, கருவிளை, மாதுளம்பூ, மகிழ், மருக்கொழுந்து ஆகியவையாகும்.

### பாசுரங்களில் மலர்ந்த, கலந்த பூக்கள்:

பன்னிரு ஆழ்வார்களுள் மதுரகவி ஆழ்வார் மட்டும் தனது பாசுரங்களில் எந்த ஒரு மலரையும் கையாளவில்லை என்பதும், தாமரை, துழாய் (துளசி பத்திரம்) ஆகிய இரண்டையும் கொண்டு மற்றைய பதினோர் ஆழ்வார்களும் பாடியுள்ளனர். அதிலும் திருப்பாணாழ்வார் இவ்விரு மலர்களை மட்டுமே பாடியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பேயாழ்வார் வேங்கைப் பூவை அதிகப்படியாகவும், பூதத்தாழ்வார் குரவம்பூ, மல்லிகை என்ற இரு மலர்களையும், தொண்டரடிப்பொடியாழ்வார் முல்லை, கமுகு என்ற இருமலர்களையும், திருமழிசையாழ்வார் கொன்றை, செருந்தி என்ற இரு மலர்களைபும், பொய்கையாழ்வார் செருந்தி, காயாம்பூ. குறிஞ்சி என்ற மூன்று மலர்களையும், ஆண்டாள் முல்லை, பாரிஜாதம், ஞாழல், ஆம்பல், புன்னை, தோன்றி, கொன்றை, செருந்தி, பூவைப்பூ, குருக்கத்தி, முருகம்பூ, சூதகம், கருவிளை, கருங்குவளை என்ற பதினான்கு மலர்களையும் அதிகப்படியாகக் கையாண்டுள்ளார்கள்.

நம்மாழ்வார் செண்பகம், சந்தனப்பூ, தோன்றி, குரவம்பூ, முருகம்பூ, சூதகம், பிண்டி, அடப்பம்பூ, இருவாட்சி, பூளைப்பூ, கூவிளை, கருவிளை, மாதுளம்பூ, மருக்கொழுந்து என்ற மலர்கள் நீங்கலாக இருபது மலர்களைக் கையாண்டுள்ளார்.

மருக்கொழுந்தை மலர்வகையாகச் சேர்த்த பெருமை பெரியாழ்வாருக்கே உரியது. பெரியாழ்வார் சந்தனப்பூ, முருகம்பூ, சூதகம், பிண்டி, அடப்பம்பூ, கமுகு, குருந்தமலர், பூளைப்பூ, கூவிளை, கருவிளை என்ற மலர்களைத் தவிர மற்றைய இருபத்து நான்கு மலர்களைப் பாடியுள்ளார்.

திருமங்கையாழ்வார் இருவாட்சி, மாதுளம்பூ, மருக்கொழுந்து நீங்கலாக முப்பத்தொன்று மலர்களைக் கையாண்டு நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் மிகுதியான மலர்களைப் பாடிய பெருமை பெற்றிருக்கிறார்.

மேலும், இவற்றுள் தாமரைமலர் 502 இடங்களிலும், துழாய் (துளசி – பத்திரம்) 185 இடங்களிலும் ஆழ்வார்கள் அருளிச்செய்த நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் கையாளப்பட்டுள்ளமை கூடுதல் சிறப்பாகும்.

# திருமலையில் புஷ்ப யாகம்

**இயற்கையின் சீற்றத்தினால், இப்பூமியில் நாம் செய்யும் பலவித அபசாரங்களினால் பூமா தேவி சீற்றம் கொள்கிறாள், வருந்துகிறாள். அவள் வருத்தத்தையும், சீற்றத்தையும் போக்க பிராயசித்தமாக, திருவேங்கடமுடையானின் பிரம்மோற்சவம் முடிந்து, அடுத்த திருவோண நட்சத்திரத்தன்று புஷ்ப யாகம் செய்யப்படும். எல்லாவித மலர்களும் ஐந்து டன்களுக்கும் மேலாக யாகமாக கூடை கூடையாக திருமலையப்ப ஸ்வாமிக்கு பாதாதி கேசம் சேர்ப்பார்கள். தேவர்கள் பூமாரிப் பொழிவது போலிருக்கும். "தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது..." இந்த புஷ்ப யாகத்தைச் செய்தால் "போய பிழையும் தீயினில் தூசா"கும். இந்த புஷ்பயாகம் 15ஆம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்டது. பிறகு ஏனோ நடுவில் நின்று விட்டது. மீண்டும் 1980–லிருந்து தொடர்ந்து நடைபெற்று வருகிறது.**

**அனந்தாழ்வான் தினமும் ராமாநுஜ நந்தவனத்திலிருந்து புஷ்பங்களைக் கொணர்ந்து வந்து யமுனைத்துறை மண்டபத்திலேயே தொடுத்துப் பின்பு மாலைகள் நிறைந்த பூக்கூடையைத் தலையில் வைத்து, நறுமணம் தமது மூக்குக்கு இலக்காகாமல் இருக்கத் தம் மூக்கையும், வாயையும் துணியால் மூடி கட்டிக் கொண்டு மிக்க பக்தியுடன் குடை சாமரம் முதலானவற்றுடனும், மங்கள வாத்தியங்களுடனும் அம்மண்டபத்திலிருந்து புறப்பட்டு கோயிலை வலம் வந்து, பெருமாள் திருவாராதனை சமயத்தில் தினமும் சாத்திய வரலாறு அறியற்பாலதாகும்.**

**புஷ்ப மாலைக்கு இந்த அளவுக்கு அபசாரப்படாமல் கைங்கர்யம் செய்தது போல் தான் இந்த புஷ்ப யாகமும் அபசாரப் படாமல் பய பக்தியுடன் செய்யப்படுகிறது. அபசாரப்பட்டால் அதைப் போக்குகிறது புஷ்ப யாகம். நாமும் அந்த புஷ்ப யாகத்தில் கலந்து கொண்டு உய்வோமாக!**

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

## சோதியானவன்

*"நீசனேன் நிறையொன்றுமிலேன் என்கண் பாசம் வைத்த பரஞ்சுடர் சோதிக்கே"* என்கிற போது "எல்லா உலகம் தொழும் ஆதிமூர்த்தி" என்றால் தன்னையும் (ஆழ்வார்) சேர்த்துத்தானே சொல்லப்பட்டது. கடைப்பட்டவனான தனக்குத் தந்த போது *"வானவர் ஈசன்"* என்பது ஒரு ஏற்றம் இல்லை. தன்னைவிட தாழ்ந்தவனைக் காண முடியாமல் திருமலையில் வந்து நின்றானாம்.

தீதில் சீர் – குற்றம் ஒன்றும் இல்லாத திருக்குணங் களை உடையவன் எம்பெருமான் மிகத் தாழ்ந்தவனான தன்னோடு கலந்ததனால் அவனுடைய வடிவு மிகவும் ஒளி படைத்தது. மேலும், பிராட்டியோடு கலந்தது போல நின்றான் என்கிறார் ஆழ்வார். வேதம் ஓதுகின்றவர்களால் நிரூபிக்கப்பட்டவனான எல்லா வேதங்களிலும் பரம போக்ய பூதனனாய் இருக்கின்ற எம்பெருமான் வேதமே அறியாதவர்களுக்கும் எளியனாய் திருமலையில் சேவை சாதிக்கிறான் என்றபடி.

## வினை தீர்ப்பவன்

"வேங்கடங்கள்" என்பதால் மூன்று விதமான கடன்கள் என்பது வேதத்தில் சொல்லப்படுவதாகும். அதாவது அந்தணர்களை விஜர் என்பர். தாய் வயிற்றில் பிறப்பது முதல் வகை; அடுத்தது 7 வயதில் உபநயனம் நடைபெறுவதற்கு ஆசாரியரிடம் மந்திரம் உபதேசம் பெறுவது இரண்டாவது பிறப்பு;

பிரம்மச்சாரியானவன் வேதம் கற்றுக் கொள்வதால் ரிஷிகளின் கடனையும், யாகம் செய்வதால் தேவர்களின் கடனையும், பெற்றோர்களுக்கு செய்வதால் பித்ரு கடனையும் செய்ய வேண்டும் என்பதை, *"திரிபிர் குணவா ஜாயதே ப்ரஹ்மசர்யேண ரிஷிப்யோ யஜ்ஞேந தேவேப்ய:, ப்ரஜயா பித்ருப்ய ஏஷ வா அந்ருண:"* என்று வேதம் பகருகின்றது; மூன்று கடன்களையும் தீர்த்து விட்டு, பிறகு மனதை மோக்ஷத்தில் ஊன்ற வைக்க வேண்டும்.

கடன்களைத் தீர்க்காமல் மோக்ஷத்தை விரும்பினால் அதோகதியை அடைவான் என்பதை *"ருணாநி த்ரீண்ய பாக்ருத்ய மநோ மோக்ஷே நிவேசயத், அநபாக்நித்ய, மோக்ஷம் து ஸேவமாநோ வ்ரஜத்யத:"* என்று மநு மஹர்ஷியின்படி நடைபெறும் என்பது. *"வேங்கடத் துறை வார்க்கு நம:!"* என்று சொல்லி விட்டால் அம்மூன்று கடன்க ளையும் தீர்க்கப்பட்டனவாகி விடும் என்கிறார் ஆழ்வார் .

## பக்திக்கு ஆட்பட்டவன்

பக்திக்கு ஆட்பட்டவன் நமக்கு விருப்ப மான அடிமைகளை எல்லாம் பெறுவதற்கு திருவேங்கடமுடையானை அடைய வேண்டுவ தில்லை. திருமலையின் அடைக்கலமே போதும் என்கிறார். புஷ்பம், தீர்த்தம், தூபம், தீபம் ஆகிய இவற்றை மிகச்சிறந்த பொருளாகத் தேடி சம்பாதிக்க வேண்டாம், பக்தி ஒன்றே போதும் என்பது, *"புஷ்பம் பலம் தோயம் யோமே பக்த்யா ப்ரயச்சதி"* என்கிறார் கீதாச்சாரியன்.



# நம்மாழ்வார் விரும்பும் திருவேங்கடம்

திரு. கே.கே.ஏ. ரங்கராஜன்,
திருப்பதி, 99855 99669.

இவ்விடத்தில் பேருரையில் ஒரு ஐதிஹ்யத்தை எடுத்துக்காட்டுகிறார் உரை ஆசிரியர். பூரி என்னும் க்ஷேத்திரத்தில் ஜகன்னாதப் பெருமானுக்குச் செண்பகப்பூ சாத்துவது வழக்கமாம். இப்பூ கிடைப்பது அரியதாகில் அங்குள்ள அரசர்கள் அப்பூவின் விலையை மேன்மேலும் ஏற்றிக் கொண்டிருப்பார்களாம். ஒரு அரசன் இறுதியாக மிகுந்த விலை கொடுத்து அப்பெருமானுக்குச் சமர்ப்பித்தானாம். அன்றிரவு அப்பெருமான் அவனது கனவில் வந்து "நீ சாத்தின பூ எனக்கு மிகவும் கனத்திருக்கிறது" என்றானாம். *"அநந்ய ப்ரயோஜனமாய் பூ நீர் சுடர் தூபங்களை நம:"* என்று பக்தியோடு சொல்லி சமர்ப்பித்தாலே போதுமாம். திருமலை, எம்பெருமானுக்கு எப்படி சேஷப்பட்டிருக்கிறதோ அப்படியே நாமும் சேஷப்பட்டிருக்கும் படியாகச் செய்து கொடுக்கும் என்பது ஒரு நிர்வாகம் என்பர் காஞ்சி ஸ்வாமி .

### திருமலையின் பெருமை

எம்பெருமானுக்கும் மிகவும் அடையத்தக்கதான திருமலை நமக்கும் மிகவும் அடையத்தக்கது. அது நமக்கு ஒரு பலனை அளிக்க வேண்டுவது இல்லை. ஒரு பலனையும் தாரா தொழிலும் அதுவே நமக்கு அடையத்தக்கது என்கிறார் ஆழ்வார்.

விபவாவதாரத்திலும், அர்ச்சாவதாரத்திலும் ஒரு வேறுபாடு இல்லாது எப்போதும் மலையே ரக்ஷகமென்று நயமாக அருளிச் செய்வார்களாம். சென்ற பாசுரத்தில் ஒரு ஊருக்கு உதவியைச் சொல்லிற்று. உலகுக்கு எல்லாம் உதவியை இதனால் சொல்லுகிறது. திருவிக்ரமாவதாரத்தை இங்கு நினைப்பது. "உள்ளே எழுந்தருளி இருக்கின்றவன் நானும் வேண்டா, திருமலை ஆழ்வானே போதும்" என்பது திவ்யார்த்த தீபிகை. திருமங்கையாழ்வாரும், *"திருவேங்கடமடை நெஞ்சே"* என்று ஒன்பதின்கால் தம் மனதுக்குச் சொல்லுகிறார்.

### ஆழ்வாரின் விருப்பம்

*"வைத்த நாள் வரை எல்லை குறுகிச் சென்று எய்த்திளைப்பதன் முன்னம் அடைமினோ"* என்று எம்பெருமான் நமக்கு காரணங்களைக் கொடுத்தது அவன் உகந்தருளின நிலங்களுக்குச் சென்று கைங்கரியம் செய்ய வேண்டும் என்பது. அதுவும் உடல் தளர்வதற்கு முன்னமே செல்ல வேண்டும் என்கிறார். கைங்கர்யத்தைச் செய்யும் அவர்கள் ஆயாஸமின்றிக்கே மிகவும் இனிதாகச் செய்வதற்கு பாங்கானவிடம் திருமலை என்பதை,

*"பைத்த பாம்பணையான் திருவேங்கடம்*
*மொய்த்த சோலை மொய் பூந்தடந்தாழ்வாரே"*

என்ற ஈற்றடி காட்டுகிறது.

### பயனுரைத்தல்

இத்திருவாய்மொழி ஓத வல்லார்கள் உலகமெல்லாம் கொண்டாடும்படியான வாழ்ச்சியைப் பெறுவார்கள் என்று பயனுறைத்துத் தலைக் கட்டுகிறார் ஆழ்வார் *"வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம் புகழவே"* என்றும் அதாவது கைங்கரிய சாம்ராஜ்யமாகிற வாழ்வை வெய்தி எந்நாளும் அந்த வாழ்வுடன் இருக்கப் பெறுவார்கள் என்றபடி.

*முற்றும்...*


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**திருமலையானின் அக்ஷர தீபிகை**

# ஸப்தகிரி




மலர் எழுத்தால் ஸ்வாமியை அர்ச்சிக்கும் ஸப்தகிரி உங்களுடையது. அதனை மேன்மேலும் வளர்ச்சியடைய செய்வதும் ஸ்ரீவாரி சேவையே...

- பரந்தாமனைத் தரிசிப்பதற்கும், அவரைச் சென்றடைவதற்கும் எத்தனையோ வழிகள் உண்டு.
- அனாதைகளின் காப்பாளன், ஆபத்தைத் தவிர்ப்பவனான அந்த ஏழுமலையானை அக்ஷர (எழுத்துப்) பூவினால் ஆராதிக்கின்றனர்.
- திருமலையானின் அக்ஷரப் பிரசாதமான ஸப்தகிரியைப் படிப்பதும், படிக்க வைப்பதும் அவனுக்குச் செய்யும் திருத்தொண்டே.
- "ஸப்தகிரி" படியுங்கள். உங்கள் அன்பானவர்களையும் படிக்க வையுங்கள். திங்கள்தோறும் திருமலையானை இந்த ஸப்தகிரி மூலம் தரிசியுங்கள். சிறப்பைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் 'ஸப்தகிரி' வாசகரானால்... உங்கள் அன்பானவர்களுக்குப் பரிசாக அளியுங்கள். சந்தா செலுத்த வையுங்கள். உங்கள் பக்கத்து வீட்டாருக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் ஸப்தகிரி குறித்து கூறுங்கள்.
- உங்கள் அன்பானவர்களையும் ஸப்தகிரி மூலம் ஸ்வாமி திருவருளைப் பெற வையுங்கள்.

தீபாவளி பண்டிகையைப் பொதுவாக நாம் கொண்டாடும் மாதம் ஐப்பசி மாதம். இருளை நீக்கி ஒளியைக் கொடுத்திடும் அந்தப் பண்டிகை வரக் கூடிய மாதத்தில்தான் நமக்குள் இருக்கும் இருளை, தம் பிரபந்த பாசுரங்களின் ஒலி கொண்டு நீக்கி ஒளியைக் கொடுத்திட அயோநிஜர்களாய் (அதாவது தாயின் கர்பவாசம் அற்றவர்களாய்) முதல் மூன்று ஆழ்வார்களை ஐப்பசி மாதத்திலேயே திருஅவதாரம் செய்ய வைத்திருக்கிறான் திருமால். ஸ்ரீபாஞ்சஜந்யத்தின் அம்சமாக, சுக்ல பக்ஷம் அஷ்டமி திதி செவ்வாய்க்கிழமை கூடின திருவேங்கடவனுக்கே உரிய திருவோணம் நட்சத்திரத் திருநாளில், திருவெஃகாவில், பொற் றாமரை மலரில் அவதரித்தார் பொய்கை ஆழ்வார்.

ஸ்ரீகதாம்சரான பூதத்தாழ்வார், பொய்கை ஆழ்வார் அவதரித்த மறுதினம் நவமி திதி புதன் கிழமை அவிட்ட நட்சத்திரம் கூடிய திருநாளில், திருக்கடல்மல்லை எனும் மகாபலிபுரத்தில், நீலோத்பல மலரினில் திருஅவதாரம் செய்தார். மூன்றாவது ஆழ்வாரான பேயாழ்வார், பூதத்தாழ்வார் அவதரித்த மறுதினம் தசமி திதி வியாழக்கிழமை கூடின சதய நட்சத்திரத்தில், சிவப்பு அல்லி மலரின் மீது ஒரு கிணற்றில் திருமயிலையில் அவதரித்தார். முதலாழ்வார்கள் மூவரும் ஆதிமூலனான திருவேங்கடவனை எப்படி எல்லாம் தங்களது பாசுரங்களின் வழி பாடி பரவசமடைந்திருக்கிறார்கள் என்று பார்ப்போமா!

பொய்கையாழ்வார் ***''வினைச்சுடரை நந்து விக்கும் வேங்கடமே- வானோர் மனச்சுடரைத் தூண்டும் மலை''*** என்று தம்முடைய முதல் திருவந்தாதியில், வினைச்சுடரை அதாவது அவரவர்கள் வேண்டுகின்ற பலன்களுக்குத் தடையான தீ வினையாகிய நெருப்பை அணைக்கின்ற மலை திருவேங்கடவன் விரும்பி உறைகின்ற வேங்கட மாமலையே. அது எப்படிப்பட்ட மலையாக இருக்கிறதாம் தெரியுமா? வானோர் என்று அழைக்கப்படும் நித்ய சூரிகளுடைய, மனச்சுடரை அதாவது ஹ்ருதயமாகிற விளக்கை, திருவுள்ளமாகிய விளக்கை தூண்டி விடும் வண்ணம் இருக்கிறதாம்.



மண்ணுலகத்தினரும், விண்ணுலகத்தினரும் விரும்பி வழிபடுவது திருவேங்கடத்தையே என்றே அருளி இருக்கிறார்.

இந்தத் திருவேங்கடத்தில் அன்று பார்த்தனுக்கு சாரதியாய், பார்த்தசாரதியாய் இருந்தவனே இன்று நம்மை எல்லாம் பார்த்து,சரி செய்வதற்காக, நம் தீ வினைகள் நம்மைச் சுட்டெரிக்காமல் காக்க, நமக்காக திருமலையில் நின்று கொண்டிருக்கிறான் என்பதை ''வேதியர்கள் சென்றிறைஞ்சும் வேங்கடமே வெண்சங்கம் ஊதியவாய் மாலுகந்தவூர்'' என்றே தம் முதல் திருவந்தாதியின் 37வது பாசுரத்தில் வியந்திருக்கிறார். 38வது பாசுரத்தில், நாம் மட்டும் அல்ல அதோ அந்த மேலுலகில் உள்ள மேலான நித்ய சூரிகளும் நம்முடைய திருமால் என்று உரிமை கொண்டாடும் இடம் திருவேங்கடமே என்று ''வேங்கடமே மேலசுரர் எம்மென்று மாலதிடம்'' என்கிறார்.

''துணிந்ததுசிந்தை துழாயலங்கல் அங்கம், அணிந்தவன் பேர் உள்ளத்துப்பல்கால் பணிந்ததுவும், வேய்பிறங்குசாரல் விறல் வேங்கடவனையே, வாய்திறங்கள்சொல்லும்வகை'' எனது மனம், மணம் மிகுந்த துளசி மாலைகளை அணிந்த திருமலையில் உள்ள திருமாலையே நினைக்கிறது. அங்கமும் பணிந்தது. எனது உடல் அவனையே வணங்குகிறது. எனது வாயோ ஓயாமல் திருமலையில் மிடுக்குடன் நிற்கும் வேங்கடவனின் தன்மைகளையே எப்பொழுதும் சொல்கிறது என்கிறார் பூதத்தாழ்வார்.

45வது பாசுரத்தில், ''வேங்கடத்தான் விண்ணோர்முடி தோயும் பாதத்தான்'' என்று நம்மிடம் தேவர்களும், நித்யசூரிகளும் ஸ்ரீவேங்கடாசலபதியின் திருவடிகளை தினமும் வந்து திருமலையில் வணங்குவதாக பூதத்தாழ்வார் தெவிக்கிறார்.

பேயாழ்வாரோ அந்த துவாபரயுகக் கண்ணனே இன்று கலியுகத்தில் திருவேங்கடவனாக திருமலையில் நின்று கொண்டு நமக்கெல்லாம் அருள் மழை பொழிந்து கொண்டிருக்கிறான் என்பதை தம் மூன்றாம் திருவந்தாதியின் பல பாசுரங்களின் வழியே நமக்கெல்லாம் காட்டிக் கொடுக்கிறார். அன்று வந்த கண்ணனே இன்று நாம் கண்ணெதிரே பார்க்கும் வேங்கடவன் என்பதை ''களிறுமுகில் குத்தக் கையெடுத்தோடி ஒளிறு மருப்பொசிகையாளி-பிளிறி விழ கொன்று நின்றதிரும், வேங்கடமே மேல் நாள் குழக்கன்று கொண்டெ றிந்தான் குன்று'' என்று, குழக்கன்று என்று கிருஷ்ண லீலையில் வரும் வத்சாசுரனைக் குறிப்பிட்டு, குழக்கன்று கொண்டு என்றால், இளங்கன்றை (எறிகுணிலாகக்

## ஐம்பொறி ஆட்சி கொள்

புதிய ஆத்திசூடி 9



''பேயாய் உழலும் சிறு மனமே! பேணாய் என் சொல் இன்று முதல்
தீயாய் ஒன்றும் நினையாதே நினது தலைவன் யானே காண்''

என்று மனத்தை வசப்படுத்த மந்திரம் போல் கூறுகிறார் பாரதி. மனம் தான் நமது ஐந்து இந்திரியங்கள். அதாவது ஐம்பொறிகளான மெய், வாய், கண், காது, மூக்கு என்ற ஐந்தையும் இயக்குகிறது. மனம் கட்டளையிட மறுத்தால் இவைகள் வேலை செய்யாமல் நிறுத்தி விடும் இல்லையா. அதனால் மனதைச் செம்மையாக்கி இந்த ஐம்பொறிகளின் ஆசைகளுக்கு நாம் அடிமையாகி விடாமல், நாம் நமது மனத்தின் கட்டளைகளை ஐம்பொறிகளின் மீது செலுத்த வேண்டும். பக்கத்து வீட்டு சிறுவன் புது சைக்கிள் வாங்கி விட்டான் என்று நாமும் ஆசைப்படக்கூடாது. நம் குடும்ப சூழல் ஒத்துழைப்பவற்றிற்கே நாம் ஆசைப்பட வேண்டும். உடலின் உதவியில்லாமலேயே புலன்கள் காலம், இடம் ஆகிய தடைகளின்றி, தொடர்புடைய பொருட்களிடம் சென்று பொருந்தி வெற்றி கொள்கிறது.

“பொறிகளின் மீது தனி அரசாணை” கொடு தாயே என்று பாரதி பராசக்தியிடம் வேறொரு பாடலில் கூட வேண்டுகிறார். “ஒருமையுள் ஆமைபோல் ஐந்துதடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப்பு உடைத்து” என்று வள்ளுவரும் கூறுகிறார்.

ஆகவே, குழந்தைகளே! பாரதி வழியில் உங்களின் ஐந்து புலன்களைக் கட்டுப்படுத்தப் பழகி விட்டீர்கள் என்றால், வாழ்க்கையில் வெற்றியாளர் நீங்கள்தான். வாழ்த்துகள்.

- டாக்டர் கவிஞர் இரா. உமா பாரதி, சென்னை, மகாகவி பாரதியார் வம்சாவளி, 73389 97938

கொண்டு) எறிந்தான். (விளங்கனி மீது) எறிந்த பிரானுடைய குன்று இந்த திருமலையே என்கிறார் ஆழ்வார்.

அதே மூன்றாம் திருவந்தாதியின், 89வது பாசுரத்தில், *''வேங்கடமே மேலொருநாள் தீங்குழல்வாய் வைத்தான் சிலம்பு''* என்று, மேலொரு நாள் – முன்பொரு நாள், தீம் குழல் – மதுரமான புல்லாங்குழலை, வாய் வைத்தான் – தன்னுடைய திருப்பவளத்தில் வைத்து ஊதின, கண்ணபிரானுடைய சிலம்பு என்றால் திருமலையாம் என்று அர்த்தம். கிருஷ்ணாவதாரக் கூறுடையவன் அல்லவா வேங்கடவன்! முன்பு கிருஷ்ணாவதாரத்திலே, புல்லாங்குழலில் வாய் வைத்து வேணுகானம் செய்த அந்த முரளீதரன் நிற்கும் மலை வேங்கடமே என்றே காட்டுகிறார் பேயாழ்வார்.

இப்படி முதலாழ்வார்கள் மூவருமே தாம் திருவேங்கடத்தில் அனுபவித்த அத்திருமலை வாசனை மட்டுமல்லாமல், பெருமாள் தங்களுக்கு கொடுத்த காட்சியினையும் அல்லவா தங்களது பாசுரங்களின் வழி நமக்கு காட்டிக் கொடுத்து இருக்கிறார்கள்? ஆதி மூலமான அந்த வேங்கடவனை, திருவேங்கடவனை ஆழ்வார்களின் அருளிச்செயல்களைக் கொண்டே அனுபவிப்போம்.

**– திருமதி நளினி சம்பத்குமார்,**
**சென்னை, 97911 67583.**

## நூல் மதிப்புரை




| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | **பாலமுருகன் அருள்மாலை** |
| **நூல் ஆசிரியர்** | : | **திருமதி. ஜெய வெங்கிடலக்ஷ்மி** |
| **விலை, செல்** | : | **ரூ.300/-, 93496 24122, 94963 16706.** |
| **கிடைக்குமிடம்** | : | **திருமதி ஜெய வெங்கிடலக்ஷ்மி, எண்.39/551, என்.ஜி.எஸ்.84, காமாக்ஷி நிவாஸ், வரதராஜபுரம் தெரு, நூரனி, பாலக்காடு – 678 004, கேரளா.** |

இந்நூல் ஆசிரியர் அவர்கள் அருள்மிகு தண்டாயுதபாணி ஸ்வாமியின் அருளால் முருகன் மீது சுமார் 250–க்கும் மேற்பட்ட பாடல்களை கடந்த 15 ஆண்டுகளாக எழுதி வந்துள்ளார். முருகன் அடியார்கள் இவரது பாடல்களைத் தொகுத்து ''பால முருகன் அருள் மாலை'' என்ற பெயரில் ஒரு நூலாக வெளியிட்டுள்ளனர்.

இவருக்கு ப்ரம்ம முஹுர்த்த வேளையில் சுமார் 3.30 மணி அளவில் பாடல் வரிகள் முருகன் வழங்குவதாகவும், அதை உடனடியாக புத்தகத்தில் எழுதுவதையும் பழக்கமாகக் கொண்டுள்ளார். தம்முடைய பாடல்களில் எழுத்துக்கு அதிபதி முருகன் என்றும், பாட்டில் உள்ள ராகம் மற்றும் தாளத்திற்கு அதிபதி பாலா த்ரிபுர சுந்தரி என்றும் கூறுவதுண்டு. அதனாலேயே இந்த நூலுக்கு "பால முருகன் அருள் மாலை" என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது. இந்த நூலில் பால முருகன் அஷ்டகம், பால முருகன் அந்தாதி, நவ வீரர்கள் மாலை, காவடிச் சிந்து, பாமாலைகள், மெட்டுப் பாடல்கள், விருத்தம், வள்ளித் திருமணம், ஆரத்திப் பாடல் ஆகியவை இடம் பெற்றுள்ளன. இந்தப் பாடல்களில் முருகனின் ஆறுபடை வீடுகளையும் மற்றும் சென்னிமலை, திருச்செங்கோடு, பூம்பாறை, ஓதிமலை, வல்லக்கோட்டை, சிக்கல் போன்ற இடங்களையும் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். மேலும், முருகனின் சிறந்த அடியார்களான ஔவை, அருணகிரிநாதர், பாம்பன் சுவாமிகள், குமர குருபரர் போன்ற ஞானிகளையும் குறிப்பிட்டு எழுதியுள்ளார். இது மட்டுமல்லாமல் விநாயகர், அம்பாள், சரஸ்வதி, கண்ணன், ஐயப்பன் பாடல்களும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன.

முருகன் அருளால் எழுதிய இந்த நூலை மக்கள் அனைவரும் படித்து, ஆடிப் பாடி முருகனின் திருவருளைப் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**– திருமதி பிரியா ஸ்ரீதரன், பெங்களூர்.**

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

இம்மலைக்கு ஒப்பான வேறொரு மலையும், இப்பெருமானுக்கு ஒப்பான வேறொரு தெய்வமும் எங்கும் எப்போதும் இல்லை.

*“வேங்கடேச ஸமோதேவோ, நாஸ்தி நாஸ்தி மஹிதலே”*
*“வேங்கடேசஸமம் ஸ்தானம் ப்ரஹ்மாண்டே நாஸ்தி கிஞ்சந*
*வேங்கடேச ஸமோதேவோ நபூதோ நபவிஸ்யதி”*

“அரங்கனை அன்றி வேறு யாரையும் பாட மாட்டேன்” என்று இருந்த பிள்ளைப்பெருமாள் ஐயங்கார், *“வேங்கடத்து வித்தகனை அன்றிப் பாடாது என்வாய்”* என்று கூறி திருவேங்கட மாலை, திருவேங்கடத்து அந்தாதி என்ற இரு பிரபந்தங்களைப் பாடியுள்ளார்.

உலகைக் காக்கும் பொருட்டு, கீழே இறங்கி உள்ள வைகுண்டத்தின் வடிவமே வேங்கடமலை என்ற கற்பதரு மரம் என்றும், இவருடைய திருமார்பில், பிராட்டி அகலாது இருப்பதால் இவர் ஸ்ரீநிவாஸன் (திருவாழ்மார்பன்) என்ற திருப்பெயரைப் பெற்றுள்ளான் என்றும் கருடவாகன பண்டிதர்,

*“லோகாவநாய வஸுதா வலயாவதீர்ண-*
*வைகுண்ட சேஷகிரி ச்ருங்கஸுரேந்திர சாகி”*

என்று திவ்ய சூரி சரிதத்தில் சொல்கிறார்.

**சிறப்புகள் :**

**கீழ்த் திருப்பதி**

பெருமாள் : கோவிந்தராஜப்பெருமாள். (கிழக்கு நோக்கிய கிடந்த திருக்கோலம்)

தாயார் : புண்டரீக வல்லித்தாயார்

**திருமலை (மேல் திருப்பதி)**

பெருமாள் : ஸ்ரீநிவாஸன், திருவேங்கடமுடையான். ஏழுமலையான், பாலாஜி, வேங்கடாசலபதி, வேங்கடநாதன் (கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம்)

உத்ஸவர் : கல்யாண வேங்கடேச்வரர்.

தாயார் : அலர்மேல் மங்கை, பத்மாவதித் தாயார், (கிழக்கு நோக்கிய அமர்ந்த நிலை). அலர்மேல் மங்காபுரம், சுகபுரி என்றும் கூறுவர்.

விமானம் : ஆனந்த நிலைய விமானம்.

# திருவேங்கடம்

*- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.*



புஷ்கரணி : ஸ்வாமி புஷ்கரணி, சேஷாசல ஸ்வாமி தீர்த்தம் (வராக தீர்த்தம்) கோனேரி தீர்த்தம், வைகுண்ட தீர்த்தம், சக்ர தீர்த்தம், ஜாபாலி தீர்த்தம், வருண தீர்த்தம், ஆகாசகங்கை, பாபவிநாச தீர்த்தம், பாண்டவர் தீர்த்தம், குமார தாரைத் தீர்த்தம், இராம கிருஷ்ணா தீர்த்தம், தும்புரு தீர்த்தம், சுகஸந்தான தீர்த்தம், யுத்தகலா தீர்த்தம், சீதம்மா தீர்த்தம் சுவர்ணமுகி ஆறு.

பிரத்யக்ஷம் : தொண்டைமான் அரசன்,சுப்ரமண்யர்.

ஆகமம் : வைகானஸம்.

மங்களா சாஸனம் : 1.பொய்கையாழ்வார், 2.பூதத்தாழ்வார், 3. பேயாழ்வார், 4.திருமழிசை ஆழ்வார், 5. நம்மாழ்வார், 6. குலசேகர ஆழ்வார், 7.பெரியாழ்வார், 8.ஆண்டாள், 9. திருப்பாணாழ்வார், 10.திருமங்கையாழ்வார்.

**விசேஷம்:**

வாத்ஸல்யம் என்பது ஈன்ற கன்றினிடம் உள்ள அழுக்கை விரும்பி உண்ணும் பசுவைப்போன்று, அடியார்களிடம் உள்ள குற்றங்களை இனியனவாகக் கொள்ளும் குணமே இது. திருமலையில் இந்தக் குணம் நன்கு விளங்குவதாகக் கூறும், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்.

*"மண்ணோர் விண்ணோர் வைப்பில்*
*(திருமலையில்)*
*...பாசம் வைத்த நிகர்இல் வாத்ஸல்யம்உஜ்வலம்"*

என்று கூறுகிறார்.

வடவேங்கடம், நூற்றெட்டு வைணவத் திருப்பதிகளில், தனிச்சிறப்பைப் பெற்றுள்ள திவ்யதேசம். இதன் தல வரலாறு ஆழமும், அகலமும் நீட்சியும் பொருந்தியதாய், எத்தனையோ மொழிகளில் உரைநடையாகவும், பாடல்களாகவும், காவியங்களாகவும் விளங்குகின்றன.

**திவ்யதேச வாழ்த்துப் பாசுரம்:**

*தீங்கு அடர் பிறப்புத் தீரத் திரள் பசிமூப்பு நோய்கள்*
*நீங்கிட ஞானம் எல்லாம் நிறைந்து மா முத்திநேரப்*
*பூங்கொடி திகழும் மார்பில் கவுத்துவம் போல் கொண்டு ஓங்கி*
*வேங்கடம் இலங்க நின்ற வித்தகன் கழல்கள் வாழி!*

**தாயார் வாழ்த்து:**

*சலமேல் எங்கும் தாவிய வாலின்*
*நிலைமேல் எய்தி எழில் அஞ்சன மா*
*மலைமேல் நின்றான் மார்பின் வயங்கும்*
*அலை மேல் மங்கை அடியிணை வாழி*

**தியானச்லோகம்:**

*ஸ்ரீசேஷா சலமூர்த்தி வேங்கடபதி: ஸர்வார்த்தத: ப்ராங்முக:*
*தீர்த்தம் ஸ்வாமி ஸரோ, விமாநமதுலந்த் வானந்த தாமேதிச!*
*ஸ்ரீ வைகுண்ட மபாஸ்ய தத்ர ரஸிக: பத்மோபரிஸ் தாக்யயா,*
*நாயக்யாஸ ஹமோத தேத்ரி ஐகதாம் பூத்யை ப்ரஸந்ந: பர:*

(ஸ்ரீ விஷ்ணு ஸ்தலாதர்சம்)

திருவேங்கடம் திவ்ய தேசம் தொடர்ந்து தரிசிப்போம்...



## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



பரஸ்பராதே$_3$சவிசாரஹர்ஷாத்தத்
ஸந்நிதெ$_4$ள ஸ்ரீவகுலத்$_3$ருமஸ்ய ।
ச$_2$ாயாயுதம் தத்பரமம் பத$_3$ம் ச த்$_4$
யாத்வா மஹாபூர்ணகு$_3$ரும் ஸ பே$_4$ஜே ॥

(44)

**ஒருவருக்கொருவர், தங்களுக்கு ஏற்பட்ட நியமனத்தை விசாரித்து அறிந்து உகந்தபின், அந்த மதுராந்தகம் கோயிலிலே, மகிழ மரத்தின் நிழலுடைய அவ்விடத்தையே பரமபதமாக தியானித்து பெரிய நம்பியை இராமாநுஜர் ஆசார்யராக அடைந்தார்.**

– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது

# மணவாள மாமுனிகளின் கிருஷ்ணானுபவம்



திருமால் எடுத்த கடைசி அவதாரம் ஸ்ரீகிருஷ்ணாவதாரம். அதுபோல நம் ஆசாரியர்களில் மாமுனியே கடைசியாக அவதரித்தவர். அப்படி ஒரு பொருத்தம் கண்ணனுக்கும் மாமுனிக்கும். **''உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்''** என நம்மாழ்வார் கண்ணனையே எல்லாமுமாகப் போற்றி தன்னை அர்ப்பணித்து பிரபந்தங்களை அருளிச்செய்தார். அப்படி ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் உகப்பு கொண்டு **''மன்னிய சீர் மாறன் கலை உணவாகப் பெற்றோம்''** என மாமுனிகள் அருளிச் செய்கிறார். நம்மாழ்வாருக்கு உணவு கண்ணன். அந்த கண்ணனை உணவாகக் கொண்ட நம்மாழ்வார் அருளிய பிரபந்தங்கள் மாமுனிக்கு உணவாக அமைந்தது.

வியாக்யான சக்ரவர்த்தி எனப் புகழ் பெற்ற பெரியவாச்சான் பிள்ளை பெரியாழ்வார் திருமொழிக்கு உரை எழுதி காணாமல் போன 420 பாசுரங்களுக்கு மாமுனிகளே உரை எழுதினார்.

நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழியில் கண்ணன் மீது ஏற்பட்ட காதலால் **''தீர்ப்பாரையாம் இனி எங்ஙனம் நாடுதும்''** (4–6–1) என்ற பாசுரத்தில் பல விதங்களில் அனுபவிக்கிறார். கடைசியாக (4–6–10) **''உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள்''** என ஆரம்பித்து **''வண் துவராபதி மன்னனை ஏத்து மின் ஏத்தலும் தொழுதாடுமே''** என முடிக்கிறார். இந்தப் பாசுரத்தின் பொருள்களை நன்கு உணர்ந்த நம் மாமுனிகள் தனக்கு கண்ணனிடத்தில் உள்ள ஈடுபாட்டால் எப்படி உடையவர் ஒரு நாயகமாய் திருவாய்மொழி (4–1) பதிகத்தை மேல் கோட்டை திருநாரயண புரத்து எம்பெருமான் சொல்ல, பிள்ளைக்கு சமர்ப்பித்தாரோ அதுபோல மாமுனிகள் இந்த ''தீர்ப்பாரையாம் இனி'' என்ற பதிகத்தை ராஜ மன்னார்குடி ஸ்ரீ ராஜ கோபாலனுக்கு சமர்ப்பித்து தமக்கு அந்த கண்ணனிடத்தில் உள்ள ஈடுபாட்டை வெளியிட்டு அருளினார்.



மேலும், தன் கண்ணன் மேல் உள்ள உகப்பை காட்டும் வகையில் ஸ்ரீ கோபால விம்சதி, ஸ்ரீ ராஜகோபால மங்களம் போன்ற ஸ்ரீ சூக்திகளை அருளினார். ஸ்ரீ பாகவதத்தில் கிருஷ்ணன் எழுந்தருளியிருக்கும் நிலையை **''பாஹீம் ப்ரியாம்ஸ உபதாய க்ருஷித பத்ம''** எனத் தொடங்கும் சுலோகத்திற்கு கண்ணன் ஒரு திருவடியை முன் வைத்து, மறு திருவடியைக் கொஞ்சம் பின் வைத்து நின்று கொண்டு ஒரு திருக்கரத்தில் பசு மேய்க்கும் கோலையும், மற்றொரு திருக்கரத்தை தனக்கு மிகவும் பிரியமான கோபிகை மீதும் வைத்து கொண்டு காட்சி தந்ததை மாமுனிகள் விவரிக்கும் அழகே தனி. கண்ணன் மீதான பற்று பரிமளிக்கிறது. கண்ணனது திருமேனி அழகை பாதாதிகேசம் வரை அனுபவிக்கும் பெரியாழ்வார் **''சீதக்கடல் உள்ள முதன்ன தேவகி''** (1–2–1) என ஆரம்பிக்கும் பதிகத்தில் நன்கு வெளியிடுகிறார். மாமுனி

உரை அருளும்போது ஸ்ரீகிருஷ்ணனை யசோதை யிடம் அனுப்பி வைக்கும் தேவகி மகாலக்ஷ்மிக்கு ஒப்பானவள். சீதக்கடல் உள்ள அமுது குளிர்ச்சி பொருந்திய பாற்கடலை கடைந்த போது அமுதான ஸ்ரீ மஹாலக்ஷ்மியை மாதவன் பெற்றான். பெரிய பிராட்டியைப் போல் தேவகியும் பரோபகாரமான சீலகுணத்தை உடையவள் என்றபடி. இங்கு ***''விண்ணவர் அமுதுண அமுதில் வரும் பெண்ணமுது உண்ட எம்பெருமானே''*** என்ற கலியன் திருவாக்கும் அனுபவிக்கப்படுகிறது (பெரிய திருமொழி 6–1–2). அடுத்து ஸ்ரீகிருஷ்ணன் தளர்நடை நடக்கும் அழகினை பெரியாழ்வார் ***''தொடர் சங்கிலிகை... சாரங்க பாணிதளர்நடை நடவானோ''*** (1–7–1) எனப் பாசுரத்தில் விவரிக்கிறார். மாமுனிகள் உரையில், ஸ்ரீ கிருஷ்ணன் தளர்நடை நடக்கும் போது திருக்காலில் அணிந்துள்ள சதங்கை கிண்கிணி ஒலிக்கவும், சிறுமணிகள் பறைபோல சப்திக்கவும் நடக்கிறான். உடம்பில் வியர்வை நீர் பெருகுகிறது. யானையை கண்ணனுக்கு உவமையாகச் சொல்வதைப் பார்க்கலாம். யானை மதத்தின் மிகுதியால் காலில் கட்டப்பட்டுள்ள இரும்புச் சங்கிலியை அவிழ்த்துக் கொண்டு நடக்க, அந்தச் சங்கிலித் தொடர் சலார் பிளார் என்று ஒலிக்க, கயிற்றினால் கட்டப்பட்டுள்ள இருபுறமும் தொங்கும் மணிகள் ஓசை தொனிக்கவும், மதநீர் பெருகப் பெற்று யானை மெல்ல மெல்ல அழகாக நடக்கிறது. இந்த நடையழகு ஸ்ரீ கிருஷ்ணன் தளர்நடைக்கு பொருத்தம் என மாமுனி கூறுவதை நம்மால் மகிழ்ந்து ரசிக்க முடிகிறது.

***அஞ்சன வண்ணனை ஆயர்கோலக்***
***கொழுந்தினை*** (பெரியாழ்.திரு.3–2–1)

இப்பாசுர அடிக்கு அளித்த வியாக்கியான அழகு ஸ்ரீ கிருஷ்ணனைக் கண்டவர்கள் கண் குளிரும் படி மை போலே கரிய திருமேனி உடையவன். கன்றுகளின் பின்னே போகிறபோது கொழுத்தது போல உள்ளவனும் அலைந்த திருக்குழல்களும், திருக்கையில் பிடித்த பொற்கோலுமான ஆயர் களுக்குத் தலைவனான அன்றிக்கே வேரில் வெக்கை தட்டினால் கொழுந்து முற்படவாடு மாப்போல அவர்களுக்கு ஒரு நோவு வந்தால் முதல் தன் முகம் வாட்டும்படியிருக்கையாலே கொழுந்து எனப்படுகிறான் என்கிறார். நம்மாழ்வாரும் தன் திருவாய் மொழியில் (1–7–3) ***''ஆயர்கொழுந்தாய் அவரால் புடை யுண்ணும் மாயப்பிரானை என் மாணிக்கச் சோதியை தூய அமுதைப்பருகி - என் மாயப்பிறவி மயர்வறுத் தேனே''*** என்று கண்ணனை கொழுந்து என்று கொண்டாடுகிறார்.

***''வண்ணக் கருங்குழல்''*** (பெரியாழ்.திரு.3–2–4) என ஆரம்பிக்கும் பாசுரத்தில் கண்ணுக்கினியானை எண்ணற் கரியானை என்ற சொற்களுக்கு மாமுனிகளின் உரை தீம்பாலே நெஞ்சுகள் புண் பட்டாலும் வைத்த கண் வாங்க வொண்ணாதபடி

## ஸப்தகிரி ஆகஸ்ட் 2025 விடைகள்

1. கருடாழ்வார்.
2. திருமங்கையாழ்வார்.
3. சிராவண (ஆவணி) மாதம்.
4. நம்பெருமாள்.
5. பகவத்கீதை.
6. ஸ்ரீஹயக்ரீவர்.
7. ஸ்ரீவராகப்பெருமாள்.
8. ஸ்ரீவராக அவதாரம்.
9. கூரத்தாழ்வான்.
10. ஸ்ரீகிருஷ்ணர்.
11. எல்லையற்றது.
12. வராகப்பெருமாள், பூமிபிராட்டிக்கு.
13. ஸப்த கோ பிரதக்ஷிணை மந்திரம்.
14. உலூகம் எனப்படும் ஆந்தை.
15. திருமங்கையாழ்வார்.



வினாடி வினா

## போட்டி எண். 37

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி வி.பா.விபாஷா
   மாணிக்கம்பாளையம் சாலை,
   ஈரோடு.
2. செல்வன்
   எஸ்.என். சைதன்ய அனிருத்
   நாஞ்சிக்கோட்டை ரோடு,
   தஞ்சாவூர்.
3. செல்வன் ப.எ. லோகேஸ்வரன்,
   சின்ன காஞ்சிபுரம்,
   காஞ்சிபுரம் மாவட்டம்.

கண்ணுக்கு இனிமை கொடுப்பான். அந்த ஸ்ரீ கிருஷ்ணன் நம் எண்ணங்களுக்கு அப்பாற்பட்டவன் எனப் போற்றிப் புகழ்கிறார். நம்மாழ்வாரும் *''எண்ணிலும் வரும் என் இனி வேண்டுவம்''* (1–10–2) என கண்ணனை பக்தியுடன் வணங்கினால் நம் எதிரில் நிற்பான் அந்த எண்ணற்கரியான் என்கிறார்.

ஸ்ரீ கிருஷ்ணன் புல்லாங்குழல் ஊத அதன் சிறப்பை பெரியாழ்வார் தன் பாசுரத்தில், *''செம்பெருந்தடங்கண்ணன்...... குழலூதக் கேட்டவர்கள்''* (3–6–6) இதற்கு மாமுனி அருளும் உரைநயம் ஸ்ரீகிருஷ்ணன் சிவந்து மிகவும் பெருத்த திருக்கண்களை உடையவன். உருண்டு அழகிய திருத்தோள்களை உடையவன். தேவகிக்கு மழலையானவன். தேவர்களுக்கு சிங்கம் போன்றவன். அசுரர்களை அழிக்க சிம்மம் போன்று நின்று தேவர்களை ரக்ஷிக்கும் கண்ணனின் குழல் ஓசையைக் கேட்டவர்கள் செய்வதறியாது திகைத்து நிற்கிறார்கள் என்கிறார் மாமுனிகள்.

*''வண்ணமால் வரையே ... அருள்செய் எம்பிரானே''* (5–1–8) என்னும் பெரியாழ்வாரின் பாசுரத்திற்கு மாமுனியின் வியாக்கியானம் மிக அற்புதம். எல்லா வளங்களையும் கொண்ட பெரிய கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்து கல் மழையைத் தடுத்து கோபர்களைக் காத்தவன். மது என்ற அசுரனை அழித்தவன். கஜேந்திரன் என்ற யானையின் ஆபத்தைப் போக்கிக் காப்பற்றியவன். குவலயா பீடம் என்ற கம்சனின் யானையை அழித்தவன்.

ஜகத்காரன பூதன் (முழு முதல்வன்). பரபக்தி, பரஞானம், பரமபக்திகளை தமக்கு வேணும் என்று விரும்பினவர்களுக்கு அவற்றுக்கு விரோதியானவற்றைப் போக்குபவன். திருக்கல்யாண குணங்களை உடையவன். அடியேன் நாளும் உன்னை வணங்கி ஏத்தும்படிக்கீடான நன்மையை அருள வேண்டும். கண்ணனே சர்வ சுலபமானவன் (எளியவன்).

“கிருஷ்ணனே நீயே கதி என்னை ஆட்கொள்வாய்” என்று பெரியாழ்வாரின் கிருஷ்ண பக்தியில் தானும் ஆட்கொண்டு தன் கிருஷ்ணானுபவத்தில் மூழ்கி திளைக்கிறார் மணவாளமாமுனிகள். கிருஷ்ண ஆரண்ய க்ஷேத்திரங்களில் முதன்மையான திருப்பதி திருக்கண்ணபுரம் நீலமேகப் பெருமாளை திருமங்கை ஆழ்வார் தன் பெரிய திருமடலில் *''நான் வணங்கும் கண்ணனை கண்ணபுரத்தானை''* என அருளிச்செய்கிறார். அப்படி கலியனால் கண்ணனாகக் கண்டு வழிபட்ட திருக்கண்ணபுரத்தில் மாமுனிகள் ஒரு வருட காலம் எழுந்தருளி இருந்து பல கைங்கர்யங்களைச் செய்தவர். அவர் தினமும் சென்று அனுஷ்டானம் செய்த புஷ்கரணி ஜீயர்குளம் என அழைக்கப்படுகிறது. இங்கும் மாமுனிகள் கிருஷ்ணானுபவம் காணத்தக்கது.

மாமுனிகளின் திருநட்சத்திரத்தன்று அவரின் சீர்மை, கிருஷ்ணரின் பெருமை, ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் மாமுனிகளுக்கும் உள்ள ஒற்றுமைகள், மாமுனிகளின் கிருஷ்ணானுபவத்தையும், அவர் உரை நயத்தையும் அனுபவித்து திருக்கோயில்களில் நடக்கும் வைபவத்திற்குச் சென்று மாமுனிகளை வணங்கி அவர் ஆசி பெற்று உய்வோம்.

**– திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன்,**
**சென்னை, 97909 38925.**

## 2025, நவம்பர் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 01 | பேயாழ்வார் திருநட்சத்திரம். |
| 01–05 | நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம். |
| 02 | கைசிக துவாதசி. |
| 05 | கார்த்திகை தீபோத்ஸவம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் அன்னாபிஷேகம், நகரி ஸ்ரீகரிய மாணிக்க ஸ்வாமி பவித்ரோத்ஸவம். ஸ்வர்ண முகரீ தீர்த்த முக்கோடி |
| 16 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் லக்ஷ குங்குமார்ச்சனை. |
| 17–25 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் பிரம்மோத்ஸவம். |
| 17 | தன்வந்தரி ஜெயந்தி. |
| 26 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் புஷ்ப யாக மஹோத்ஸவம். |
| 26 | திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் கந்த சஷ்டி விழா. |



# துலா மாதத்தில் காவிரி நீராடல்

– திரு.டி.ஆர். பரிமளரெங்கன்,
திருச்சி. 97156 64450

ஐப்பசி மாதத்தை துலா மாதம் என்பர். இம்மாதத்தில் இரவும் பகலும் சரிசமமாக இருப்பதால் இதற்கு துலா (தராசு) மாதம் என்று பெயர் வந்தது. இம்மாதத்தில் காவிரி நதியில் நீராடுவதைத் துலா ஸ்நானம் என்று போற்றுவர்.கர்நாடக மாநிலம் குடகுவிலிருந்து பிறந்து தென்னகம் நோக்கி காவிரி ஓடி வரும். தக்ஷிண கங்கை, பொன்னி, கல்யாணி, விதிசம்பூதை, சாமதாயிணி, கல்யாண தீர்த்தரூபி, உலோபமுத்ரா, சவாசாஸ்யாமா, கும்ப சம்பவல்லவை. விண்டுமாயை, கோனிமாதா, தக்கடை, பதசாவணி போன்ற பெயர்கள் காவிரிக்கு உண்டு. மருத்துவ குணம் கொண்டு திகழும் காவிரியில் ஸ்நானம் செய்வதால் விஷ்ணுவின் அருளுடன் ஆரோக்கியமும் கிட்டும்.

''துலா மாதத்தில் சூரிய உதயத்திற்கு சுமார் ஒன்றரை நாழிகை நேரத்திற்கு முன், காவிரியில் மும்மூர்த்திகளும், முப்பத்து முக்கோடி தேவர்களும், 68 ஆயிரம் ரிஷிகளும், முனிவர்களும், சித்தர்களும் நீராடுவதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. மேலும், உலகத்தில் உள்ள சகல தீர்த்தங்களும் கங்கை உட்பட, தங்களிடம் மக்கள் நீராடி போக்கிக் கொண்ட பாவங்கள் நீங்க, துலா மாதத்தில் காவிரியில் நீராடி புனிதம் பெறுகின்றன” என்று காவிரி மாகாத்மியம் என்னும் நூல் கூறுகிறது.

“ஐப்பசி மாதம் முழுவதும் காவிரியில் நீராட வேண்டும்” என்று ஞான நூல்கள் கூறுகின்றன. மாதம் முழுவதும் நீராடா விட்டாலும் ஐப்பசி மாதத்தின் கடைசி நாளன்று காவிரியில் நீராடினால் துலா மாதத்தில் நீராடிய பலன் கிட்டும். அதற்கு “கடை முகம்” என்று பெயர். இந்நாளில் மாயவரம் திருத்தலத்தில் காவிரி நதி கட்டத்தில் மயூர நாதர் ஸ்வாமி கோயில் பஞ்ச மூர்த்திகளும் திருவுலா வந்து தீர்த்தம் கொடுத்து அருள்வர். இந்தக் கடைமுகத்தன்று நீராட இயலவில்லை என்றாலும் கார்த்திகை முதல் நாளில் ஸ்நானம் செய்தால் அதே பலன் கிட்டும். அதனை முடவன் முழுக்கு என்பர்.

ஸ்ரீரங்கத்தில் பள்ளிகொண்டிருக்கும் ஸ்ரீரங்கநாதருக்கு ஐப்பசியில் தங்கக் குடங்களில் அம்மா மண்டப காவிரி நதிக்கரை படித்துறையிலிருந்து புனிதத் தீர்த்தத்தை யானை மேல் கொண்டு வந்து அபிஷேகம் செய்வர். மற்ற மாதங்களில் ஸ்ரீரங்கத்தின் வடக்கில் உள்ள கொள்ளிடத்திலிருந்து வெள்ளிக்குடங்களில் தீர்த்தம் கொண்டு வந்து அபிஷேகம் செய்வர்.

பொதுவாக துலா மாதத்தில் எங்கு நீராடினாலும் கங்கையில் மும்முறை நீராடிய பலனும், யமுனையில் ஐந்து முறை நீராடிய பலனும் கிட்டும் என்று துலா புராணம் கூறுகிறது. அதோடு நீத்தார் கடன் செலுத்துவோரின் முன்னோர்கள் சொர்க்கத்தை அடைவர் என்கிறது காவிரி புராணம். துலா காவிரி நீராடல் அழகு, ஆயுள், ஆரோக்கியம், செல்வம், கல்வி, மாங்கல்ய பாக்கியம், குழந்தைப் பேறு, வலிமை போன்ற அனைத்தும் அருளும். எனவே காவிரியில் நீராடினாலும், காவிரியை நினைத்தாலும், சிறப்பைக் கேட்டாலும் பாவங்கள் விலகும் என்று பிரம்ம புராணம் கூறுகிறது.

மேலும், ஐப்பசி அமாவாசையில் காவிரியில் நீராடி வேதவிற்பன்னர்கள் மேற்பார்வையில் முன்னோர்களுக்கு பிதுர் பூஜை செய்து வழிபட்டால் குடும்பத்தில் எடுத்த சுபகாரியங்கள் நல்ல முறையில் நிறைவேறும் என்கின்றன சாஸ்திரங்கள். அன்றைய தினம் அன்னதானம், வஸ்திர தானம் செய்வது சிறந்தது. ஆகவே, துலா மாதத்தில் காவிரி நதியில் நீராடி புனிதம் பெறுவோம்.

அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# கோவிந்தப்பெருமாள் என்னும் எம்பார்

- ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972



இராமானுசர் அவதரித்து ஒன்பது வருடங்களுக்குப் பிறகு குரோதன வருடம், தை மாதம், புனர்வசு நக்ஷத்ரத்தில் (1026) ஸ்ரீபெரும்பூதூரை அடுத்த மதுரமங்கலத்தில் வட்டமணிக்குடியில் பாரத்வாஜ கோத்ரத்தில் இராமானுசருடைய சிறிய தாயாரான ஸ்ரீதேவிக்கும் அவருடைய கணவரான கமலநயனபட்டருக்கும் குமாரராக அவதரித்தவர் கோவிந்தன் என்பவராவர். இவருக்கு எம்பார் என்ற பெயரும் உண்டு. இவர் எம்பெருமானாரை ஒரு போதும் விட்டு நீங்காத திருவடி நிழல் போல்வர்.

பூவளரும் திருமகளார்
பொலிவுற்றோன் வாழியே
பொய்கை முதல் பதின்மர் கலைப்
பொருளுரைப்போன் வாழியே
மாவளரும் பூதூரன்மலர்ப்பதத்தோன்
வாழியே
மகரத்தில் புனர்பூசம் வந்துதித்தோன்
வாழியே
தேவும் எப்பொருளும் படைக்கத்
திருந்தினான் வாழியே
திருமலைநம்பிக்கு அடிமை
செய்யுமவன் வாழியே
பாவையர்கள் கலவி இருள்
பகலென்றான் வாழியே
பட்டர் தொழும் எம்பார் பொற்பதம்
இரண்டும் வாழியே.

**பதவுரை**

பூவளரும் – தாமரைப்பூவில் உறைகின்ற, திருமகளார் – பெரியபிராட்டியாருடைய, பொலிவுற்றான் – முக மலர்ச்சி பெற்றவர், வாழியே – வாழ வேண்டும். பொய்கை முதல் பதின்மர் கலை – பொய்கையாழ்வார் தொடக்கமாக திருமங்கையாழ்வார் ஈறாக உள்ள பத்து ஆழ்வார்களின் திவ்ய ப்ரபந்தங்களின், பொருள் உரைப்போன் – உரிய பொருளைச் சொல்லுபவர். மாவளரும் பூதூரன் – பெருமை தங்கிய ஸ்ரீபெரும்பூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமானுசர், மலர்ப்பதத்தோன் – மலருதலை உடைய திருவடி நிழலாக உடையவர்.

மகரத்தில் – மகர மாதமான தை மாதத்தில், புனர்பூசம் – புனர்வசு நக்ஷத்ரத்தில், வந்து உதித்தான் – அவதரித்தவர். தேவும் எப்பொருளும் படைக்க – “தேவும் எப்பொருளும் படைக்க” என்ற நம்மாழ்வார் பாடலைச் சொல்லக் கேட்டு, திருந்தினான் – திருந்தினவர். திருமலைநம்பிக்கு – தன் அம்மானான பெரிய திருமலை நம்பி என்னும் ஆசார்யருக்கு, அடிமை செய்யுமவன் – குற்றேவல் செய்பவர். பாவையர்கள் – பெண்களோடு கலவி சேர்க்கையாகிய, இருள் – இருளை, பகல் என்றான் – பகல் என்று சொன்னவர். இருளாவது – இங்கு அறியாமையாகிற மனநிலையாகக் கொள்க. பட்டர் தொழும் – கூரத்தாழ்வானின் திருக்குமாரரான பட்டர் வணங்கும், எம்பார் – கோவிந்தர், பொற்பதம் இரண்டும் – அழகிய திருவடிகள் இரண்டும், வாழியே – பல்லாண்டு வாழ வேண்டும்.

**சிறப்புரை**

(பூவளரும் திருமகளார் பொலிவுற்றோன் வாழியே) அழகு நிறைந்த பெரிய திருமலை நம்பியின் சதோதரியான

ஸ்ரீதேவிக்கு பிள்ளையாகப் பிறந்து பொலிவு பெற்ற எம்பார் வாழ்க. திருப்பதியில் இராமாநுசருடன் ஒரு வருட காலம் தம் அம்மானான பெரிய திருமலை நம்பிகளிடம் ஸ்ரீமத் துவயத்தோடே சேர்த்து யோஜித்து ஸ்ரீராமாயணம் கேட்டதனால் திருமகளார் பொலிவு பெற்றபடி. அத்தகையோர் வாழ வேண்டும்.

(பொய்கை முதல் பதின்மர் கலைப் பொருளுரைப்போன் வாழியே) பொய்கை ஆழ்வார் தொடக்கமான பத்து ஆழ்வார்களின் கலையான திவ்யப்பிரபந்தத்தில் மிக்க ஈடுபாடு கொண்டு ஐம்பத்து எட்டு பாசுர திவ்யப்ரபந்த வ்யாக்யானங்களில் எம்பார் தம் நிர்வாகத்தையும் ஐதிகத்தையும் காட்டி தகுந்த பொருள் உரைத்து உள்ளார். அவற்றில் சிலவற்றை அநுபவத்தில் கொள்ளலாம்.

பொய்கையாழ்வார் அருளிய முதல் திருவந்தாதியில் (76)

*வழி நின்று நின்னைத்*
*தொழுவார் வழுவா*
*மொழிநின்ற மூர்த்தியரேயாவர்–*
*பழுதொன்றும்*
*வாராத வண்ணமே விண்*
*கொடுக்கும் மண்ணளந்த*
*சீரான் திருவேங்கடம்.*

என்ற பாசுரத்தை திருவேங்கடவனிடம் பக்தி மேலீட்டால் தினமும் விடியல் காலையில் அநுஸந்திப்பர் என்று பெரியவாச்சான்பிள்ளை உரை.

நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியில் *“ஒத்தார் மிக்கார் இலையாய மாமாயா...”* (2–3–2) என்ற பாசுரம் காலக்ஷேபம் ஆகும்போது எம்பார் கோஷ்டியில் இந்த ஆத்மாவுக்கு முதல் குரு ஆர்? என்ற கேள்வி எழுந்தது. சிலர் ஆசார்யனே முதல் குரு என்றனர். மற்றும் சிலர் ஒரு ஆசார்யனைக் காட்டி அவன் திருவடிகளைப்பற்று என்று கூறி அவனிடம் அழைத்துச்சென்று அவனோடு சேரவிட்டவர்களே முதல் குரு என்றனர்.

இதனைக் கேட்டுக்கொண்டிருந்த எம்பார் இப்படி அழைத்துச் செல்பவன் இவனை அழைத்தாலும் அவன் அதற்கு இசையாமல் இருந்தால் பயனல்லவே. எனவே ஆழ்வாரே அருளியபடியே *“இசைவித்து என்னை உன் தாளிணைக்கீழ் இருத்தும் அம்மானே”* (5–8–9) என்று இவனை இசைவிப்பது எம்பெருமான் செயல் ஆகையால் எம்பெருமானே முதல் குரு என்று சுவைபடக் கூறினார்.

நான்காம்பத்து ஒன்பதாம் திருவாய்மொழியில், *“நண்ணாதார் முறுவலிப்ப”* பதிகத்தில் உன்னைப் பிரிந்து படுகின்ற துன்பத்தைக் காட்டிலும், உன்னை ஒருபோதும் எண்ணாத மகாபாவிகளான இவ்வுலகோர்கள் நடுவே இருப்பது பெரும் துன்பத்தை விளைவிக்கிறது. உன் பிரிவையாவது ஒருவாறு பொறுத்துக் கொள்ளலாம்.

ஆனால் உன்னைத் தவிர மற்றவற்றையே விரும்புகிற இக்கொடிய உலகோர்களின் நடுவில் இருப்பது ஆற்றமுடியாதது. ஆகையால் இந்நில உலகில் இருப்பைத் தவிர்த்தருளவேணும்

## குறுக்கெழுத்துப்புதிர் 111க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கோ | மா | தா | | | ம் | த | ந் | வி | ர | தா | 3 பா |
| தா | 4 ச | ந் | தி | ர | ன் | கை | க் | ணி | கா | த | 6 பா |
| ஸ் | ர | | 7 த | ர் | ம | ம் | | 17 அ | ஷ் | ட | மி |
| து | ஸ் | 11 ச | ங் | க | 12 ரா | 13 ப | ர | ண | ம் | | பி |
| தி | வ | ந் | க | 15 பு | மா | ர | | | 16 கா | | ர |
| 5 ம | தி | தா | த் | த | ய | ம | ம் | 2 தி | ன | | சு |
| ச் | ப | ன | தி | ன் | ண | ப | ம | யா | க | | த |
| சா | ப் | ல | ரு | ப | ம் | த | ரா | ன | ம் | தி | மு |
| வ | ரு | ட் | த் | ப் | | வா | கி | ம் | ச | க | 14 அ |
| தா | தி | சு | தே | ண | | ச | க் | | பா | ணா | னு |
| ர | வ | மி | ர் | ண் | | ல் | ள | | ய் | ர | ம |
| ம் | 18 ந | ம் | ய | 19 தி | த் | கி | 10 சா | ச | 9 தா | 8 ச | ன் |

என்று ஆழ்வார் வேண்டுவதாக எம்பார் நிர்வாகம். ஆனால் கூரத்தாழ்வான் வேறு வகையாக நீண்ட விளக்கம் ஒன்று அருளுகிறார். எம்பாருக்கு முதலில் ஒவ்வொரு பாசுரத்தில் முதல் இரண்டு அடியில் நோக்கு. ஆழ்வானுக்கு முதலில் பின் இரண்டு அடியில் எம்பெருமான் குணத்தில் நோக்கு.

குலசேகராழ்வார் அருளிய பெருமாள் திருமொழியில் *''என்னை வருக எனக் குறித்திட்டு... என்சினம் தீர்வன் நானே''* (6–8 ) என்ற இடத்தில் கண்ணபிரான் இன்று என்னை ஏமாற்றிவிட்டு ஓடினாலும் மறுபடியும் வேறொருநாள் என்னிடம் வரும்போது என் கோபத்தைத் தீர்த்துக்கொள்வேன் என்று கோபிகை சொன்னதைத் திருவரங்கத்தில் உய்ந்தபிள்ளை என்னும் அரையர், பெருமாள் முன்பு என் சினம் தீர்வன் நானே என்பதற்கு கையால் அடிப்பதும் காலால் உதைப்பதுமாக அபிநயம் செய்து காட்டினார்.

அங்கே எழுந்தருளி இருந்த எம்பார் இவ்வாறு செய்தால் கண்ணன் மகிழ்வான் அன்றோ. ஆகையால் சினம் காட்ட வேணுமாகில் கண்ணன் மறுபடியும் வரும்போது கோபிகை அவனுக்கு முகம் கொடுக்காமல், முகத்தைத் திருப்பி வைத்துக் கொண்டால் அவன் வருத்தப்படுவான் என்று தம் கருத்துப்பொருளை ரஸமாகக் காட்டினார்.

பெரியாழ்வார் அருளிய திருமொழியில் (2–1–1) கண்ணன் ஆயர் சிறுவர்களோடு அப்பூச்சி காட்டி விளையாடுவதை *''மெய்ச்சூது.....அத்தூதன் அப்பூச்சி''* காட்டுகின்றான் என்பதற்குச்சேர உய்ந்த பிள்ளை என்னும் அரையர், அத்தூதன் என்பதற்கு எதிரே இருக்கும் நம்பெருமாளைக் காட்டியும், அப்பூச்சி காட்டுகின்றான் என்பதற்குக் கண்ணிமையை மடக்கி அபிநயம் செய்தும் காட்டினார்.

அந்த கோஷ்டியில் ராமாநுஜரும் எழுந்தருளி இருந்தார். அவருக்குப் பின்னே எம்பார் முதலானோரும் இருந்தனர். அப்போது எம்பார், அரையர் மட்டும் புரிந்து கொள்ளும் வகையில் தம்முடைய கைகளைத் தோளோடு சேர்த்து வைத்துச் சங்கு சக்கரங்களை ஏந்துவது போலக் காண்பித்தார். இதனை உணர்ந்த உய்ந்த பிள்ளை, மறுபடியும் எம்பார் காட்டியபடி அபிநயம் செய்தார். அப்போது இதனை வரவேற்று ராமாநுஜர் திரும்பிப்பார்த்து "கோவிந்தப்பெருமாளே நீர் இங்கே தான் இருந்தீரோ?" என்று பிரஸித்தியாக அருளியது காண்க.

ஆண்டாள் கண்ணனை தான் மணம் புணர்வதாகக் கனாக் கண்டதைத் தன் தோழியிடம், *''கைத்தலம் பற்றக்கனாக்கண்டேன் தோழீ''* (நாச்சியார் திருமொழி 6–6) என்கிறாள். இந்த இடத்தில் ஸீதை அனுமனிடம் கூறிய வார்த்தையைக் காட்டி அங்கு வந்த ஸந்தேகத்துக்கு எம்பார் விடை அளித்த ஸம்வாதத்தைப் பெரியவாச்சான்பிள்ளை உரையில் காணலாம். அதாவது *''ந ப்ரமாணீக்ருத: பாணி : பால்யே பாலேந பீடித :''* (யு.கா.119–16) என்கிறபடியே இராமர் சிறுவராய் இருந்தபோது என்னைக் கைப்பிடித்ததையும் மறந்தாரோ என்று இராமனிடம் கேட்கிறாள். இதில் பாணிக்ரஹணம் என்று சொல்லாமல் "பீடித:" என்று கை அழுத்திப்பற்றப் பட்டது என்று கூறியதன் காரணம் என்ன என்று எம்பாரைக்கேட்க, அவர் நம்மாழ்வார் அருளிய படியே *''அங்கண்ணன் உண்ட என் ஆருயிர்க் கோதிது''* (திருவா.9–6–6) என்று எம்பெருமானாலே அநுபவிக்கப்பட்டு இந்த ஆத்மாவானது கோதானது என்று சொன்னபடியே இராமன் என் கையைப்பிடித்த பிடியிலே தனக்கேயாம்படி அழுத்திப்பிடித்ததை இந்த பதம் சொல்லுகிறது என்று சுவைபட உரைப்பர்.

*எம்பார் வாழித்திருநாம உரை தொடரும்...*

**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.**

**பக்தர்களுக்கு விண்ணப்பம்**

திருமலையில் திருமுடிக்காணிக்கையைச் செலுத்துவது பாரம்பரியமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகின்ற ஒரு நேர்த்தி கடனாகும். திருமலையில் தலைமுடிக் காணிக்கைச் செலுத்துவதற்கு எவ்விதமான கட்டணத்தையும் தி.தி.தே. பெறுவதில்லை. ஆகையால் பக்தர்கள் தலைமுடிக் காணிக்கையைச் செலுத்தும்போது முடி இறக்குபவர்கள் பணம் கேட்டால் அவர்களின் விவரங்களை டோல்ப்ரீ எண். **1800-425-4141** க்குத் தெரிவியுங்கள்.

– செயலாட்சித் தலைவர்



# அக்டோபர் 2025
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

தொழில் துறையில் செலவினம் அதிகமாகும். உத்தியோகத்தில் வேலை பளு, இடமாற்றம் உண்டு. சகோதரர்களுக்கு நன்மையுண்டு. மனைவி ஆரோக்யத்தில் அக்கறை தேவை. கூட்டு வியாபாரத்தில் குழப்பம் உண்டாகும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. தொழில் துறையில் புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிட்டும். தெய்வ தரிசனம் கிட்டும்.

**ரிஷபம்**

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். தொழிலில் வளர்ச்சி, தனலாபம் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். பெற்றோர் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மாணவர்களின் கல்விக்காக அதிக செலவுகள் ஆகும். வேலைவாய்ப்புக் கிட்டும். ஆரோக்கியத்தில் நண்பர்கள், உறவினர்களால் நன்மையுண்டு. தெய்வ அருளால் நினைத்ததைச் சாதிக்கும் மாதமிது.

**மிதுனம்**

தொழில் துறையில் புதிய முயற்சிகள் செய்யலாம். அலைச்சல் அதிகமானாலும் அதற்குரிய வருமானம் கிட்டும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிட்டும். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். குழந்தை பாக்கியம் கிட்டும். புதிய மனிதர்களின் நட்பு கிட்டும். கணவன்-மனைவிக்குள் இருந்த பிரச்சனைகள் தீரும். பலவிதங்களில் ஏற்றத்தைத் தரும் அதிர்ஷ்டமான மாதமிது.

**கடகம்**

தொழிலில் முன்னேற்றம் உண்டு. பேச்சில் விவாதத்தைத் தவிர்க்கவும். பெற்றோர் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மனைவி, குழந்தைகளால் அனுகூலம் உண்டு. நண்பர்கள்-உறவினர்களால் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டுப் பின் சரியாகும். சகோதரர்களுக்கானச் செலவினங்கள் அதிகமாகும். மிகுந்த எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதமிது.

**சிம்மம்**

குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். மனைவி மற்றும் தங்களின் ஆரோக்கியத்தில் மற்றும் பட்டாசு வெடிக்கும் போதும் எச்சரிக்கை தேவை. கூட்டு வியாபாரத்தில் கருத்து வேற்றுமை உருவாகும். குழந்தைகளால் முன்னேற்றம், சந்தோஷம் உண்டு. பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சனை தீரும். சகோதரர்களுக்கு நன்மையுண்டு. வேளைப்பளு அதிகரித்து,சிரமத்துடன் முன்னேறும் மாதமிது.

**கன்னி**

தொழிலில் நல்ல மாற்றங்கள் உருவாகும். விவாதங்களைத் தவிர்த்து, பேச்சில் எச்சரிக்கை தேவை. கூட்டாளிக்குள் குழப்பம் இருந்தாலும் நண்பர்கள், உறவினர்கள் உதவுவர். வேலைப்பளு அதிகரித்தாலும் வேறு வேலை கிடைக்கும் வரை இருக்கின்ற வேலையை விடாதீர். பழைய பாக்கிகள் வசூலாகும். புதிய முதலீடுகள் செய்யும் போது எச்சரிக்கை தேவை. நன்மையும் தீமையும் கலந்த மாதமிது.

**துலாம்**

செலவினங்கள் அதிகமாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழில் அலைச்சலால் தூக்கமின்மை உண்டு. குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. யாத்திரைகளால் நல்ல பலன் உண்டு. வரவும் செலவும் சரியாக இருக்கும். தொலைதூரத்தில் வேலைவாய்ப்புக் கிட்டும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தொழில் போட்டியில் வெற்றி பெறும் மாதமிது.

**விருச்சிகம்**

தொழிலில் செலவினங்கள் அதிகமானாலும் அதற்குரிய வரவு கிட்டும். பண விஷயத்தில் பிரச்சனைகள் தீரும். குழந்தைகள் படிப்பு செலவுகள் அதிகமாகும். கடன் பரிவர்த்தனையைத் தவிர்க்கவும். மருத்துவச் செலவுகள் அதிகரித்தாலும் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. கூட்டமான இடங்களைத் தவிர்க்கவும். மிக்க எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதமிது.

**தனுசு**

பூர்வீகச்சொத்துப் பிரச்சனைகள் தீரும். திருமணம் கைகூடும். தாய் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழிலில் நல்ல லாபம் கிட்டும். தொழில் துறையில் புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். புதிதாக வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நல்ல யோகமான மாதமிது.

**மகரம்**

பண விஷயத்தில் பிரச்சனைகள் தீரும். எதிரிகளை வெல்லும் பரிபூரண ஆற்றலைப் பெறுவீர். தொழிலில் அலைச்சல் இருந்தாலும் வளர்ச்சி கூடவே இருக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. கணவன்-மனைவி பிரச்சனை தீரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல பலன்கள் கிட்டும். பிரச்சனையிலிருந்து விடுபடும் மாதமிது.

**கும்பம்**

தொழிலில் நல்ல முன்னேற்றமும், வெளிநாடு செல்லும் யோகமும் உண்டு. மனைவி ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. குடும்பத்திற்காக கடன் வாங்கும் சூழல் உண்டு. பெற்றோர் மற்றும் தங்கள் ஆரோக்கியத்தில் எச்சரிக்கை தேவை. குழந்தைகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நினைத்ததை சாதிக்கும் மாதமிது.

**மீனம்**

தொழிலில் இருந்த பிரச்சனை தீரும். புதிய முயற்சிகளில் வெற்றிக் கிட்டும். கூட்டு வியாபாரத்தில், மனைவி ஆரோக்கியத்தில் எச்சரிக்கை தேவை. வேலைப்பளு காரணமாக உடல் வலி உண்டாகும். ஞாபக மறதி உண்டு. அக்கறையுடன் படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறலாம். கடும் முயற்சியால் திருமணம் கைக்கூடும். பிரச்சனைகளிலிருந்து விடுபட்டு முன்னேறும் மாதமிது.

நீதிக்கதை



# அறையை நிரப்புவது யார்?



ஒருமுறை ஆன்மீக குரு ஒருவர் தமது இரண்டு சீடர்களை அழைத்தார். சீடர்களே! நான் உங்கள் இருவருக்கும் தலா பத்தாயிரம் பொற்காசுகள் தருகிறேன். அதனைக் கொண்டு நீங்கள் இந்த அறையை நிரப்ப வேண்டும் என்று கட்டளையிட்டார். உடனே, சீடர்கள் இருவரும் தங்களது குருவின் கட்டளையை ஏற்று பொற்காசுகளைப் பெற்றுக் கொண்டு அதனைச் செயல்படுத்தத் தொடங்கினர்.

இரண்டு நாட்களுக்குப் பின்னர் திரும்பிய முதல் சீடன் குருவிடம், “குருவே, எவ்வளவு பொருட்கள் வாங்கி நிரப்பினாலும் என்னால் இந்த அறையை நிரப்பவே முடியவில்லை. எனவே, எனக்கு மேலும் கொஞ்சம் பொற்காசுகள் தாருங்கள்” என்று வேண்டினான். குருவும் அவ்வாறே வழங்கினார்.

மீண்டும் மீண்டும் திரும்பிவந்த சீடன் அறையை நிரப்ப முடியவில்லை என்று கூறி, மேன்மேலும் பொற்காசுகளை வாங்கி, ஓடியாடி பொருட்களைச் சேகரித்து அறையை நிரப்ப முயன்றான். என்னதான் முயன்றாலும் அவனால் அறையை நிரப்ப முடியவில்லை என்பதால், அவன் நிம்மதியை இழந்து தொடர்ந்து அலைந்து கொண்டிருந்தான். அதனால், குருவும் அவன்மீது அதிருப்தியடைந்தார்.

அப்போது அங்கு வந்த இரண்டாவது சீடன், “குருவே, நான் அறையை நிரப்பி விட்டேன். பத்து பொற்காசுகள் மட்டுமே செலவாகியுள்ளது” என்றுகூறி, தன்னிடம் மீதமுள்ள 9,990 பொற்காசுகளை குருவிடம் திருப்பிக் கொடுத்துவிட்டான்.

இதனால் ஆச்சரியமடைந்த குரு, “உன்னால் மட்டும் எப்படி பத்து பொற்காசுகளில் அறையை நிரப்ப முடிந்தது?” என்று வினவினார். அதற்கு சீடன் பதிலளித்தான், “குருவே, நான் பத்து பொற்காசுகளுக்கு ஊதுவத்தி வாங்கி வந்தேன். அதனைக் கொளுத்தி பகவானுக்கு அர்ப்பணித்ததன் மூலம் அறை முழுவதும் நறுமணத்தால் நிரம்பிவிட்டது” என்றான்.

இவ்வாறாக, குருவின் உபதேசத்தை முழுமையாக கிரகித்திருந்த சீடனால், அவர் மிகுந்த ஆனந்தத்தை அடைந்தார். முதல் சீடனைப் போல, வாரம் முழுவதும் வெவ்வேறு வேலைகளுக்காக ஓடியாடி திரியும் நாம், நம்மையும் மற்றவர்களையும் திருப்திப்படுத்த முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றோம்.


நீதி : குருவை எளிதாக திருப்திப்படுத்திய இரண்டாவது சீடனைப் போல நமது வாழ்க்கையையும் பகவானுக்கு அர்ப்பணித்தால் எளிதாக இன்பத்தை அடையலாம்!

**– திரு.இரா. அருண்குமார், புதுச்சேரி.**






எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்




படத்தைப் பாருங்கள் !







வண்ணம் தீட்டுங்கள் !!

தீபாவளி என்றாலே வானவேடிக்கை, பட்டாசு, இனிப்பு, புத்தாடை என்று சிறார்கள் இன்புற்று இருப்பர். கீழே உள்ள இந்தச் சிறார்களுக்கு பட்டாசுகள் வேண்டுமாம். அதற்கு பாதையைக் காட்டி உதவிடுங்கள்!!

பாதையைக் கண்டு பிடி!





இங்கு காணப்படும் பறவைக்கூட்டத்தில் எத்தனை பறவைகள் இடப்புறமாகவும், எத்தனை பறவைகள் வலப்புறமாகவும் பறக்கின்றது என கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

விடை :

வலப்புறம் : 12 இடப்புறம் : 11

வினாடி வினா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்–39

## ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!

1. திருவேங்கட மாலை எனும் நூலை இயற்றியவர் ............................................
2. திருக்கடல்மல்லையில் அவதரித்த ஆழ்வார் ............................................
3. முருகனை குறிஞ்சித்திணை தெய்வம் எனக் கூறும் நூல் ............................................
4. விளக்கொளிப் பெருமாள் அருள்பாலிக்கும் திவ்ய தேசம் எங்குள்ளது ............................................
5. எம்பார் அவதரித்த மாதம், நடசத்திரம் ............................................
6. சுத்தானந்தம் விமானத்தின் கீழ் அருள்புரியும் எம்பெருமான் ............................................
7. வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன் என்றவர்............................................
8. துலா மாதம் என்றழைக்கப்படும் தமிழ் மாதம் ............................................
9. சரணாகதி தீபிகை எனும் ஸ்தோத்திரம் அருளியவர் ............................................
10. பெரியாழ்வார் தம் பாசுரத்தில் குறிப்பிட்டுள்ள மலர்களின் எண்ணிக்கை ............................................
11. வியாக்யான சக்ரவர்த்தி எனப் போற்றப்படுபவர் ............................................
12. கோனேரி வாழும் குருகாய்ப் பிறக்க ஆசைப்பட்டவர் ............................................
13. முருகனுக்கு உகந்தது கடம்பமாலை எனக்கூறும் காப்பியம் ............................................
14. பேயாழ்வார் அவதரித்த மாதம், நட்சத்திரம் ............................................
15. திருவேங்கடவனை எழில் கொள் சோதி எனப் போற்றுபவர் ............................................

### போட்டிக்கான நிபந்தனைகள்



- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்தியக் குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்தப் பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.10.2025.

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

சக்கரத்தைச் சுற்றுங்கள்!

அழகென்று சொல்லுக்கு பொருள்...

பார்வதிதேவி முருகனுக்கு வேல் வழங்கிய இடம்...

கடல் அலைகளின் ஓசையில் சூரனை வதைத்த இடம்...

சினம் தணிந்து அமர்ந்த இடம்...

சிவனின் குருநாதனாக அமர்ந்த இடம்...

ஆண்டியாய் அருளுமிடம்...

கல்யாண தலமான குகைக்கோயில் இருக்குமிடம்...

பழம் முற்றிய சோலைகள் நிறைந்த இடம்...



அதே வண்ணக் கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!


**விடைகள்**

1) முருகன், 2)சிக்கல், 3) திருச்செந்தூர் , 4) திருத்தணிகை,
5) சுவாமிமலை, 6) பழனி மலை, 7) திருப்பரங்குன்றம், 8) பழமுதிர்சோலை.

## கணித விளையாட்டு

இங்கு புத்தகத்தில் உள்ள கணித வினாவிற்குப் பொருத்தமான எழுதுகோல்களின் எண்ணிக்கை உள்ள விடையைப் பொருத்துக

| | | |
|---|---|---|
| | 1: 17+4 | 2: 36-16 |
| 3: 33-11 | 4: 26+4 | 5: 13+8 |




1) vi, 2) ii, 3) iii, 4) iv, 5) i

**விடைகள்**



குழந்தைகளே!
என்னை காட்டிற்கே அரசன் என்று கூறுவர்.
பலசாலியான நான் கர்ஜித்தால் அனைவரும் அஞ்சுவர்.
கோயில் மதில் மேல், தேர் அலங்காரத்தில், கோயில் சிற்பங்களில் எங்கும் என்னை காணலாம். கம்பீரமான நடைக்கும் என்னையே ஒப்பிட்டு கூறுவார்கள்.
திருமால் ஐந்தாவது அவதாரத்தில் என் திருமுகத்தை கொண்டு நரசிம்மராக அவதரித்தார்.
எல்லா திருக்கோயில்களிலும் என் மீது தெய்வத் திருமேனிகளை ஏழச் செய்து திருவீதி உலா வருவர்.

மழலைச் செல்வங்களே! மேலே குறிப்பிட்டது மற்றும் மேலே உள்ள சித்திரத்தின் அடிப்படையில் நான் யார் என்று கண்டுபிடியுங்கள் பார்ப்போம்...


விடை : சிங்கம்

சித்திரக் கதை

# குருவினை கௌரவிப்போம்!


கதை மூலம் : மொலகா. உத்தர பல்குனி.

சித்திரம் :டாக்டர் ஸ்ரீதரன் கௌலிகி.


12
ஒருநாள் ஸர்பமாக நகுசன் இருக்க, அவ்வழியாக வந்த தர்மராஜாவின் தம்பி பீமனை ஸர்பம் இறுக்கிச் சுற்றிப் பிடித்தபோது...
13
ஏ ஸர்பமே! யார் நீ? என்னை ஏன் இறுக்கிச் சுற்றிக் கொண்டாய்? என்னை விட்டு விடு.
14
நான் நகுச சக்ரவர்த்தி! அகத்திய முனிவரின் சாபத்தினால் இவ்வாறு ஆகிவிட்டேன். என் வினாக்களுக்குப் பதில் அளித்தால் உன்னை விட்டு விடுகிறேன்.
15
அப்பொழுது தன் தம்பியைத் தேடி தர்ம ராஜா அங்கு வந்து என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொண்டார். பின்னர் ஸர்பத்திடம் தான் வினாக்களுக்கு விடையளிப்பதாகக் கூறினார். அப்போது ஸர்பம்...
16
அப்படியா! சில வினாக்களைக் கேட்கிறேன் பதிலைக் கூறு! பிராம்மணன் என்பவர் யார்?
17
சத்யம், தானம், தயை, நன்னடத்தை, அஹிம்சை, புலன் கட்டுப்பாடு போன்ற குணங்களைக் கொண்டவனே பிராம்மணன்.
18
பிராம்மணன் முக்கியமாக என்ன தெரிந்து கொள்ள வேண்டும்?
19
துன்பத்திற்கு அப்பாற்பட்ட பரப்பிரம்மத்தைப் பற்றி தெரிந்து கொண்டிருப்பவனே பிராம்மணன் ஆவான்.
20
தர்ம ராஜா! சபாஷ் என் வினாக்களுக்குச் சரியான பதிலளித்தாய்!
21
நான் சுய வடிவத்தைப் பெற்றேன். உமக்கு என்றும் வெற்றியே! உண்டாகட்டும்
K. Sreedharan
22
அப்படியே அரசே! நன்றி!
நீதி : குருவின் சாபத்திற்கு ஆளாகாமல் குருவை கௌரவிப்போம்!

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
(பெரிய எழுத்துக்களில்) _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _
_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/– ☐ ரூ.2,400/–(12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசிது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

## தி.தி.தே. கால்செண்டர்

**உங்களுக்காக**

## 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடைத் திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-
2233333
2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/– ஆயுள்சந்தா ரூ.2,400/– (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.–யை "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.

Printed by Sri R.V. Vijayakumar, B.A., B.Ed., and Published by Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D. P.G.Dip. in JMC. on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.,P.G.Dip. in JMC.



15-08-2025 அன்று இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்திய தேசியக் கொடியை ஏற்றி வீரவணக்கம் செய்யும் தி.தி.தே.பொறுப்பாண்மைக் குழுத்தலைவர் திரு. பி.ஆர். நாயுடு அவர்கள், அன்றைய செயலாட்சித் தலைவர், கூடுதல் செயலாட்சித்தலைவர் மற்றும் முக்கிய அதிகாரிகள்



16-08-2025 அன்று சென்னை, தியாகராய நகரில் அமைந்துள்ள தி.தி.தே. ஆலயத்திற்குச் சென்று ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியைத் தரிசனம் செய்த தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. பி.ஆர். நாயுடு அவர்கள்



16-08-2025 அன்று ஆடிக்கிருத்திகையை முன்னிட்டு திருத்தணி அருள்மிகு சுப்ரமண்ய ஸ்வாமிக்கு தி.தி.தே. சார்பில் பட்டு வஸ்திரங்களை சமர்ப்பிக்கும் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. பி.ஆர். நாயுடு அவர்கள்




16-08-2025 அன்று கோகுலாஷ்டமியை முன்னிட்டு திருப்பதி எஸ்.வி. கோசாலையில் உள்ள கோமாதாவிற்கு பசும்புல்லை வழங்கும் அன்றைய தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. ஜெ. சியாமளா ராவ், ஐ.ஏ.எஸ். அவர்கள்





08-08-2025 அன்று திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் ஆலயத்தில் நடைபெற்ற வரலக்ஷ்மி விரத நிகழ்ச்சியில் பங்கு கொண்ட அன்றைய தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. ஜெ. சியாமளா ராவ், ஐ.ஏ.எஸ். தம்பதியினர், தி.தி.தே. இணைச் செயலாட்சித்தலைவர் திரு. வி.வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். தம்பதியினர், பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்கள் திரு. ஜி. பானுபிரகாஷ் ரெட்டி அவர்கள், டாக்டர் பனப்பாக்க லக்ஷ்மி அவர்கள், பதவி அடிப்படையில் உறுப்பினர் திரு. திவாகர் ரெட்டி அவர்கள்

**SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-09-2025 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 1st of Every month.**



**27-10-2025**

**ஸ்ரீமணவாள மாமுனிகள் சாத்துமுறை**